# தினபூமி

thinaboomi.com

பூமி: 32 சுற்று: 66 மாசி 01

Regd. No.TRY/050/2023-2025 RNI Regn. No.61511/94

திருச்சி, வெள்ளி, பிப்ரவரி 13, 2026

சென்னை · மதுரை · திருச்சி · கோவை · நெல்லை · சேலம் · வேலூர் · புதுச்சேரி

பக்கம் 8 ₹3.00





**ரஷ்யாவில் வாட்ஸ்-ஆப், டெலிகிராம் திடீர் நீக்கம்: சுமார் 10 கோடி பேர் அவதி**

....2-ம் பக்கம்

**தேர்தலில் போட்டியிட தடை: ராகுலை பதவி நீக்கக்கோரி தனிநபர் தீர்மானம் தாக்கல்**

...3-ம் பக்கம்

**ஐ.பி.எஸ். அதிகாரிக்கு எதிரான வழக்கு: ரூ.10 லட்சம் செலுத்த தோனிக்கு சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவு**

....6-ம் பக்கம்






முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று, தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை சார்பில் சென்னையில் நடைபெற்ற புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் செயலாக்க மாநாட்டில் 36,968 கோடி ரூபாய் முதலீட்டில் 60,823 நபர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கிடும் வகையில் 71 புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டி, 31,934 கோடி ரூபாய் முதலீட்டில் 82,664 நபர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கிடும் வகையில் 52 முடிவுற்ற திட்டங்களைத்தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் டி.ஆர்.பி. ராஜா, தலைமைச் செயலாளர் முருகானந்தம், தொழில் நிறுவனங்களின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

### புதிதாக 60,823 பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும் வகையில்

# தமிழகத்தில் 36,968 கோடி ரூபாய் முதலீட்டில் 71 புதிய திட்டங்கள்

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அடிக்கல் - ரூ. 31,934 கோடி முதலீட்டில் முடிவுற்ற 52 திட்டப்பணிகளும் திறப்பு

சென்னை, பிப். 13-

**தமிழகத்தில் புதிதாக 82,664 நபர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கிடும் வகையில் ரூ.31,934 கோடி முதலீட்டில் முடிவுற்ற 52 திட்டங்களை முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று துவக்கி வைத்தார். மேலும், ரூ. 36,968 கோடி முதலீட்டில் 60,823 நபர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கிடும் வகையில் 71 புதிய திட்டங்களுக்கும் அவர் அடிக்கல் நாட்டினார்.**

**செயலாக்க மாநாடு...**

தி.மு.க. ஆட்சியில் கொண்டுவரப்பட்ட திட்டங்கள், முதலீடுகள் தொடர்பான செயலாக்க மாநாடு தொடங்கியது. சென்னை ஐடிசி கிராண்ட் சோழா ஓட்டலில் கெயிட்டன்ஸ் தமிழ்நாடு சார்பில் நடைபெறும் கன்வர்ஷன் கான்கிளேவ் 2026 மாநாட்டை முதல்வர் மு.க. ஸ்டாலின் தொடங்கி வைத்தார். தி.மு.க. ஆட்சியில் தொழில் முதலீட்டு ஒப்பந்தங்கள் செயல்பாட்டுக்கு வந்தது தொடர்பாக இந்த மாநாடு நடைபெறுகிறது.

**வேலைவாய்ப்பு...**

இது தொடர்பாக தமிழக அரசு வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவித்திருப்பதாவது., தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை சார்பில் சென்னையில் நடைபெற்ற புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் செயலாக்க மாநாட்டில், ரூ. 36,968 கோடி முதலீட்டில் 60,823 நபர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கிடும் வகையில் 71 புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டி, ரூ. 31,934 கோடி முதலீட்டில் 82,664 நபர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கிடும் வகையில் 52 முடிவுற்ற திட்டங்களை முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று தொடங்கி வைத்தார்.

**இரண்டு ஒப்பந்தங்கள்**

மேலும், ரூ. 5,000 கோடி உறுதியளிக்கப்பட்ட முதலீடு மற்றும் 5000 நபர்களுக்கு உறுதியளிக்கப்பட்ட வேலைவாய்ப்பு என்ற வகையில், 2 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டன. நேற்று, அடிக்கல் நாட்டப்பட்ட மற்றும் தொடங்கப்பட்ட திட்டங்கள், ராமநாதபுரம், தூத்துக்குடி, திருச்சி,

(கடைசி பக்கம் பார்க்க)

# மாநில நலனை முன்னிறுத்தியே நாங்கள் அரசியல் செய்கிறோம்

## ஒப்பந்தங்கள் செயலாக்க மாநாட்டில் முதல்வர் மு.க.ஸ்டாலின் பேச்சு

சென்னை, பிப். 13-

**இந்தியாவின் உற்பத்தி வளர்ச்சியை விட தமிழ்நாட்டின உற்பத்தி வளர்ச்சி 3 மடங்கு அதிகம் என்றும், 5 ஆண்டுகளில் 12.37 லட்சம் கோடி முதலீடுகள் ஈர்க்கப்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ள முதல்வர் மு.க.ஸ்டாலின், மாநில நலனை முன்னிறுத்தியே அரசியல் செய்கிறோம் என்றும் அவர் சென்னையில் நடைபெற்ற புரிந்துண்ரவு ஒப்பந்தங்கள் செயலாக்க மாநாட்டில் தெரிவித்துள்ளார்.**

**கடுமையான உழைப்பு**

தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை சார்பில் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் செயலாக்க மாநாடு நேற்று (பிப். 12) சென்னையில் நடைபெற்றது. இந்த மாநாட்டில் முதல்வர் ஸ்டாலின் பங்கேற்று பேசியதாவது: தொழில்துறை அமைச்சர் இங்கே சொன்ன ஒவ்வொரு டேடா-வும், எங்களை விமர்சனம் செய்தவர்களுக்கான பதில் அதுதான். இங்கே அவர் சொன்ன ஒவ்வொரு நம்பரும், எங்கள் குழுவுக்கான ஐந்து வருட கடுமையான உழைப்பிற்கான நம்பர். தொழில்துறையில் நாங்கள் செய்திருக்கக்கூடிய ரெக்கார்டை அடித்துச் சொல்கிறேன் அடுத்து, நாங்கள் வந்துதான் பீட் செய்யப் போகிறோம். இது உறுதி.

**மக்களிடம் சேர்க்க...**

இன்றைக்கு இந்த மாநாட்டில் மட்டும் 52 கம்பெனிகளுடைய திறப்பு விழா. 71 கம்பெனிகளுக்கு அடிக்கல் நாட்டு விழா. 2 புதிய கம்பெனிகளின் புரிந்துணர்வு ஒப்பந்தம். என சாதனை சொல்கின்ற மாநாடாக இது நடைபெறுகிறது. கடந்த 2021 முதல் நாங்கள் செய்த பணிகளை எல்லாம் மேடை போட்டு சொல்லியிருக்கிறோம். இங்கே வந்திருக்கக்கூடிய ஊடக நண்பர்கள் அனைவரையும் நான் கேட்டுக் கொள்ள அன்போடு விரும்புவது, இவைகளை எல்லாம் முழுமையாக நீங்கள் மக்களிடம் கொண்டு சென்று சேர்க்க வேண்டும். ஏனென்றால், இந்தியாவிலேயே இது போன்ற ஒரு மாநாடு எங்கும் நடந்ததில்லை.

**3 மடங்கு அதிகமாக...**

> **தொழில் துறையினருக்கு நம்பிக்கை அளிக்கும் மாநிலமாக தமிழ்நாடு திகழ்கிறது. தொழில் வளர்ச்சியில் தமிழ்நாடு இப்போது முன்னணியில் உள்ளது. முதலீட்டாளர்களின் முதல் முகவரியாக தமிழ்நாட்டை மாற்றி உள்ளோம். அனைத்து மாவட்டங்களும் வளர்ச்சியடைய கவனமாக செயல்பட்டு வருகிறோம்.**
>
> **- முதல்வர் மு.க.ஸ்டாலின்**

இன்றைக்கு தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சி, நாட்டின் சராசரியைவிட அதிகம். தமிழ்நாட்டின் வளர்ச்சி 11.19 சதவிகிதம். இன்னும் குறிப்பாக சொல்ல வேண்டும் என்றால், கடந்த ஆண்டு, இந்தியாவின் உற்பத்தித் துறை வளர்ச்சி, 4.5 சதவிகிதம். அதேசமயம், தமிழ்நாட்டின் வளர்ச்சி அதைவிட மூன்று மடங்கு அதிகமாக, 14.7 சதவிகிதம் வளர்ச்சி அடைந்திருக்கிறது. இந்தியாவின் எலக்ட்ரானிக்ஸ் ஏற்றுமதியில், தமிழ்நாட்டின் பங்கு மட்டும் 41 விழுக்காடு. இதை மேலும் அதிகரிக்கக்கூடிய வகையில், இன்னும் பல செயல் திட்டங்களை செயல்படுத்திக் கொண்டிருக்கிறோம். மின்னணு உதிரிபாகங்கள் உற்பத்தி திட்டத்தில், மத்திய அரசு தருகின்ற அனுமதிகளில் கிட்டத்தட்ட 60 சதவிகிதம் தமிழ்நாட்டின் முதலீடுகளுக்கானது.

**ஐந்து ஆண்டுகளில்...**

கடந்த 5 ஆண்டுகளில் ஒப்பந்தம் மேற்கொண்ட 1,179 திட்டங்களில் 867 ஒப்பந்தங்கள் செயல்பாட்டிற்கு வந்துள்ளது. 36.52 லட்சம் பேருக்கு வேலைவாய்ப்பு உறுதி செய்யப்பட்டுள்ளது. 5 ஆண்டுகளில் 12.37 லட்சம் கோடி முதலீடுகள் ஈர்க்கப்பட்டுள்ளது. தொழில் துறையினருக்கு நம்பிக்கை அளிக்கும் மாநிலமாக தமிழ்நாடு திகழ்கிறது. தொழில் வளர்ச்சியில் தமிழ்நாடு இப்போது முன்னணியில் உள்ளது. முதலீட்டாளர்களின் முதல் முகவரியாக தமிழ்நாட்டை மாற்றி உள்ளோம். அனைத்து மாவட்டங்களும் வளர்ச்சியடைய கவனமாக செயல்பட்டு வருகிறோம்.

**உற்பத்தி மையமாக...**

இப்போது வளர்ந்து வருகின்ற புதிய துறைகளான செமிகண்டக்டர் – ஏஐ டீப் டெக் போன்றவற்றிலும், தமிழ்நாடு தன்னுடைய தடத்தை வலிமையாக பதித்துக் கொண்டு வருகிறது. முக்கியமாக, முன்னணி நிறுவனங்களின் ஒன்றாக இருக்கக் கூடிய ஆர் & டி மையங்களை அமைப்பது, சிப் வடிவமைப்பு, செமிகண்டக்டர் இயந்திர உற்பத்தியை மேம்படுத்துவது இது போன்ற முயற்சிகளை வெற்றிகரமாக முன்னெடுத்துக் கொண்டு வருகிறோம். சூலூர் மற்றும் பல்லடம் பகுதிகளில், செமிகண்டக்டர் இயந்திர உற்பத்தி பூங்காக்களை உருவாக்கியிருக்கிறோம். இதன் மூலமாக, தமிழ்நாடு உலகளாவிய செமிகண்டக்டர் உற்பத்தி மையமாக உயரக்கூடும். எந்த செக்டார் எடுத்தாலும், தமிழ்நாடுதான் முன்னணி மாநிலம்.

**மாநில நலனே முக்கியம்**

இங்கே இருக்கின்ற பல முதலீட்டாளர்களும் தமிழ்நாட்டில், தாங்கள் பெற்ற பாசிட்டிவ் அனுபவங்களை, மற்ற முதலீட்டாளர்களிடம் கூட நீங்கள் ஷேர் செய்ததால் தான், எங்களுடைய வெற்றி இன்றைக்கு சாத்தியமாகியிருக்கிறது. அதற்காக, இந்த நேரத்தில், அவர்களுக்கெல்லாம் என்னுடைய நன்றியை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். மொத்தத்தில், உங்களுடைய வளர்ச்சி தான், எங்களுடைய மகிழ்ச்சி. மாநில நலனை முன்னிறுத்தியே நாங்கள் அரசியல் செய்கிறோம்.

**மாம்பாக்கத்தில்..**

குறிப்பாக, இன்றைய (நேற்று) மாநாட்டில், தூத்துக்குடி முதலீட்டாளர்கள் மாநாட்டில் ஒப்பந்தம் போட்ட 'கேனெஸ் டெக்னாலஜீஸ்' நிறுவனத்தின் திட்டத்திற்கு அடிக்கல் நாட்டியிருக்கிறோம். இங்கிலாந்து பயணத்தில், 'அஸ்ட்ரா செனகா' நிறுவனத்தின் 'உலகளாவிய திறன் மைய' விரிவாக்கத்திற்காக ஒப்பந்தமிட்டோம். அது துவக்கி வைக்கப்பட்டிருக்கிறது. ஜெர்மனி நாட்டுப் பயணத்தில், 'நார் ப்ரெம்சே' நிறுவனத்திடம் போட்ட ஒப்பந்தத்திற்கான உற்பத்தி ஆலைக்கு - சிப்காட் மாம்பாக்கத்தில் அடிக்கல் நாட்டியிருக்கிறோம். டாபர் நிறுவனத்துடன் முதல் தென்னிந்திய ஆலைக்கு திண்டிவனத்தில் அடிக்கல் நாட்டியிருக்கிறோம்.

**கோவை மாநாட்டில்...**

2024 உலக முதலீட்டாளர் மாநாட்டில் போட்ட ஒப்பந்தத்தின்படி, ராமநாதபுரம் மாவட்டம் வாலிநோக்கத்தில், 'டாடா சால்ட்' நிறுவனத்திற்கு அடிக்கல் நாட்டியிருக்கிறோம். கோவை முதலீட்டாளர் மாநாட்டில், ஜான்சன் எலக்ட்ரிக் நிறுவனத்திடம் போட்ட ஒப்பந்தத்திற்கு, ராணிப்பேட்டை மாவட்டம் சிப்காட் பனப்பாக்கத்தில் அடிக்கல் நாட்டியிருக்கிறேன். இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவித்தார்.

### இந்தியாவிலேயே முதன் முறையாக

# கீழடியில் ரூ.22 கோடி செலவில் திறந்தவெளி அருங்காட்சியகம்

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இன்று திறந்து வைக்கிறார்

மானாமதுரை, பிப். 13-

**இந்தியாவிலேயே முதன் முறையாக கீழடியில் ரூ.22 கோடி செலவில் திறந்தவெளி அருங்காட்சியகத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் இன்று திறந்து வைக்கிறார்.**

சிவகங்கை மாவட்டம் கீழடியில் மத்திய, மாநில தொல்லியல் துறை சார்பில் அகழாய்வு நடந்த இடங்கள் திறந்த வெளி அருங்காட்சியகமாக மாற்றப்படும் என தமிழக அரசு அறிவித்து, கடந்தாண்டு ஜனவரியில் ரூ.17 கோடியே 80 லட்ச ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்தது.

சுமார் 67 ஆயிரத்து 343 சதுர மீட்டர் பரப்பளவில் இரண்டு அரங்குகளாக காட்சிப்படுத்தும் பணிகள் தொடங்கின. ஏழாம்கட்ட அகழாய்வு நடந்த இடம் ஒரு அரங்கமாகவும், இரண்டு, நான்கு, ஆறாம் கட்ட அகழாய்வு நடந்த இடம் இரண்டாம் அரங்கமாகவும் மாற்றும் பணி நடந்து வந்தது. இதில் முதலாம் அரங்கம் மட்டும் திறப்பு விழாவிற்கு தயாரான நிலையில், இன்று முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்த வெளி அருங்காட்சியகத்தையும் திறந்து வைக்க உள்ளார். இந்தியாவிலேயே முதன் முறையாக கீழடியில் ரூ. 22 கோடி ரூபாய் செலவில் திறந்தவெளி அருங்காட்சியகம் அமைகிறது. பண்டைய கால மக்களின் வாழ்வியல் முறைகள், பணிகள், அணிகலன்கள் உள்ளிட்டவைகளை பொது மக்கள் நேரில் காண உள்ளனர். திறந்த வெளி அருங்காட்சியக பணியின் போது ரூ. 17 கோடியே 80 லட்சம் என திட்டமிடப்பட்டது. செலவீனம் அதிகரித்ததால் தற்போது ரூ. 22 கோடியாக திட்டமதிப்பீடு அதிகரித்துள்ளது.

### மக்களவை சபாநாயகருக்கு எதிரான

# நம்பிக்கையில்லா தீர்மானம் மீது மார்ச் 9-ம் தேதி விவாதம்

புதுடெல்லி, பிப். 13-

**மக்களவை சபாநாயகருக்கு எதிரான நம்பிக்கையில்லா தீர்மானம் மீது மார்ச் 9-ம் தேதி விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்படும் என மக்களவை வட்டாரங்கள் தெரிவித்தன.**

பாராளுமன்ற மக்களவையில் எதிர்க்கட்சிகள் மீது பாகுபாடு காட்டுவதாக சபாநாயகர் ஓம் பிர்லா மீது நம்பிக்கை இல்லா தீர்மானம் கொண்டு வர எதிர்க்கட்சிகள் முடிவு செய்துள்ளன. இதற்காக எதிர்க்கட்சிகளை சேர்ந்த 118 எம்.பி.க்கள் கையெழுத்திட்ட நோட்டீஸ் ஒன்றை காங்கிரஸ் தலைமை கொறடா கொடிக்குன்னில் சுரேஷ் தலைமையில் கூட்டணி கட்சியினர் மக்களவை செயலாளர் உத்பால்சிங் குமாரிடம் அளித்தனர்.

ஆனால் இந்த நோட்டீசில் சில குறைபாடுகள் இருந்தன. குறிப்பாக தேதி தவறாக இருந்ததாக தெரிகிறது. இதை சபாநாயகர் நிராகரித்திருக்க முடியும். எனினும் அந்த குறைகளை சரி செய்து அதன் மீது உடனடி நடவடிக்கை எடுக்குமாறு சபாநாயகர் மக்களவை செயலக அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

அதன்படி சபாநாயகருக்கு எதிரான இந்த நம்பிக்கை இல்லா தீர்மானம், ஒரு மாத இடைவெளிக்குப் பின் பாராளுமன்றம் மீண்டும் கூடும் அடுத்த மாதம் (மார்ச்) 9-ம் தேதியே விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்படும் என மக்களவை வட்டாரங்கள் தெரிவித்தன. முன்னதாக குறைபாடுடன் இருந்த நம்பிக்கை இல்லா தீர்மான நோட்டீசை எதிர்க்கட்சிகள் திரும்பப் பெற்று புதிய நோட்டீஸ் ஒன்றை மக்களவை செயலகத்தில் அளித்தது குறிப்பிடத்தக்கது.

# அமித்ஷா இன்று திருச்சி வருகிறார்

சென்னை, பிப். 13-

**தமிழகம் மற்றும் காரைக்காலில் இரண்டு நாட்கள் சுற்றுப்பயணம் மேற்கொள்ள மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா இன்று (பிப்.13) திருச்சிக்கு வருகிறார். தமிழகத் தேர்தல் நிலவரம் குறித்த முக்கிய ஆலோசனை கூட்டத்தில் பங்கேற்க உள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.**

தனி விமானம் மூலம் இன்று திருச்சி விமான நிலையம் வரும் அவர், அன்றிரவு திருச்சியில் உள்ள நட்சத்திர விடுதியில் ஓய்வெடுத்து விட்டு, நாளை (பிப்.14) திருச்சி விமான நிலையத்தில் இருந்து ஹெலிகாப்டர் மூலம் காரைக்கால் செல்கிறார்.

காரைக்கால் வரிச்சிக்குடி அரசு பாலிடெக்னிக் கல்லூரி வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள ஹெலிபேடில் இறங்கி, கார் மூலம் காரைக்கால் நகராட்சித் திடலுக்கு முற்பகல் சென்று, அங்கு நடைபெறும் பா.ஜ.க. பொதுக்கூட்டத்தில் பங்கேற்கிறார். பொதுக்கூட்டம் முடிந்ததும், மீண்டும் திருச்சி வரும் அவர் விமானம் மூலம் சேலம் செல்கிறார்.

இவர் திருச்சியில் உள்ள 13, 14 ஆகிய தேதிகளில் மத்திய அமைச்சர் பியூஸ் கோயல், இணை அமைச்சர் எல்.முருகன், பா.ஜ.க. தமிழக தலைவர் நயினார் நாகேந்திரன் உள்ளிட்ட முக்கிய பா.ஜ.க. தலைவர்களும் திருச்சியில் முகாமிடுகின்றனர். அப்போது அமித்ஷா தலைமையில் தமிழகத் தேர்தல் நிலவரம் குறித்த முக்கிய ஆலோசனைக் கூட்டமும் நடக்க வாய்ப்புள்ளதாகத் தெரிகிறது.

### தமிழக சட்டமன்ற தேர்தல் முன்னேற்பாடுகள்:

# அனைத்து மாவட்ட தேர்தல் அதிகாரிகளுடன் இன்று துணை தேர்தல் ஆணையர் ஆலோசனை

சென்னை, பிப். 13-

**சட்டமன்ற தேர்தலுக்கான முன்னேற்பாடுகள் குறித்து துணை தேர்தல் ஆணையர் பானு பிரகாஷ் தலைமையிலான குழுவினர், இன்று அனைத்து மாவட்ட தேர்தல் அதிகாரிகளுடன் (கலெக்டர்கள்) துணை தேர்தல் ஆணையர் ஆலோசனை மேற்கொள்கிறார்.**


தமிழகத்தில் நடத்தப்பட இருக்கும் சட்டமன்ற தேர்தலுக்கான முன்னேற்பாடுகள் குறித்து ஆய்வு செய்வதற்காக துணை தேர்தல் ஆணையர் பானு பிரகாஷ் தலைமையிலான அதிகாரிகள் குழுவினர் நேற்று முன்தினம் தமிழகம் வந்தனர். சென்னையில் முகாமிட்டுள்ள இந்த குழுவினர், நேற்று தமிழக தலைமை தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக் மற்றும் அதிகாரிகளுடன் ஆலோசனை மேற்கொண்டனர். மார்ச் முதல் வாரத்தில் தேர்தல் தொடர்பான அறிவிப்பு வெளியாகலாம் என்று எதிர்பார்க்கப்படும் நிலையில், இந்த ஆலோசனை கூட்டம் முக்கியத்துவம் வாய்ந்ததாக பார்க்கப்படுகிறது. தொடர்ந்து இன்று அனைத்து மாவட்ட தேர்தல் அதிகாரிகளுடன் (கலெக்டர்கள்) துணை தேர்தல் ஆணையர் ஆலோசனை மேற்கொள்கிறார்.

**மார்க்கெட் விலை நிலவரம்**

| BSE | NSE |
|---|---|
| -558.72 | -146.65 |
| பாயின்ட் 83,674.92 | பாயின்ட் 25,807.20 |



**தங்கம்** 1 சவரன் ₹1,16,800 · 1 கிராம் ₹14,600



**வெள்ளி** 1 கிலோ ₹300,000 · 1 கிராம் ₹300.00

**டாலர்** ₹90.58

**பெட்ரோல்** ₹100.75 · **டீசல்** ₹92.34

# ரஷ்யாவில் வாட்ஸ்-ஆப், டெலிகிராமுக்கு திடீர் தடை

## சுமார் 10 கோடி மக்கள் அவதி




**மாஸ்கோ, பிப். 13-**

ரஷ்யாவில் வாட்ஸ்-ஆப் நீக்கக்கப்பட்டதால் 10 கோடி பேர் அவதிக்குள்ளாகியிருக்கிறார்கள்.

உள்நாட்டில் தயாரிக்கப்பட்டிருக்கும் செயலிகளை மக்கள் பயன்படுத்தவைக்கும் நோக்கில், வாட்ஸ்ஆப் மற்றும் டெலிகிராம் செயலிகளை ரஷ்ய அரசு நீக்கியிருக்கிறது. ரஷ்யாவில், இணைய தளத்தில் செயலிகளை தங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர அந்நாட்டு அரசு எடுத்திருக்கும் மிக முக்கிய நடவடிக்கையால் கிட்டத்தட்ட 10 கோடி பேர் அவதிக்குள்ளாகியிருக்கிறார்கள் என்று கூறப்படுகிறது.

வாட்ஸ்ஆப் நிறுவனம் தன்னுடைய எக்ஸ் தளத்தில், இன்று ரஷ்ய அரசு, அந்நாட்டில் உள்ள அனைத்து செல்போன்களிலிலும் வாட்ஸ்ஆப்பை நீக்கியிருக்கிறது. அந்நாட்டு மக்கள் உள்நாட்டுத் தயாரிப்பு செயலிகளைப் பயன்படுத்த அழுத்தம் கொடுக்கும் வகையில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும், இதனால் 10 கோடி பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்த நடவடிக்கையால் ரஷ்ய மக்களின் பாதுகாப்பில் குறைபாடுக்கு வழிவகுக்கும் என்று தெரிவித்துள்ளது.பயனர்கள் எங்களுடன் தொடர்பில் இருக்க அனைத்து நடவடிக்கைளையும் மேற்கொள்வோம் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

இது குறித்து டெலிகிராம் நிறுவனம் தெரிவிக்கையில் இது ஒரு நாட்டு அரசின் நடவடிக்கை, நிறுவனத்தின் கொள்கைகளுக்குள் இது வரவில்லை. எங்கள் நிறுவனத்தின் கொள்கை மக்களின் சுதந்திரம், தனியுரிமை. இதில் அழுத்தத்துக்கு இடமில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 2022ஆம் ஆண்டு உக்ரைன் மீதான தாக்குதலின்போது, வெளிநாட்டு தொழில்நுட்ப சேவை நிறுவனங்களுக்கும், ரஷ்ய அரசுக்கும் இடையே ஏற்பட்ட மோதல் போக்கு காரணமாக, ரஷ்ய அரசு, உள்நாட்டில் தயாரிக்கப்படும் செயலிகளுக்கு முக்கியத்துவம் அளித்து, மேக்ஸ் என்ற செயலி உருவாக்கப்பட்டது. ஆனால், இது மக்களை கண்காணிக்க உருவாக்கப்பட்டதாக கடும் விமர்சனம் எழுந்துள்ளது.

பயனர்களின் சாட் தகவல்கள், தனியுரிமை பாதுகாப்புக்குரியது என்று வாட்ஸ்ஆப் கூறி வருகிறது. அந்த தகவல்களை உளவு பார்க்க, ரஷ்ய அரசிடம் தர வாட்ஸ்ஆப் மறுத்துவிட்டதாகவும் கூறப்படுகிறது. எனவே, மக்களை கண்காணிக்க, உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட மேக்ஸ் செயலியை பயன்படுத்த அந்நாட்டு அரசு அறிவுறுத்தி வருகிறது.

# அகமதாபாத் விமான விபத்து: இத்தாலி நாளிதழ் வெளியிட்ட செய்தி அறிக்கையால் பரபரப்பு

**ரோம், பிப். 13-**

அகமதாபாத் விமான விபத்து ஒரு தொழில்நுட்பக் கோளாறு அல்ல, மாறாக விமானியின் திட்டமிட்டச் செயல் என்று இத்தாலிய நாளிதழான 'கொரியர் டெல்லா செரா' வெளியிட்டுள்ள செய்தி அறிக்கை பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

கடந்த ஆண்டு ஜூன் 12 அன்று அகமதாபாத்தில் இருந்து லண்டன் நோக்கிச் சென்ற ஏர் இந்தியா விமானம் புறப்பட்ட சில விநாடிகளில் கட்டுப்பாட்டை இழந்து, மருத்துவக் கல்லூரி விடுதிக் கட்டிடத்தின் மீது மோதி விபத்துக்குள்ளானது. இந்த விபத்தில் விமானத்தில் இருந்த 241 பேர் மற்றும் தரையில் இருந்த 19 பேர் என மொத்தம் 260 பேர் உயிரிழந்தனர். விமானம் புறப்பட்ட உடனேயே அதன் இரண்டு இன்ஜின்களுக்கும் செல்லும் எரிபொருள் விநியோகம் திடீரெனத் துண்டிக்கப்பட்டது என்று முதற்கபட்ட ஆய்வில் தெரியவந்தது.

விமானத்தின் தலைமை விமானியாக இருந்த சுமித் சபர்வாலும் விபத்தில் இறந்தார். விமானி எரிபொருள் ஸ்விட்சை அணைத்ததே விபத்துக்கு காரணம் என அமெரிக்க ஊடகங்களிலும் சமூக வலைத்தளங்களிலும் கூறப்பட்டு வந்தது. ஆனால் அதை மத்திய அரசு மறுத்தது. மேலும் தனது மகனின் பெயருக்கு களங்கம் விளைவிப்பதாக விமானி சபர்வாலின் 91 வயது தந்தை, இது குறித்து ஒரு சுதந்திரமான விசாரணை நடத்தக் கோரி உச்ச நீதிமன்றத்தை நாடினார்.

இந்நிலையில் அகமதாபாத் விமான விபத்து ஒரு தொழில்நுட்பக் கோளாறு அல்ல, மாறாக விமானியின் திட்டமிட்டச் செயல் என்று இத்தாலிய நாளிதழான 'கொரியர் டெல்லா செரா' வெளியிட்டுள்ள செய்தி அறிக்கை பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

விமானம் புறப்பட்ட 32 வினாடிகளிலேயே அதன் எரிபொருள் சுவிட்சுகள் கையால் அணைக்கப்பட்டுள்ளன. இதனால் என்ஜின்கள் இயங்காமல் போயுள்ளன. இது ஒரு தற்செயலான தவறு அல்ல, திட்டமிட்டு செய்யப்பட்ட செயல் என்று விசாரணையில் தெரியவந்துள்ளதாக அந்த அறிக்கை கூறுகிறது.

அமெரிக்காவின் வாஷிங்டனில் ஆய்வு செய்யப்பட்ட விமானத்தின் காக்பிட் குரல் பதிவு தரவுகள் மூலம், விமானத்தின் தலைமை விமானி கேப்டன் சுமித் சபர்வாலே என்ஜின்களை அணைத்ததாக தெரியவறுவதாக அந்த அறிக்கை கூறுகிறது.

அவர் மன அழுத்தத்தில் இருந்தது விபத்து நடந்து ஒரு மாதத்தின் பின் தெரிய வந்ததாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.



தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில் தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை சார்பில் சென்னையில் நடைபெற்ற புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் செயலாக்க மாநாட்டில் பாரத் பயோடெக் நிறுவனம், 5000 கோடி ரூபாய் முதலீடு மற்றும் 5000 நபர்களுக்கு வேலைவாய்ப்பு என்ற வகையில் காஞ்சிபுரம் மாவட்டத்தில் அமைக்க உள்ள உயிரியல் மற்றும் மருந்துகள் உற்பத்தி திட்டத்திற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. ஆர்.வேலுசாமி, தொழில் நிறுவனங்களின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# ஆட்சியை பிடிப்பது யார் என்று இன்று தெரியும்: வங்காளதேச பொதுத்தேர்தலில் விறுவிறுப்பான வாக்குப்பதிவு



**டாக்கா, பிப். 13-**

வங்கதேசத்தில் ஆட்சியை பிடிக்கப்போவது யார் என்பது இன்று தெரிய வரும். மாணவர்கள் போராட்டத்தால் ஷேக் ஹசீனா ஆட்சி கவிழ்ந்த பிறகு நடக்கும் இத்தேர்தலில் யார் ஆட்சியை பிடிப்பார்கள் என்ற எதிர்பார்ப்பு ஏற்பட்டுள்ளது.

வங்காளதேசத்தில் நேற்று காலை 7.30 மணிக்கு பொதுத்தேர்தலில் வாக்குப்பதிவு தொடங்கியது. ஷேக் ஹசீனா ஆட்சி கவிழ்ப்புக்கு பிறகு 18 மாதங்களாக முகமது யூனுஸ் தலைமையில் இடைக்கால அரசு செயல்பட்டு வந்த நிலையில் இந்த தேர்தல் கவனத்தை ஈர்த்துள்ளது. 350 தொகுதிகளை கொண்ட வங்காளதேச பாராளுமன்றத்தில் 299 தொகுதிகளுக்கு வாக்குப்பதிவு நடந்தது.

ஒரு தொகுதியில் வேட்பாளர் மரணம் அடைந்ததால் அங்கு வாக்குப்பதிவு ஒத்தி வைக்கப்பட்டது. 50 இடங்கள் பெண்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த ஒதுக்கப்பட்ட இடங்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களால் விகிதா சார முறையில் தேர்வு செய்யப்படும். தேர்தலில் தாரிக் ரகுமானின் வங்காளதேச தேசியவாத கட்சி தலைமையிலான கூட்டணிக்கும், ஜமாத்-இ-இஸ்லாமி கட்சி தலைமையிலான கூட்டணிக்கும் நேரடி போட்டி நிலவுகிறது. மேலும் சில கட்சிகளும் களத்தில் உள்ளன.

தேர்தலையொட்டி நாடு முழுவதும் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. சுமார் 9.58 லட்சம் பாதுகாப்பு படையினர் கண்காணிப்பில் ஈடுபட்டனர். மொத்தமுள்ள 42,779 வாக்குச்சாவடி மையங்களில் 90 சதவீதம் கண்காணிப்பு கேமராக்கள் பொருத்தப்பட்டிருந்தன.

தேர்தலில் வாக்குப்பதிவு விறுவிறுப்பாக இருந்தது. குறிப்பாக தலைநகர் டாக்காவில் பல வாக்குச்சாவடிகளில் நீண்ட வரிசை காணப்பட்டது. அதேபோல் நாடு முழுவதும் பெரும்பாலான வாக்குச்சாவடிகளில் மக்கள் ஆர்வமுடன் வந்து வாக்களித்து வருகின்றனர். டாக்கா-17 தொகுதியில் போட்டியிடும் வங்காளதேச தேசியவாத கட்சி தலைவர் தாரிக் ரகுமான் தனது வாக்கை பதிவு செய்தார்.

ஜமாத்-இ-இஸ்லாமி கட்சி தலைவர் ஷபிகுர் ரகுமான் வாக்களித்தார். தேர்தல் நேரத்தில் அசம்பாவிதம் நடைபெறாமல் தடுக்க தீவிர நடவடிக்கை எடுக்கப்பட்டது. இருந்தபோதிலும் சில இடங்களில் பிரச்சினை ஏற்பட்டன. போகுரா பகுதி வாக்குச்சாவடி அருகே பி.என்.பி கட்சியின் மாணவர் தலைவர் மிலோன் மியா கத்தியால் குத்தப்பட்டார். பரிசாலின் பாபுகஞ்ச் உபாசிலா பகுதியில் பணம் மற்றும் தேர்தல் சீட்டுகளுடன் திரிந்த 2 பேர் கைது செய்யப்பட்டனர். சில மாவட்டங்களில் ஓட்டுக்கு பணம் கொடுத்ததாக குற்றச் சாட்டுகள் எழுந்துள்ளன.

வாக்குப்பதிவு மாலை 4.30 மணிக்கு முடிவடைந்தது. அதன்பின் உடனே வாக்கு எண்ணிக்கை தொடங்கியது. தேர்தலின் முழுமையான வெற்றி விவரம் இன்று தெரியவரும். மாணவர்கள் போராட்டத்தால் ஷேக் ஹசீனா ஆட்சி கவிழ்ந்த பிறகு நடக்கும் இத்தேர்தலில் யார் ஆட்சியை பிடிப்பார்கள் என்ற எதிர்பார்ப்பு ஏற்பட்டுள்ளது.

வங்காளதேச தேசியவாத கட்சி தலைவர் கலிதா ஜியா மறைவுக்கு அவரது மகன் தாரிக் ரகுமான் லண்டனில் இருந்து 17 ஆண்டுகளுக்கு பிறகு நாடு திரும்பி தேர்தலில் போட்டியிடுகிறார். அக்கட்சிக்கு ஜமாத்-இ-இஸ்லாமி கட்சி கடும் சவாலாக உள்ளது. ஜமாத்-இ-இஸ்லாமி கட்சி கூட்டணியில் ஷேக் ஹசீனா ஆட்சி கவிழ்ப்புக்கு காரணமாக இருந்த மாணவர் இயக்கம் உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. இந்த தேர்தலுடன் 84 அம்ச ஜனநாயக சீர்திருத்தங்களை உள்ளடக்கிய 'ஜூலை தேசிய சாசனம் 2025' மீதான மக்கள் வாக் கெடுப்பும் நடைபெற்றது.

# துருக்கி பாராளுமன்றத்தில் எம்.பி.க்கள் திடீர் மோதல்



**அங்காரா, பிப். 13-**

துருக்கி நாட்டு பாராளுமன்றத்தில் அகின் குர்லெக் அமைச்சராக பதவி ஏற்கும் நிகழ்ச்சி நடந்தபோது எதிர்க்கட்சி எம்.பிக்கள் எதிர்ப்பு தெரிவித்து போராட்டத்தில் ஈடுபட்டனர். அகின் குர்லெக்கின் பதவி பிரமாணத்தை தடுக்க முயற்சித்தனர். இதனால் ஆளும்கட்சி எம்.பி.க்களுக்கும், எதிர்க்கட்சி எம்.பி.க்களுக்கும் மோதல் ஏற்பட்டு கைகலப்பானது.

துருக்கியின் மந்திரி சபையில் மறுசீரமைப்பை அதிபர் எர்டோகன் மேற்கொண்டார். இதில் அரசாங்க தலைமை வக்கீல் அகின் குர்லெக்கை புதிய நீதி அமைச்சராக நியமித்தார். இதற்கு முக்கிய எதிர்க்கட்சியான குடியரசு மக்கள் கட்சி கடும் எதிர்ப்பு தெரிவித்தது. இந்தநிலையில் பாராளுமன்றத்தில் அகின் குர்லெக் அமைச்சராக பதவி ஏற்கும் நிகழ்ச்சி நடந்தபோது எதிர்க்கட்சி எம்.பிக்கள் எதிர்ப்பு தெரிவித்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அகின் குர்லெக்கின் பதவி பிரமாணத்தை தடுக்க முயற்சித்தனர். இதனால் ஆளும்கட்சி எம்.பி.க்களுக்கும், எதிர்க்கட்சி எம்.பி.க்களுக்கும் மோதல் ஏற்பட்டு கைகலப்பானது. ஒருவரையொருவர் மாறி மாறி தாக்கிகொண்டனர். இதனால் பாராளுமன்றத்தில் பரபரப்பு நிலவியது. மோதலில் ஈடுபட்டவர்களை பாதுகாவலர்கள் தடுத்தனர். மோதல் ஏற்பட்டபோதிலும் அகின் குர்லெக் அமைச்சராக பதவி ஏற்று கொண்டனர். அவரை சுற்றி ஆளும் கட்சி உறுப்பினர்கள் சூழ்ந்து கொண்டு ஒரு பாதுகாப்பு வளையத்தை அமைத்தனர்.

# மடகாஸ்கரில் புயல் - 20 பேர் பலி



**டோமாசினா, பிப். 13-**

மடகாஸ்கர் நாட்டில், கெஸானி புயலால் பெய்த கன மழை மற்றும் வெள்ளத்தால் இதுவரை 20 பேர் பலியானதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உலகின் 4-வது மிகப் பெரிய தீவான மடகாஸ்கர் நாட்டின் கடல்பகுதியில் உருவான கெஸானி புயலால் அந்நாட்டின் கிழக்கு நகரமான டோமாசினாவில் கடந்த செவ்வாய்க்கிழமை (பிப். 10) மாலை முதல் அதிக கனமழை பெய்து வருகின்றது. இதனைத் தொடர்ந்து, சுமார் 3 லட்சம் மக்கள் வசிக்கும் டோமாசினா நகரம் கெஸானி புயலால் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது. இதனால், பல்வேறு இடங்களில் உள்ள வீடுகள், கடைகள் உள்ளிட்ட கட்டமைப்புகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

இதுவரை, டோமாசினாவில் கெஸானி புயலின் பாதிப்புகளால் 20 பேர் பலியானது உறுதி செய்யப்பட்டுள்ளது. மேலும், 33 பேர் படுகாயமடைந்ததுடன், சுமார் 15 பேர் மாயமாகியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மின்சாரக் கட்டமைப்புகள் முழுவதும் சேதமடைந்துள்ளதால் டோமாசினா நகரம் முழுவதும் இருளில் மூழ்கியுள்ளதாகக் கூறப்பட்டுள்ளது.

இந்த நிலையில், கெஸானி புயலினால் மணிக்கு 195 கி.மீ. வேகத்தில் காற்று வீசுவதால் பல்வேறு பகுதிகளுக்கு நிலச்சரிவு மற்றும் வெள்ளம் ஏற்படக் கூடிய வாய்ப்புள்ளதாகக் கூறி மடகாஸ்கரின் வானிலை சேவை சிவப்பு எச்சரிக்கை விடுத்துள்ளது. இத்துடன், புயலால் பாதிக்கப்பட்ட டோமாசினாவை மடகாஸ்கர் அதிபர் மைக்கேல் ராண்ட்ரியானிரினா நேரில் பார்வையிட்டார். அந்த நகரத்தின் 75 சதவிகித கட்டமைப்புகள் சேதமடைந்துள்ளதாக அதிபர் அலுவலகம் தெரிவித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

# இந்தியா, ஜப்பான், கொரியாவுடன் வர்த்தக ஒப்பந்தம் சிறப்புமிக்கது

## அதிபர் டொனால்ட் ட்ரம்ப் கருத்து

**நியூயார்க், பிப். 13-**

இந்தியா, ஜப்பான், கொரியா, பிற நாடுகளுடன் வரலாற்றுச் சிறப்புமிக்க வர்த்தக ஒப்பந்தங்களைச் செய்துள்ளோம் என்று அதிபர் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

இந்தியா-அமெரிக்கா இடையேயான வர்த்தக ஒப்பந்தம் ஒரு ஆண்டு பேச்சுவார்த்தைக்கு பிறகு சமீபத்தில் எட்டப்பட்டது. இதுதொடர்பாக இருநாடுகளும் கூட்டறிக்கையை வெளியிட்டன. மேலும், இடைக்கால வர்த்தக ஒப்பந்தம் கையெழுத்தானது. இந்த நிலையில் இந்தியாவுடனான வர்த்தக ஒப்பந்தம் வரலாற்று சிறப்புமிக்கது என்று அமெரிக்க அதிபர் ட்ரம்ப் தெரிவித்தார்.

ஒரு நிகழ்ச்சியில் பங்கேற்று அவர் பேசியதாவது:- உலகின் முதன்மையான எரிசக்தி உற்பத்தியாளராக அமெரிக்கா உள்ளது. நாம் ஒரு பெரிய எரிசக்தி ஏற்றுமதியாளராக மாறி வருகிறோம்.

கடந்த சில மாதங்களில் நமது நிலக்கரி ஏற்றுமதியை வியத்தகு முறையில் அதிகரிக்க இந்தியா, ஜப்பான், கொரியா மற்றும் பிற நாடுகளுடன் வரலாற்றுச் சிறப்புமிக்க வர்த்தக ஒப்பந்தங்களைச் செய்துள்ளோம்.

நமது நிலக்கரியின் தரம் உலகில் எங்கும் சிறந்ததாக இருக்க வேண்டும். சர்வதேச சந்தைகளில் அமெரிக்க நிலக்கரியை ஒரு சிறந்த தயாரிப்பாக நிலைநிறுத்துவதற்கான ஒரு பகுதியாக இந்தியாவுடனான ஒப்பந்தம் அமைந்துள்ளது. இந்த ஒப்பந்தங்கள் வெளிநாடுகளில் நிலக்கரி ஏற்றுமதியை கூர்மையாக அதிகரிக்கவும் அமெரிக்காவின் ஏற்றுமதி திறனை வலுப்படுத்தவும் வடிவமைக்கப்பட்டுள்ளன.

நாட்டின் மாற்றம் விரைவானது மற்றும் தீர்க்கமானது. அது இனி உள்நாட்டு விநியோகத்தில் மட்டும் கவனம் செலுத்துவதில்லை. உலகளாவிய ஏற்றுமதியில் கவனம் செலுத்தி அதை அதிகரித்து வருகிறது. இவ்வாறு ட்ரம்ப் கூறினார்.

# தங்கம் விலை குறைவு

**சென்னை, பிப். 13-**

சென்னையில் ஆபரணத் தங்கத்தின் விலை வியாழக்கிழமை காலை சவரனுக்கு ரூ. 1,520 குறைந்து ரூ. 1,16,800-க்கு விற்பனையானது.

சென்னையில் கடந்த சில மாதங்களாக தங்கத்தின் விலை அசுர வேகத்தில் உயர்ந்து லட்சத்தைக் கடந்து உச்சத்தில் விற்பனையானது. அந்த வகையில், சனிக்கிழமை தங்கத்தின் விலை சவரனுக்கு ரூ.1,360 உயர்ந்து ரூ.1,15,360-க்கு விற்பனையான நிலையில், திங்கள்கிழமை கிராமுக்கு ரூ.230 உயர்ந்து ரூ.14,650-க்கும், சவரனுக்கு ரூ.1,840 உயர்ந்து ரூ.1,17,200-க்கும் விற்பனையானது. செவ்வாய்க்கிழமை சவரன் ரூ. 116,640-க்கும், புதன்கிழமை ரூ. 118,320-க்கும் விற்பனையானது.

இந்த நிலையில், சென்னையில் ஆபரணத் தங்கத்தின் விலை வியாழக்கிழமை காலை சவரனுக்கு ரூ. 1,520 குறைந்து ரூ. 1,16,800-க்கு விற்பனையானது. ஒரு கிராமின் விலை ரூ. 14,600. இதனிடையே, வெள்ளியின் விலை தொடர்ந்து நான்காவது நாளாக எவ்வித மாற்றமிம் இன்றி ஒரு கிராம் ரூ. 300-க்கும், ஒரு கிலோ ரூ. 3,00,000-க்கும் விற்பனையானது.

# அமெரிக்காவில் விபத்தில் பலியான ஆந்திரா பெண் குடும்பத்துக்கு 265 கோடி ரூபாய் இழப்பீடு

**நியூயார்க், பிப். 13-**

அமெரிக்காவில் விபத்தில் பலியான ஆந்திராவை சேர்ந்த பெண் குடும்பத்துக்கு 265 கோடி ரூபாய் இழப்பீடு வழங்க சியாட்டில் நகர நிர்வாகம் ஒப்புதல் அளித்துள்ளது.

கடந்த 2023ஆம் ஆண்டு அமெரிக்காவில் காவல்துறை வாகனம் மோதியதில் பலியான ஆந்திரப் பிரதேசத்தின் கர்னூல் மாவட்டத்தைச் சேர்ந்த ஜாஹ்னவி கண்டுலா (23) என்ற இளம்பெண் குடும்பத்துக்கு ரூ.265 கோடியை வழங்க சியாட்டில் நகர நிர்வாகம் ஒப்புதல் அளித்துள்ளது. அமெரிக்காவின் சியாட்டில் நகரிலுள்ள 'நார்த் ஈஸ்டெர்ன்' பல்கலைக்கழகத்தில் மேற்படிப்பு படித்து வந்த கண்டுலா, சாலையைக் கடக்கும்போது, வேகமாக வந்த காவல்துறை வாகனம் மோதி பலியானார்.

இது குறித்து வெளியான தீர்ப்பில், ஜாஹ்னவி கண்டுலா மரணம் இதயத்தை நொறுக்குவதாக உள்ளது. இந்த இழப்பீடு மூலம் கண்டுலா குடும்பத்துக்கு ஓரளவுக்கு நிவாரணம் கிடைக்கலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. ஏற்கனவே, விபத்தை ஏற்படுத்திய காவலர் மீது நடவடிக்கை எடுக்கவில்லை என்று குடும்பத்தினர் போராடி வந்த நிலையில், இழப்பீடு குறித்து இதுவரை எந்தக் கருத்தும் தெரிவிக்கவில்லை.

# அணுசக்தி ஒப்பந்தம் தொடர்பான பேச்சுவார்த்தை தோல்வியடைந்தால் ஈரான் மீது தாக்குதல்: அதிபர் ட்ரம்ப்

**நியூயார்க், பிப். 13-**

அணுசக்தி ஒப்பந்தம் தொடர்பான பேச்சுவார்த்தை தோல்வியடைந்தால் ஈரான் மீது தாக்குதல் நடத்தப்படும் என்று இஸ்ரேல் பிரதமரை சந்தித்த பின் அதிபர் ட்ரம்ப் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

அணுசக்தி ஒப்பந்தம் தொடர்பாக ஈரானுக்கும் அமெரிக்காவுக்கும் இடையே ஓமனில் பேச்சுவார்த்தை நடந்து வருகிறது. இதற்கிடையே இஸ்ரேல் பிரதமர் நேதன்யாகு அமெரிக்கா சென்று அதிபர் ட்ரம்ப்-ஐ சந்தித்தார். இந்நிலையில் பேச்சுவார்த்தைகள் தோல்வியடைந்தால் ஈரான் மீது அமெரிக்கா ராணுவத் தாக்குதலை நடத்தும் என்று அமெரிக்க அதிபர் ட்ரம்ப் மீண்டும் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

அதிபர் ட்ரம்ப் கூறியதாவது, "ஒப்பந்தம் செய்து கொள்வதில் ஈரான் ஆர்வம் காட்டி வருகிறது. பேச்சுவார்த்தை வெற்றிகரமாக அமையும் என்று நம்புகிறோம். அதே நேரத்தில், இப்பகுதியில் அமெரிக்கப் போர்க்கப்பல்களின் எண்ணிக்கையை அதிகரிப்பது குறித்தும் ஆலோசித்து வருகிறோம்.

ஈரான் ஒப்பந்தம் செய்து கொள்ளவில்லை என்றால் தாக்குதல் நடத்தப்படும். அணு ஆயுதங்கள் மற்றும் ஏவுகணைகள் குறித்து ஒப்பந்தம் எட்டப்பட வேண்டும். முந்தைய அமெரிக்க நிர்வாகம் ஈரானுடன் செய்து கொண்ட அணுசக்தி ஒப்பந்தம் மிகவும் முட்டாள்தனமான ஒப்பந்தம்" என்று தெரிவித்தார்.

**மரம் மனிதனின் உரம்**

### அமெரிக்கா-இந்தியா ஒப்பந்தத்திற்கு எதிர்ப்பு:
# பாராளுமன்ற வளாகத்தில் எதிர்க்கட்சிகள் போராட்டம்




டெல்லி, பிப். 13-

அமெரிக்கா - இந்தியா வர்த்தக ஒப்பந்தத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து பாராளுமன்ற வளாகத்தில் எதிர்க்கட்சிகள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அமெரிக்கா - இந்தியா இடையே மேற்கொள்ளப்பட்டிருக்கும் வர்த்தக ஒப்பந்தத்துக்கு கண்டனம் தெரிவித்து பாராளுமன்ற வளாகத்தில் எதிர்க்கட்சி எம்பிக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். இந்த ஒப்பந்தமானது இந்தியாவுக்கு வைக்கப்பட்ட 'பொறி' என்று விமர்சித்து, பதாகைகளுடம் எம்பிக்கள் முழக்கங்களை எழுப்பினர். மேலும், மத்திய அரசுக்கு எதிராக நாடு முழுவதும் தொழிற்சங்கங்கள் மற்றும் விவசாய அமைப்புகள் இணைந்து நேற்று நடத்தி வரும் வேலைநிறுத்தப் போராட்டத்துக்கு ஆதரவாகவும் முழக்கங்களை எழுப்பினர்.

தொழிலாளர்கள் சட்டத் திருத்தம், வர்த்தக ஒப்பந்தங்கள், தனியார்மயமாக்கல், தொழிலாளர் மற்றும் விவசாய விரோத கொள்கைகள் உள்ளிட்டவைக்கு எதிராக நாடு முழுவதும் நேற்று வேலைநிறுத்தப் போராட்டம் நடைபெற்று வருகின்றன. பாராளுமன்ற பட்ஜெட் கூட்டத்தொடரில், இந்தியா - அமெரிக்கா இடையே மேற்கொள்ளப்பட்டிருக்கும் வர்த்தக ஒப்பந்த விவகாரத்தில் ஆளும்கட்சிக்கும், எதிர்க்கட்சிக்கும் இடையே மோதல் உருவாகியுள்ளன.

மக்களவையில் புதன்கிழமை உரையாற்றிய ராகுல் காந்தி, "இந்தியாவையும் பாரத மாதாவையும் விற்றதில் வெட்கமாக இல்லையா?" என்று கேள்வி எழுப்பியது பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

மேலும், மத்திய அரசுக்கு எதிராக பல்வேறு குற்றச்சாட்டுகளை ராகுல் காந்தி நேற்று முன்தினம் முன்வைத்தது குறிப்பிடத்தக்கது.

# எகிப்து பிரமிடு கல்லறைகளில் தமிழ் வணிகரின் பெயர் இடம்
### அமைச்சர் தங்கம் தென்னரசு பெருமிதம்

சென்னை, பிப். 13-

எகிப்து பிரமிடு கல்லறைகளில் தமிழ் வணிகரின் பெயர் இடம்பெற்றுள்ளதையடுத்து நிதியமைச்சர் தங்கம் தென்னரசு பெருமிதம் கொண்டார்.

எகிப்து பிரமிடு கல்லறைகளில் தமிழ்-பிராமி எழுத்துக்கள் பொறிக்கப்பட்ட 2000 ஆண்டுகள் எழுத்துக்கள் பொறி பழமையான கல்வெட்டுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. சுவிட்சர்லாந்து மற்றும் பிரான்ஸ் ஆய்வாளர்கள் நடத்திய இந்த ஆய்வில், சுமார் 30 கல்வெட்டுகள் கண்டெடுப்பு.

இதில் 20 கல்வெட்டுகளில் தமிழ்-பிராமி எழுத்துக்கள் உள்ளன. சிகை கொற்றன்' என்ற தமிழ் வணிகரின் பெயர், 5 வெவ்வேறு பிரமிடுகளில் 8 முறை கண்டறியப்பட்டுள்ளது. ஒரு கல்வெட்டில் 'சிகை கொற்றன் - வர கண்ட' (சிகை கொற்றன் இங்கே வந்து பார்த்தான்) என பொறிக்கப்பட்டுள்ளது. ரோமானிய காலத்தில் தமிழ் வணிகர்கள் கடல் கடந்து எகிப்து சென்று, அங்கிருந்து உள்நாட்டுப் பகுதிகளுக்கும் பயணம் செய்துள்ளனர் என்பதற்கு இதுவே முதல் நேரடி ஆதாரமாகும்.

இதையொட்டி நிதியமைச்சர் தங்கம் தென்னரசு தனது எக்ஸ் பக்கத்தில் பதிவிட்டுள்ளார். அந்த பதிவில், "கடல் கடந்து உலக நாகரிகங்களில் தடம் பதித்த பெருமைமிகு இனம்தான் தமிழினம் என்பதை மீண்டும் உலகுக்கு உரக்கச் சொல்வதுபோல் இந்தக் கண்டுபிடிப்புத் திகழ்கிறது. எகிப்தின் பிரமிடு கல்லறைகளில் 2000 ஆண்டுகள் பழமையான தமிழ்-பிராமி கல்வெட்டுகள், 'சிகை கொற்றன்' என்ற தமிழ் வணிகரின் பெயர், 5 வெவ்வேறு பிரமிடுகளில் 8 முறை கண்டெடுக்கப்பட்டிருப்பது, உலக வர்த்தக வரைபடத்தில் தமிழரின் தடம் எவ்வளவு ஆழமாகப் பதிந்திருந்தது என்பதை நினைவூட்டுகிறது.

ரோமானிய காலத்திலேயே கடல் கடந்து எகிப்து சென்று, இன்று நாம் பேசும் உலகமயமாக்கலை ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பே செயல்படுத்திய முன்னேற்ற நாகரிகம் தமிழர் நாகரிகம் என்பதற்கு இவை மற்றுமொரு சாட்சி. "எங்கும் தமிழ், எதிலும் தமிழ்" என்பதோடு உலகம் தழுவிய தமிழ்" என்பதே நம் அடையாளம் என்ற பெருமையை இந்த வரலாறு நம்மை நிமிரச் செய்கிறது" என்று தெரிவித்துள்ளார்.

### டெல்லியில் புதிய பிரதமர் அலுவலகம்:
# பிரதமர் மோடி இன்று திறந்து வைக்கிறார்

டெல்லி, பிப். 13-



தலைநகர் புது தில்லியில் பிரதமர் அலுவலகத்தின் புதிய கட்டிடமான சேவா தீர்த் மற்றும் கர்த்தவ்ய பவன் 1 மற்றும் 2ஐ பிரதமர் நரேந்திர மோடி பிப்ரவரி 13-ம் தேதி (இன்று) திறந்துவைப்பார் என பிரதமர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக பிரதமர் அலுவலகம் வெளியிட்ட அறிக்கையில், தலைநகர் தில்லியில் அரசுக் கட்டடங்களை மறுநிர்மாணம் செய்யும் பணி நடைபெற்று வந்தது. அதன் ஒரு பகுதியாகப் பிரதமர் அலுவலகத்துக்கு புதிய கட்டடம் கட்டப்பட்டுள்ளது. தற்போது கட்டுமானப் பணி நிறைவடைந்துள்ளது.

இதற்கு முன்னதாக பல ஆண்டுகளாக இருந்த அரசு அலுவலகங்கள் சிதிலமடைந்த நிலையில், மிகப் பழமையான உள்கட்டமைப்பில் செயல்பட்டன. இதனால் செயல்பாட்டுத் திறமையின்மை, ஒருங்கிணைப்பு சவால்கள், அதிகரிக்கும் பராமரிப்பு செலவுகள் என பணிச் சூழல்களுக்கு உகந்ததாக இல்லாமல் இருந்தது. அதனடிப்படையில், புதிய கட்டட வளாகங்கள் நவீன, எதிர்காலத்திற்கு உகந்த வசதிகளுடன் நிர்வாக செயல்பாடுகளை ஒருங்கிணைக்கும் வகையில் கட்டப்பட்டுள்ளது.

இந்தக் கட்டடத்தில் பிரதமர் அலுவலகம் மட்டுமின்றி மத்திய அமைச்சரவை செயலகம், தேசிய பாதுகாப்பு கவுன்சில் செயலகம் மற்றும் வெளிநாட்டுத் தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கான இந்தியா ஹவுஸ் ஆகியவை இடம்பெறும் வகையில் அமைக்கப்பட்டுள்ளன. முன்னதாக இது வெவ்வேறு இடங்களில் அமைந்திருந்தன.

இந்த நிலையில், பிரதமர் அலுவலகத்தின் புதிய கட்டடத்தின் பெயர் "சேவா தீர்த்" (சேவைத் தலம்) என்றும், கர்த்தவ்ய பவன் (மத்திய அரசின் தலைமைச் செயலகம்) என்றும் அழைக்கப்படுகிறது. மேலும், கர்த்தவ்ய பவன் 1 மற்றும் 2ல் சட்டம், பாதுகாப்பு, நிதி, சுகாதாரம், விவசாயம் மற்றும் பல முக்கிய அமைச்சகங்களும் உள்ளடக்கியுள்ளன. இரண்டு கட்டிட வளாகங்களும் டிஜிட்டல் முறையில் ஒருங்கிணைக்கப்பட்ட அலுவலகங்கள், கட்டமைக்கப்பட்ட பொது இடைமுக மண்டலங்கள் மற்றும் வரவேற்பு வசதிகளைக் கொண்டுள்ளன. இவ்வாறு பிரதமர் அலுவலக அறிக்கை வெளியிட்டுள்ளது.

### தேர்தலில் போட்டியிட தடை விதிக்க வேண்டும்:
# ராகுலை பதவி நீக்கக்கோரி தனிநபர் தீர்மானம் தாக்கல்

டெல்லி, பிப். 13-

மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தியை எம்பி பதவியில் இருந்து தகுதி நீக்கம் செய்யக் கோரி தனிநபர் தீர்மான நோட்டீஸை பா.ஜ.க. எம்.பி. நிஷிகாந்த் துபே தாக்கல் செய்துள்ளார். மேலும், தேர்தலில் போட்டியிட ராகுல் காந்திக்கு வாழ்நாள் தடை விதிக்க வேண்டும் என்றும் அந்த தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அமெரிக்காவுடனான வர்த்தக ஒப்பந்தம் தொடர்பாக மக்களவையில் புதன்கிழமை உரையாற்றிய ராகுல் காந்தி, எப்ஸ்டீன் கோப்புகளுடன் பிரதமர் நரேந்திர மோடி மற்றும் மத்திய அமைச்சர் ஹர்தீப் சிங் புரியை தொடர்புபடுத்தி பேசினார்.

மேலும், நாட்டையும், பாரத மாதாவையும் எப்ஸ்டீன் கோப்புகளுக்கு பயந்து பிரதமர் மோடி விற்றுவிட்டதாகவும் குற்றச்சாட்டை ராகுல் முன்வைத்தார். ராகுல் காந்தியின் குற்றச்சாட்டுகள் அடிப்படை ஆதாரமற்றவை என்றும், இதுபோன்ற குற்றச்சாட்டுகளை முன் அறிவிப்பின்றி மக்களவையில் முன் வைத்த ராகுலுக்கு எதிராக உரிமை மீறல் நோட்டீஸ் தாக்கல் செய்யப்படும் என்றும் நாடாளுமன்ற விவகாரத்துறை அமைச்சர் கிரண் ரிஜிஜு நேற்று முன்தினம் தெரிவித்திருந்தார்.

இந்த நிலையில், ராகுல் காந்தியை மக்களவை உறுப்பினர் பதவியில் இருந்து நீக்க வேண்டும் என்றும், தேர்தலில் போட்டியிட வாழ்நாள் தடை விதிக்க வேண்டும் என்றும் தனிநபர் தீர்மான நோட்டீஸை மக்களவை செயலகத்தில் நிஷிகாந்த் துபே தாக்கல் செய்துள்ளார்.

இதுதொடர்பாக செய்தியாளர்களுடன் பேசிய நிஷிகாந்த், "நாட்டை அழிக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் ராகுல் காந்திக்கு யார் நிதி அளிக்கிறார்கள்? வெளியாகாத புத்தகம் அவருக்கு கிடைத்தது எப்படி?" உள்ளிட்ட கேள்விகளை எழுப்பியுள்ளார்.

வெளியாகாத நரவணே புத்தகம் புழக்கத்தில் வந்தது குறித்து தில்லி காவல்துறையும் வழக்குப் பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றது.

### கடந்த 5 ஆண்டுகளில் மட்டும்
# பிரதமர் மோடியின் வெளிநாட்டு பயணச்செலவு ரூ.462.58 கோடி!

புதுடெல்லி, பிப். 13-

பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட சமீபத்திய தரவுகளின்படி, கடந்த 5 ஆண்டுகளில் (2021-2025) பிரதமர் நரேந்திர மோடியின் வெளிநாட்டுப் பயணங்களுக்காக மத்திய அரசு ரூ.462.58 கோடி செலவிட்டுள்ளதாக பாராளுமன்றத்தில் மத்திய அரசு தெரிவித்துள்ளது.

மத்திய வெளியுறவுத் துறை அமைச்சகம் வழங்கிய தகவலின்படி, இந்தப் பயணச் செலவுகளில் விமானப் பயணம், தங்குமிடம் மற்றும் பாதுகாப்பு ஏற்பாடுகள் அடங்கும். அமெரிக்கப் பயணங்களுக்கு மட்டும் மொத்தத் தொகையில் சுமார் 16% செலவிடப்பட்டுள்ளது. அமெரிக்காவைத் தொடர்ந்து ஜப்பான் மற்றும் பிரான்ஸ் நாடுகளுக்கான பயணங்களுக்குத் தலா 9% நிதி செலவிடப்பட்டுள்ளது.

2025-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் பிரதமர் மேற்கொண்ட பிரான்ஸ் நாட்டுப் பயணம் மிகவும் அதிக செலவான ஒன்றாகக் கருதப்படுகிறது (சுமார் ரூ.25.5 கோடி). இதற்கு அடுத்ததாக 2023 ஜூன் அமெரிக்கப் பயணம் (ரூ.22.8 கோடி) இடம் பெற்றுள்ளது. பாராளுமன்றத்தில் கேட்கப்பட்ட கேள்விகளுக்குப் பதிலளிக்கையில், முந்தைய காலக்கட்டங்களின் செலவுகளும் ஒப்பிடப்பட்டன. 2014 - 2019 ரூ.446.52 கோடி முதலாம் ஆட்சிக்காலம், 2021 - 2025 ரூ.462.58 கோடி இரண்டாம் மற்றும் மூன்றாம் ஆட்சிக்காலப் பகுதிகள். 2020 மற்றும் 2021-ன் முற்பகுதியில் கோவிட்-19 பெருந்தொற்று காரணமாக வெளிநாட்டுப் பயணங்கள் பெருமளவு குறைக்கப்பட்டிருந்தன என்பது குறிப்பிடத்தக்கது. இந்தச் செலவுகள் குறித்து எதிர்க்கட்சிகள் கேள்வி எழுப்பியுள்ள நிலையில், மத்திய அரசு விளக்கமளித்துள்ளது. அதில்," இந்தப் பயணங்கள் இந்தியாவின் இருதரப்பு உறவுகளை வலுப்படுத்தவும், வர்த்தகம், முதலீடு மற்றும் தொழில்நுட்பப் பரிமாற்றங்களை மேம்படுத்தவும் உதவுகின்றன" என்று தெரிவித்துள்ளது.

### சேலத்தில் இன்று விஜய் பிரச்சாரம்:
# நுழைவுச்சீட்டு இருந்தால் மட்டுமே அனுமதி

சேலம், பிப். 13-



சேலத்தில் இன்று த.வெ.க. தலைவர் விஜய் பங்கேற்கும் கூட்டத்துக்கு நுழைவுச் சீட்டு இருப்பவர்களுக்கு மட்டுமே அனுமதி வழங்கப்படும் என்று அக்கட்சித் தலைமை அறிவித்துள்ளது.

சேலம் மாவட்டம், சீலநாயக்கன்பட்டி புறவழிச்சாலை அருகே உள்ள தாளமுத்து நடராஜன் மைதானத்தில் த.வெ.க. தலைவர் விஜய் பங்கேற்கும் கூட்டம் இன்று (பிப். 13) நடைபெறவுள்ளது. முதலில் மக்கள் சந்திப்புக்கு அனுமதி கோரப்பட்ட நிலையில், மனுவில் வரைபடம் இணைக்கப்படவில்லை உள்ளிட்ட கேள்விகளை காவல் துறை எழுப்பியிருந்தது. இதையடுத்து, மக்கள் சந்திப்பு நிகழ்ச்சிக்கு பதிலாக, குறிப்பிட்ட தேதியில் த.வெ.க. நிர்வாகிகள் சந்திப்புக் கூட்டத்துக்கு த.வெ.க. தரப்பில் அனுமதி கோரப்பட்டது.

இதையடுத்து, த.வெ.க. நிர்வாகிகள் கூட்டத்துக்கு 51 நிபந்தனைகளுடன் காவல் துறை அனுமதி வழங்கியது. முக்கிய நிபந்தனையாக அதிகபட்சமாக 5,000 பேர் மட்டுமே கூட்டத்தில் பங்கேற்க வேண்டும் என்று காவல் துறை தெரிவித்திருந்தது. இந்த நிலையில், த.வெ.க. தலைமை நிலையச் செயலகம் தொண்டர்களுக்கு முக்கிய அறிவுறுத்தலை வெளியிட்டுள்ளது. அதில் தெரிவித்திருப்பதாவது:-

மக்கள் விரும்பும் முதல்வர் வேட்பாளர், தமிழக வெற்றிக் கழகத் தலைவர் கலந்துகொள்ளும் நிர்வாகிகள் சந்திப்பு மற்றும் தேர்தல் பிரச்சார நிகழ்ச்சி, இன்று (பிப்ரவரி 13 ஆம் தேதி) வெள்ளிக்கிழமை அன்று, சேலம் சீலநாயக்கன்பட்டி, கேவிபி கார்டன் உள்வளாகத்தில், மதியம் 12 மணி முதல் 3 மணி வரை நடைபெற உள்ளது. காவல் துறை அனுமதிக்கான வழிகாட்டு நெறிமுறைகளின்படி இந்த நிகழ்ச்சியானது முழுக்க முழுக்க அனுமதி பெற்றவர்களுக்கான சந்திப்பு நிகழ்ச்சியாக மாவட்ட நிர்வாகிகளால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

க்யூஆர் குறியீட்டுடன் கூடிய நுழைவுச் சீட்டு அளிக்கப்பட்டுள்ள 4,998 பேர் மட்டுமே இந்த நிகழ்ச்சியில் கலந்துகொள்ள அனுமதிக்கப்படுவார்கள். வேறு யாருக்கும் கண்டிப்பாக அனுமதி கிடையாது. அனுமதிச் சீட்டு பெறாத தொண்டர்களும் பொதுமக்களும் நேரில் வருவதைக் கண்டிப்பாகத் தவிர்க்க வேண்டுகிறோம்.

இந்த நிகழ்ச்சியைத் தொலைக்காட்சி நேரலைகளில் கண்டு, அனுமதிச் சீட்டு பெற்றிருப்பவர்கள் மட்டுமே பங்கேற்க முழு ஒத்துழைப்பு தருமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

### நாடு முழுவதும் தொழிற்சங்கங்கள் ஸ்டிரைக்:
# தமிழ்நாட்டில் பெரியளவில் பாதிப்பில்லை

சென்னை, பிப். 13-

மத்திய அரசை கண்டித்து நாடு முழுவதும் பல்வேறு தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பு சார்பில் நேற்று காலை முதல் வேலைநிறுத்தப் போராட்டம் நடைபெற்றன. எனினும் தமிழ்நாட்டில் பெரியளவில் மக்களின் இயல்பு வாழ்க்கையில் பாதிப்பில்லை.

மத்திய அரசின் தொழிலாளர் விரோத, விவசாயிகள் விரோத, தேசியவிரோத, பெருநிறுவன ஆதரவு கொள்கைகள் மீதான எதிர்ப்பை வெளிப்படுத்தும் வகையில் இன்று ஒருநாள் வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடப் போவதாக தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பு அறிவித்திருந்தது.

ஐ.என்.டி.யூ.சி, ஏ.ஐ.டி.யூ.சி, ஹெச்.எம்.எஸ்., சி.ஐ.டி.யு., ஏ.ஐ.யு.டி.யு.சி., யு.டி.யு.சி. உள்ளிட்ட தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பு வேலைநிறுத்தத்துக்கு ஆதரவு தெரிவித்திருக்கும் நிலையில், மின்விநியோகம், காப்பீடு, போக்குவரத்து, சுகாதாரம், கல்வி, எரிவாயு, குடிநீர் விநியோகம் உள்பட பல்வேறு துறைகளைச் சேர்ந்த சுமார் 30 கோடி தொழிலாளர்கள் பங்கேற்பார்கள் என்று தெரிவிக்கப்பட்டிருந்தன.

இதன்காரணமாக நேற்று நாடு முழுவதும் பல்வேறு சேவைகள் பாதிக்கப்பட்டுள்ளதால் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டது. கேரளம், மேற்கு வங்கம், ஒடிஸா உள்ளிட்ட மாநிலங்களில் காலைமுதல் தொழிற்சங்கங்கள் பல்வேறு போராட்டங்களில் ஈடுபட்டனர். கேரளத்தில் அரசுப் போக்குவரத்துக் கழகம் மற்றும் தனியார் பேருந்து சங்கமும் வேலைநிறுத்தத்தில் பங்கேற்றுள்ளதால், பொதுப் போக்குவரத்து சேவை கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது.

தமிழகத்தை பொறுத்தவரை ஆளும் தி.மு.க. கூட்டணியில் அங்கம்வகிக்கும் ஏ.ஐ.டி.யூ.சி., சி.ஐ.டி.யு. உள்ளிட்ட தொழிற்சங்கங்கள், விவசாய சங்கங்கள் போராட்டத்தில் பங்கேற்றன. இருப்பினும், தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் சார்பில் காலைமுதல் அரசுப் பேருந்துகள் பெரிய அளவிலான பாதிப்பின்றி சீராக இயக்கப்பட்டன.

தொழிலாளர்கள் போராட்ட அறிவிப்பால் காலை 10 மணிக்கு மேல் பொதுத்துறை நிறுவனங்களுக்கு வெளியே காவல்துறையினர் குவிக்கப்பட்டு பாதுகாப்பு பணியில் ஈடுபட்டனர். 4 தொழிலாளர் சட்டங்களை ரத்து செய்ய வேண்டும்; வரைவு விதை மசோதா, மின்சார சட்டத்திருத்த மசோதா, அணுமின் உற்பத்தியில் தனியாரை அனுமதிக்கும் மசோதாவை திரும்பப் பெற வேண்டும் என்பது போராட்டங்களில் ஈடுபட்ட தொழிற்சங்கங்களின் முக்கிய கோரிக்கைகளாகும்.

## ராகுலுடன் பிரவீன் சக்கரவர்த்தி சந்திப்பு

டெல்லி, பிப். 13-

டெல்லியில் மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தியுடன், காங்கிரஸ் நிர்வாகி பிரவீன் சக்கரவர்த்தி நேற்று சந்தித்துப் பேசினார்.

காங்கிரஸ் - தி.மு.க. கூட்டணி பேச்சு தொடங்காத நிலையில் சோனியா இல்லத்தில் ராகுல் காந்தியுடன் பிரவீன் சக்கரவர்த்தி சந்தித்துள்ளார். தமிழ்நாடு சட்டப்பேரவைத் தேர்தல் நிலவரம் உள்ளிட்ட பல்வேறு அம்சங்கள் குறித்து இருவரும் ஆலோசனை நடத்தியதாகக் கூறப்படுகிறது.

தமிழகத்தில் ஆட்சியில் பங்கு கோரிக்கை தொடர்பான சர்ச்சை நீடிக்கும் நிலையில், ராகுலுடனான இந்த சந்திப்பு முக்கியத்துவம் பெறுகிறது. ராகுல் காந்தியுடனான சந்திப்புக்குப் பிறகு பிரவீன் சக்கரவர்த்தி சென்னைக்குத் திரும்புவார் எனக் கூறப்படுகிறது.

# வங்கக்கடல் பகுதியில் பிப்.15-ல் உருவாகிறது புதிய புயல் சின்னம்

சென்னை, பிப். 13-

வங்கக்கடல் பகுதியில் வருகிற 15-ந் தேதி புதிய காற்றழுத்த தாழ்வு உருவாகக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

பூமத்திய ரேகைக்கு அருகிலுள்ள இந்தியப் பெருங்கடலின் கிழக்கு பகுதிகள் மற்றும் அதனை ஒட்டிய தென் கிழக்கு வங்கக்கடல் பகுதிகளின் மேல் ஒரு வளிமண்டல மேலடுக்கு சுழற்சி நிலவுகிறது. இதன் காரணமாக பிப். 15-ல் காற்றழுத்த தாழ்வுப்பகுதி அதே பகுதிகளில் உருவாகக்கூடும்.

தென் தமிழகம் மற்றும் அதனை ஒட்டிய பகுதிகளின் மேல் ஒரு வளிமண்டல கீழடுக்கு சுழற்சி நிலவுகிறது. வருகிற 12-ம் தேதி தென் தமிழக கடலோர மாவட்டங்களில் ஒரிரு இடங்களில் லேசான மழை பெய்யக்கூடும். இதர தமிழகம், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளில் வறண்ட வானிலை நிலவக்கூடும். 13-ந் தேதி தேனி, விருதுநகர், தென்காசி, திருநெல்வேலி மாவட்டங்களில் ஒரிரு இடங்களில் லேசான மழை பெய்யக்கூடும். இதர தமிழகம், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளில் வறண்ட வானிலை நிலவக் கூடும். 14-ந் தேதி தென் தமிழகத்தில் ஒரிரு இடங்களில் லேசான மழை பெய்யக்கூடும். வட தமிழகம், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளில் வறண்ட வானிலை நிலவக்கூடும்.

13-ந் தேதி ராணிபேட்டை, வேலூர், திருப்பத்தூர், கிருஷ்ணகிரி, தருமபுரி, திண்டுக்கல், நீலகிரி சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம், செங்கல்பட்டு, ஈரோடு, சேலம் மற்றும் நாமக்கல் மாவட்டங்களில் ஒரிரு இடங்களில் அதிகாலை வேளையில் லேசான பனி மூட்டம் காணப்படும். 14-ந் தேதி கிருஷ்ணகிரி, தருமபுரி, சேலம், நாமக்கல், திண்டுக்கல், நீலகிரி, சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம், செங்கல்பட்டு, ராணிபேட்டை, வேலூர் மற்றும் திருப்பத்தூர் மாவட்டங்களில் ஒரிரு இடங்களில் அதிகாலை வேளையில் லேசான பனி மூட்டம் காணப்படும். 15, 16-ம் தேதி கிருஷ்ணகிரி, தர்மபுரி, சேலம், நாமக்கல், திண்டுக்கல், நீலகிரி, காஞ்சிபுரம், ராணிபேட்டை, வேலூர் மற்றும் திருப்பத்தூர் மாவட்டங்களில் ஒரிரு இடங்களில் 15 ஆம் தேதி அதிகாலை வேளையில் லேசான பனிமூட்டம் காணப்படும்.

17-ம் தேதி காஞ்சிபுரம், ராணிபேட்டை, வேலூர், நாமக்கல், ஈரோடு, தென்காசி, கரூர், பெரம்பலூர் மாவட்டங்களில் ஒரிரு இடங்களில் 17-ம் தேதி அதிகாலை வேளையில் லேசான பனி மூட்டம் காணப்படும். 17-ம் தேதி சென்னை, திருவள்ளூர் மற்றும் செங்கல்பட்டு மாவட்டங்களில் ஒரிரு இடங்களில் அதிகாலை வேளையில் மிதமான பனி மூட்டம் காணப்படும். 12-ம் தேதி தமிழகம், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலையில் குறிப்பிடத்தக்க மாற்றதிற்கான வாய்ப்பு குறைவு. 13 முதல் 16 வரை தமிழகம், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை படிப்படியாக உயரக் கூடும். என தெரிவிக்கப்பட்டுள்ளது.

### டி.என்.பி.எஸ்.சி. குரூப்-2 பதவி:
# பொது அறிவு தேர்வுகான ஹால் டிக்கெட் வெளியீடு

சென்னை, பிப். 13-

குரூப்-2 பணியிடங்களுக்கான தாள்-2 பொது அறிவு தேர்வுக்கான ஹால் டிக்கெட் வெளியிடப்பட்டுள்ளது.

உதவி ஆய்வாளர், இளநிலை வேலைவாய்ப்பு அலுவலர், நன்னடத்தை அலுவலர், சார் பதிவாளர் நிலை-2, தனிப்பிரிவு உதவியாளர், வனவர் உள்ளிட்ட குரூப்-2 பதவிகளுக்கும், முதுநிலை ஆய்வாளர், உதவி ஆய்வாளர், தணிக்கை ஆய்வாளர், மேற்பார்வையாளர், உதவியாளர் நிலை-3, உதவியாளர், முதுநிலை வருவாய் ஆய்வாளர், செயல் அலுவலர் நிலை-3, கீழ்நிலை செயலிட எழுத்தர் ஆகிய குரூப்-2ஏ பதவிகளுக்கும் மொத்தம் 828 காலிப் பணியிடங்களுக்கான அறிவிப்பு கடந்த ஆண்டு (2025) ஜூலை மாதத்தில் வெளியிடப்பட்டது.

இதற்கான முதல்நிலைத் தேர்வு கடந்தாண்டு செப்டம்பர் 28-ம் தேதி நடைபெற்ற நிலையில் இந்தத் தேர்வை 4,20,217 பேர் எழுதியிருந்தனர். தேர்வு முடிவு கடந்த டிசம்பரில் வெளியானதைத் தொடர்ந்து குரூப்-2 பதவிகளில் 1,126 பேரும், குரூப்-2ஏ பதவிகளில் 9,457 பேரும் தகுதி பெற்றனர். கடந்த ஞாயிற்றுக்கிழமை காலையில் குரூப்-2ஏ பதவிகளுக்கான பாடத்தேர்வும், பிற்பகலில் குரூப்-2, 2ஏ பதவிகளுக்கான தமிழ்த் தகுதித்தாள் தேர்வும் நடைபெறவிருந்தது.

பல்வேறு குளறுபடிகளால் தமிழ்நாடு முழுவதும் தேர்வுகள் ரத்து செய்யப்படுவதாகவும் ஆனால், வருகிற 22-ம் தேதி நடைபெறவுள்ள ஒருங்கிணைந்த குடிமைப் பணிகள் தேர்வு (குரூப்-2) பொது அறிவு தேர்வு (தாள்-2) வழக்கம்போல் அன்றைய தினமே நடத்தப்படும் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் நடத்தும் குரூப்2 பணியிடங்களுக்கான தாள்- 2 பொது அறிவு தேர்வுக்கான ஹால் டிக்கெட் வெளியிடப்பட்டுள்ளதாக தேர்வுக் கட்டுப்பாட்டு அலுவலர் அ.சண்முகசுந்தரம் அறிக்கை வெளியிட்டுள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், "தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் நேரடி நியமனத்திற்கு அறிவிக்கை செய்யப்பட்ட ஒருங்கிணைந்த குடிமைப் பணிகளில் (குரூப்-2 மற்றும் குரூப்-2ஏ பணிகள்) பதவிகளுக்கான முதல்நிலைத் தேர்வின் முடிவுகள் கடந்தாண்டு கடந்த டிசம்பர் 22-ம் தேதி அன்று வெளியிடப் பட்டது. இதில், குரூப்-2 பணிகளில் அடங்கிய பதவிகளுக்கான தாள்-2 பொது அறிவு தேர்வானது வருகிற 22-ம் தேதி நடைபெற உள்ளது. தேர்வு எழுத அனுமதிக்கப்பட்ட விண்ணப்பதாரர்களுக்கான தேர்வுக்கூட அனுமதிச்சீட்டு - ஹால் டிக்கெட் தேர்வாணையத்தின் இணையதளமான www.tnpsc.gov.in மற்றும் www.tnpscexams.in-ல் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தினபூமியில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்

## தலைவர்கள் சொல்வதை படிங்க....



நான் சவால் விடுகிறேன். ராகுல் காந்தி உரையில் நாட்டுக்குத் தேவையான பிரச்னைகளை மட்டும்தான் எழுப்பினார். ராகுல் காந்திக்கு எதிராக பா.ஜ.க. ஒரு உரிமை மீறல் தீர்மானத்தை கொண்டு வரத் திட்டமிட்டுள்ளது. ராகுல் காந்தியின் உரைக்கு அவர்களால் (பா.ஜ.க.) பதிலளிக்க முடியுமா?

- கே.சி.வேணுகோபால்



எங்களுடைய மாவட்டச் செயலாளர்கள், நிர்வாகிகள், தொண்டர்கள் எந்த கூட்டணியை விரும்புகிறார்களோ அந்த கூட்டணியைதான் தே.மு.தி.க. அமைக்கும். எங்களுடைய கட்சி தே.மு.தி.க., என்ன முடிவு எடுக்க வேண்டும், கூட்டணியை எப்போது அறிவிக்க வேண்டும் என எங்களுடைய நிர்வாகிகளுடன் கலந்தாலோசித்துதான் செய்ய முடியும்.

- பிரேமலதா



அமெரிக்காவுடனான வர்த்தக ஒப்பந்தம் விவசாயிகளுக்கு பெரும் இழப்பை ஏற்படுத்தும். இதை எதிர்த்து முழு தொழிலாளர் சங்கமும் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளது. அவர்களை ஆதரிக்கிறோம். ராகுலுக்கு எதிராக வழக்குகள் உள்ளிட்ட வேறு எதையும் அவர்கள் செய்வார்கள். ஆனால் எதுவும் ராகுல்காந்தியை பாதிக்க போவதில்லை.

- பிரியங்கா காந்தி



தமிழ்நாட்டில் இருந்து தி.மு.க. ஆட்சியை அகற்ற வேண்டும் என்பதே எங்களது தேசிய ஜனநாயக கூட்டணியின் நோக்கம். அ.தி.மு.க.விடம் நாங்கள் ஆட்சியில் பங்கு கேட்கவில்லை. ஆட்சியில் பங்கு மட்டுமில்லை. எதையுமே அ.தி.மு.க.விடம் நாங்கள் கேட்கப் போவதில்லை.

- நயினார் நாகேந்திரன்

# வீரடிப்பட்டியில் தொடக்க வேளாண்மை கடன் சங்க கிளை அமைச்சர் எஸ்.ரகுபதி குத்து விளக்கு ஏற்றி தொடங்கி வைத்தார்



**கந்தர்வகோட்டை,பிப்.13-**

புதுக்கோட்டை மாவட்டம், கந்தர்வகோட்டை கந்தர்வகோட்டை அருகில் உள்ள மட்டங்கால் தொடக்க வேளாண்மை கடன் சங்கத்தின் வீரடிப்பட்டியில் கிளையினை இயற்கை வளங்கள் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி குத்துவிளக்கு ஏற்றித் தொடங்கி வைத்து 7 பயனாளிகளுக்கு 12 லட்சம் மதிப்பில் நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.புதுக்கோட்டை சரக துணை சார்பதிவாளர் மணிமேகலை அனைவரையும் வரவேற்றார். நிகழ்சிக்கு கந்தர்வகோட்டை சட்டமன்ற உறுப்பினர் சின்னத்துரை வங்கி செயலாட்சியர் மகேஸ்வரி, ஆகியோர் முன்னிலை வகித்தனர். கந்தர்வகோட்டை தெற்கு ஒன்றிய திமுக செயலாளர் பரமசிவம், வடக்கு ஒன்றிய செயலாளர் தமிழ்அய்யா, புதுக்கோட்டை வடக்கு மாவட்ட துணை செயலாளர் மதிவாணன், தெற்கு ஒன்றிய துணைச் செயலாளர் ரவிச்சந்திரன் மத்திய கூட்டறவு வங்கி சரக மேற்பார்வையாளர் சிவகுமார் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். இறுதியாக கூட்டுறவு சங்க மேற்பார்வையாளர் பழனிவேல் நன்றி கூறினார்.

# புதுக்கோட்டை மாவட்ட கடல் பகுதியில் செயற்கை பவளப்பாறைகள் நிறுவும் பணி

## செய்தியாளர்கள் சென்று கலெக்டர் மு.அருணா பார்வையிட்டார்



**புதுக்கோட்டை,பிப்.13-**

புதுக்கோட்டை மாவட்டம், கோட்டைப்பட்டிணம் கடல் பகுதியில், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை சார்பில், செயற்கை பவளப்பாறைகள் நிறுவும் பணியினை, கலெக்டர் மு.அருணா, (07.02.2026) செய்தியாளர்கள் பயணத்தின்போது, நேரில் பார்வையிட்டார்.

பின்னர் கலெக்டர் தெரிவித்ததாவது;

தமிழ்நாடு அரசு மீனவர்களின் நலன் மற்றும் வாழ்வாதாரத்தினை கருத்தில் கொண்டு மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை மூலமாக பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. அந்தவகையில், தற்போதைய சூழலில் கடலில் மீன்வளம் குறைந்து வரும் சூழல் உள்ளதால் மீனவர்களுக்கு போதிய அளவு தினசரி மீன்பிடிப்பு கிடைக்கப் பெறாமல் வருவாய் இழப்பு ஏற்படுகிறது.

அதன்படி, கடலில் மீன்வளத்தை அதிகரித்திடவும், வளம்குன்றா மீன்வளத்தை பாதுகாத்திடவும், கடலில் செயற்கை பவளப்பாறைகள் அமைக்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதில், புதுக்கோட்டை மாவட்டத்தில் மத்திய, மாநில அரசின் பங்கு திட்டமான, பிரதமமந்திரி மீன்வள மேம்பாட்டுத்திட்டத்தின்கீழ் 8 மீனவ கிராமங்களில் உள்ள கடல் பகுதியில் செயற்கை பவளப் பாறைகள் அமைக்கும் திட்டம் செயல்படுத்தப்படவுள்ளது.

இத்திட்டத்திற்காக தமிழ்நாடு அரசால் ரூ.9.92 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுஇ மூன்று வகை வடிவங்களில் (முக்கோண வடிவம்-3,360, கிணறு வட்ட வடிவம்-1600 மற்றும் குழு வடிவம்-800) மொத்தம் 5,760 எண்ணிக்கை செயற்கை பவளப் பாறைகள் கட்டுமான பணிகள் முடிக்கப்பட்டு, அவற்றை கடலில் நிறுவும் பணி கோட்டைப்பட்டிணம் கடல் பகுதியில் சுமார் 900 எண்ணிக்கை செயற்கை பவளப்பாறைகள் நிறுவும் பணி செய்தியாளர்கள் பயணத்தின்போது, நேரில் பார்வையிடப்பட்டது. இந்த செயற்கை பவளப் பாறைகள், மீன்கள் இனப்பெருக்கம் செய்திடவும், மீன்குஞ்சுகள் பாதுகாப்பாக வளர்ந்திடவும், மீன்களுக்கு உறைவிடமாகவும் செயல்படும். இதனால் அப்பகுதியில் மீன்வளம் மற்றும் இதர கடல் உயிரினங்கள் அதிகளவில் உற்பத்தி செய்திடவும் வழிவகுக்கும். இதன் மூலம் வளங்குன்ற மீனவள மேலாண்மை, பல்லுயிர் பெருக்க மேலாண்மைக்கும் சிறப்பாக அமையும். மீன்வளம் அதிகரிப்பதன் மூலம் மீனவர்களுக்கு தினசரி மீன்பிடிப்புத்திறன் மற்றும் அளவு அதிகரித்து அதிக வருவாய் ஈட்டிடவும் வாழ்வாதாரம் உயர்ந்திடவும் பெரிதும் உறுதுணையாக இந்த செற்கை பவளப்பாறைகள் அமையும். எனவே, இப்பணிகளை தொடர்புடைய அரசு அலுவலர்கள் விரைவாகவும், தரமாகவும் முடித்து பயன்பாட்டிற்கு கொண்டுவர அறிவுறுத்தப்பட்டுள்ளது எனவும் கலெக்டர் மு.அருணா, அவர்கள செய்தியாளர்கள் பயணத்தின்போது, தெரிவித்தார்.

இந்நிகழ்வில், துணை இயக்குநர் (மீன்வளத்துறை - திருச்சி) மா.வெ.பிரபாவதி, உதவி இயக்குநர் (மீன்வளத் துறை - புதுக்கோட்டை) ந. பஞ்சராஜா, உதவி செற்பொறியாளர் (மீன்பிடித்துறைமுக திட்டக்கோட்டம்) விக்னேஷ்வர், மீனவ சங்க பிரதிநிதிகள், மீனவர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்துகொண்டனர்.

# திருவாரூர் மாவட்ட லாரி உரிமையாளர் சங்கத்தினர் கலெக்டர் மோகனச்சந்திரனிடம் கோரிக்கை மனுவினை அளித்தனர்



**திருவாரூர்,பிப்.13-**

திருவாரூர் மாவட்ட லாரி உரிமையாளர் சங்கத்தினர் கனரக வாகனங்களுக்கு தகுதிச்சான்றிதழ் புதுப்பிக்கும் கட்டணம் பல மடங்கு ஏற்றப்பட்டதை மத்திய அரசு திரும்ப பெற வலியுறுத்தி மாவட்ட கலெக்டர் மோகனச்சந்திரனிடம் கோரிக்கை மனு அளித்தனர்.மத்திய அரசு கனரக வாகனங்களுக்கு தகுதிச்சான்றிதழ் புதுப்பிக்கும் கட்டணத்தை 40 சதவிகிதம் உயர்த்தியதால் லாரி உரிமையாளர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது மட்டுமின்றி விவசாய தொழில்கள் மூலம் விவசாயிகளும் பாதிப்படையஉள்ளனர்.பழைய கட்டணம் அனைத்து வகையான லாரிகளுக்கும் ஒரே மாதிரியான விலையில் இருந்து வந்த நிலையில் தற்பொழுது உயர்த்தி உள்ள கட்டணம் பிரிவினைகளை ஏற்படுத்தும் வகையில் உள்ளதாக கூறி லாரி உரிமையாளர்கள் மத்திய அரசு கண்டித்தும்,உடனடியாக தகுதிச்சான்றிதழ் புதுப்பிக்கும் கட்டணம் பல மடங்கு ஏற்றியதை திரும்பப் பெற வலியுறுத்தியும் திருவாரூர் மாவட்டத்தில் ஆயிரத்திற்க்கும் மேற்பட்ட லாரி உரிமையாளர்கள் வேலைநிறுத்தம் செய்தனர்.தொடர்ந்து திருவாரூர் மாவட்டம் லாரி உரிமையாளர் சங்கம் -திருவாரூர், மன்னார்குடி, திருத்துறைப்பூண்டி,நன்னிலம், குடவாசல், வலங்கைமான் உள்ளிட்ட தாலுகா லாரி உரிமையாளர்கள் மற்றும் சங்க நிர்வாகிகள் வருகைதந்து திருவாரூர் கலெக்டர் அலுவலகத்தில் கலெக்டர் மோகனச்சந்திரனிடம் கனரக வாகனங்களுக்கு தகுதிச்சான்றிதழ் புதுப்பிக்கும் கட்டணம் பல மடங்கு உயர்த்தப்பட்டதை திரும்பபெற மத்தியஅரசை வலியுறுத்தும் விதமாக பேரணியாக வருகை தந்து மனு அளித்தனர்.இந்த நிகழ்வில் மாவட்டதலைவர் ஐயப்பன்,பொதுச் செயலாளர் பாண்டியன்,மாவட்ட பொருளாளர் ஆறுமுகம் உட்பட திருவாரூர் மாவட்ட,தாலுகாவில் உள்ள அனைத்து சங்க நிர்வாகிகள்,உறுப்பினர்கள் என ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

# அரியலூர் மாவட்டத்தில் என் ஊர் என் கனவு திட்டத்தின் 2030 மாவட்ட அளவிலான கருத்தரங்கம் அமைச்சர் சா.சி.சிவசங்கர் தலைமையில் நடைபெற்றது



**அரியலூர்,பிப்.13-**

அரியலூர் மாவட்டம், அரியலூர் தனியார் அரங்கில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் சார்பில் என் ஊர் என் கனவு திட்டம் 2030 மாவட்ட அளவிலான கருத்தரங்கினை போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் (12.02.2026) துவக்கி வைத்து, உரையாற்றினார்.

இந்நிகழ்ச்சியில் கலெக்டர் பொ.இரத்தினசாமி, , அரியலூர் சட்டமன்ற உறுப்பினர் கு.சின்னப்பா, ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் க.சொ.க.கண்ணன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

என் ஊர் என் கனவு திட்டம் 2030 மாவட்ட அளவிலான கருத்தரங்கினை துவக்கி வைத்து போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் தெரிவித்ததாவது:

தமிழ்நாடு முதலமைச்சர் தொலைநோக்கு பார்வையுடன் தமிழ்நாட்டின் முன்னேற்றத்திற்காக பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். ஆட்சி பொறுப்பேற்றது முதல் ஒவ்வொரு மாதமும் புதிய திட்டங்களை துவங்குவதற்கு தேவையான பணிகளை மேற்கொண்டு வருகிறார். அந்த வகையில் தமிழ்நாடு முன்னேற்றம் பெறுவதற்கு 1 ட்டிரில்லியன் டாலர் பொருளாதாரம் என்ற மாபெரும் திட்டத்தினை அறிவித்து அந்த கனவு தற்போது நனவாகியுள்ளது. அதன்படி ஜெயங்கொண்டத்தில் சிப்காட் காலணி தொழிற்சாலை அமைப்பதற்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டு, சுற்றுச்சூழல் துறையின் அனுமதி பெற்று அணுகு சாலைகள் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகிறது. பெரம்பலூர் மாவட்டத்தில் தமிழ்நாடு முதலமைச்சர் உத்தரவின்படி காலணி தொழிற்சாலைகள் துவங்கப்பட்டு சுமார் 10,000 நபர்களுக்கு பணி வாய்ப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதேபோன்று அரியலூர் மாவட்டம், ஜெயங்கொண்டத்தில் காலணி தொழிற்சாலை துவங்கும் போது அப்பகுதியை சேர்ந்த பெண்களுக்கு அதிகளவிலான வேலைவாய்ப்புகள் கிடைக்கப்பெறும். தமிழ்நாட்டில் சுகாதாரத்தினை மேம்படுத்தக் கூடிய திட்டங்கள், வெளிநாடு முதலீடுகளை ஈர்க்கக்கூடிய திட்டங்கள் மற்றும் மாவட்டங்களில் உள்ள வேலை வாய்ப்பை ஏதிர் பார்ப்பவர்களுக்கான திட்டங்களும் செயல்படுத்தப்படுகிறது.

அதன் தொடர்ச்சியாக மக்களின் கோரிக்கையினை கேட்டு அதனை நிறைவேற்றும் வகையில் என் ஊர் என் கனவு என்ற திட்டம் தொடர்பான கருத்தரங்கம் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி இன்றையதினம் நடைபெறுகிறது. பெருகிவரும் தொழில்நுட்ப வளர்ச்சி மற்றும் மாறிவரும் தொழில்நுட்ப சூழல்கள் காரணமாக வேலைவாய்ப்பிற்கு ஆட்கள் தேர்வு செய்வது குறைவாகி தொழில்நுட்ப உபகரணங்கள் மூலமாகவே பணி மேற்கொள்ளும் சூழல் உருவாகியுள்ளது. எங்கு பெருமளவில் மனித உழைப்பிற்கான வாய்ப்புகள் உள்ளதோ அதற்கான தொழிற்சாலைகள் ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகிறது. பொதுமக்கள் தங்களுக்கு தேவையான திட்டங்கள் குறித்து தெரிவிக்கலாம். 1000 ஆண்டுகளுக்கு முன்னர் மாமன்னர் ராஜேந்திர சோழனால் எழுப்பப்பட்டுள்ள கோவில் அமைந்துள்ள கங்கைகொண்ட சோழபுரத்தில் மாமன்னர் ராஜேந்திர சோழனின் காலத்தில் ஏற்பட்ட தொழில்நுட்ப வளர்ச்சிகள், சிற்ப கலைகளின் பயன்பாடு குறித்த தகவல்களை அறிந்து கொள்ளும் வகையில் அருங்காட்சியகம் அமைப்பதற்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் நிதி ஒதுக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது.

வேளாண் பணிகள் தொடர்பாக மாவட்ட அளவிலான திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டு மாநில அளவிலான திட்டக்குழுவிடம் மேல் நடவடிக்கைகாக அறிக்கை சமர்ப்பிக்கப்படுகிறது. முந்திரி சார்ந்த விவசாயிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துதல் தொடர்பாக கூடுதலாக மேற்கொள்ளப்பட வேண்டிய கருத்துக்களை தெரிவிக்கலாம். கல்வியினை பொறுத்தமட்டில் சில வருடங்களுக்கு முன்னர் அரசு தேர்வு முடிவுகள் வெளியிடப்படும் போது அரியலூர், பெரம்பலூர் மாவட்டங்கள் கடைசி நிலையில் இருக்கும். ஆனால் தற்போது பெரம்பலூர் மற்றும் அரியலூர் மாவட்டங்கள் மாநில அளவில் முதலிடம் பெறுகின்றன. அரியலூர் மாவட்டத்தைச் சேர்ந்த ஹாக்கி விளையாட்டு வீரர்கள் இந்திய அணிக்கு தேர்வாகின்றனர். விளையாட்டுத்துறையை மேம்படுத்தும் வகையில் தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களால் அரியலூர் மாவட்ட விளையாட்டு அரங்கில் ஹாக்கி செயற்கை இழை மைதானம் அமைப்பதற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட இருக்கிறது. எனவே அரியலூர் மாவட்டம் கல்வியில், விளையாட்டில், சுற்றுலாவில், வேளாண்மையில் உள்ளிட்ட அனைத்திலும் முன்னேற்றம் பெறுவதற்கு என் ஊர் என் கனவு திட்டத்தின் கீழ் கருத்துக்களை வழங்கலாம் என போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் தெரிவித்தார்.

மேலும் இக்கருத்தரங்கம் அரியலூர் மாவட்டத்தை மேம்படுத்தும் வகையில் உட்கட்டமைப்பு, தொழிற்சாலை, சுகாதாரம், சமூக நீதி, இளைஞர் முன்னேற்றம், வேளாண்மை, நிலைத்தன்மை மற்றும் சுற்றுலா உள்ளிட்டவற்றை கருப்பொருளாக கொண்டு நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் முனைவர்.ஆ.ரா.சிவராமன், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் திட்ட இயக்குநர் சு.தேன்ராஜ், அரியலூர் நகர்மன்றத் தலைவர் சாந்தி கலைவாணன், மாவட்ட நிலை அலுவலர்கள், அனைத்துத்துறை அரசு அலுவலர்கள், நகர்மன்ற உறுப்பினர்கள், பொதுமக்கள் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

# திருவாரூர் மாவட்டம், வலங்கைமான் அரசினர் பலவகை தொழில்நுட்ப கல்லூரியில் 279 மாணவ, மாணவியர்களுக்கு மடிக்கணினிகள்

## கலெக்டர் , எம்.எல்.ஏ. வழங்கினர்



**திருவாரூர்,பிப்.13-**

திருவாரூர் மாவட்டம், வலங்கைமான் அரசினர் பலவகை தொழில்நுட்ப கல்லூரியில் "உலகம் உங்கள் கையில்" என்னும் மாபெரும் திட்டத்தின் கீழ் 279 மாணவ, மாணவியர்களுக்கு மடிக்கணினிகளை திருவாரூர் கலெக்டர் வ.மோகனச்சந்திரன், , திருவாரூர் சட்டமன்ற உறுப்பினர் பூண்டி.கே.கலைவாணன் அவர்களும் வழங்கினார்கள்.

இந்நிகழ்வில் கலெக்டர் மாணவ, மாணவியர்களிடம் தெரிவித்ததாவது...

தமிழ்நாடு அரசு மாணவர்களின் நலன் மற்றும் முன்னேற்றத்தைக்கருத்தில் கொண்டு தமிழ்ப் புதல்வன் திட்டம், புதுமைப் பெண் திட்டம், முதல் தலைமுறை பட்டமளிப்பு திட்டம், சமூக நீதி விடுதிகள் போன்ற பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது.

இத் திட்டங்களின் தொடர்ச்சியாக, மாணவர்கள் நவீன உலகின் தேவைகளுக்கு ஏற்ப டிஜிட்டல் திறன் பெற "உலகம் உங்கள் கையில்" என்னும் அறிவூட்டும் கருப்பொருளின் கீழ் கல்லூரியில் பயிலும் மாணவ, மாணவியர்க்கு மடிக்கணினிகள் வழங்கும் திட்டத்தினை செயல்படுத்துகிறது. அரசு வழங்கும் விலையில்லா மடிக்கணினிகள், கல்வி வளர்ச்சிக்கு மட்டுமல்லாமல், வேலைவாய்ப்பு உருவாக்கத்திற்கும், சமூக-பொருளாதார முன்னேற்றத்திற்கும் நேரடி ஆதாரமாக பயன்படுத்திக்கொள்ள வேண்டும். டிஜிட்டல் திறன் மேம்பாடு மூலம் மாணவர்கள் தகவல் தொழில்நுட்பத் துறை, மென்பொருள் உருவாக்கம், தரவு உள்ளீடு, டிஜிட்டல் சந்தைப்படுத்தல், வரைகலை வடிவமைப்பு, குறியிடுதல், வலை வடிவமைப்பு, செயற்கை நுண்ணறிவு கருவிகள், சுயாதீன வேலை போன்ற துறைகளில் சிறந்து விளக்க நல்ல முறையில் பயன் படுத் திக் கொள்ள வேண்டுமென திருவாரூர் கலெக்டர் வ.மோகனச்சந்திரன், தெரிவித்துள்ளார்.

இந்நிகழ்ச்சியில், வலங்கைமான் அரசினர் பலவகை தொழில்நுட்பக்கல்லூரி லூ. ஜாண்லூயிஸ், வலங்கைமான் வட்டாட்சியர் ஓம்சிவகுமார் உள்ளிட்ட அரசு அலுவலர்கள் மாணவ, மாணவிகள் கலந்து கொண்டனர்.

# திருவாரூரில் தவறவிட்ட 20 பவுன் தங்க நகையினை உரியவர்களிடம் ஒப்படைத்த துய்மை பணியாளர்

## நகை கடை உரிமையாளர்கள் சார்பில் பாராட்டு விழா



**திருவாரூர்,பிப்.13-**

திருவாரூர் விருப்பாச்சி நடப்பு தெருவில் கூடுவாஞ்சேரியை சேர்ந்த ராதாகிருஷ்ணன் குடும்பத்தினர் தனது மகளின் திருமணத்திற்காக சேர்த்து வைத்திருந்த இருபது சவரன் தங்க நகை மற்றும் ஒரு கிலோ வெள்ளி பொருட்களை ஆட்டோவில் செல்லும்போது தவறவிட்ட நிலையில் அதனை கண்டெடுத்த திருவாரூர் நகராட்சியில் பணிபுரியும் தூய்மை பணியாளர் துரை என்பவர் நகர காவல் நிலையத்தில் ஒப்படைத்த நிலையில் அந்த நகை உரியவர்களிடம் வழங்கப்பட்டது. இதனையடுத்து தூய்மை பணியாளர் துரையின் நேர்மையை பாராட்டி பல்வேறு தரப்பிலிருந்தும் பாராட்டுக்களும் பரிசுகளும் குவிந்து வருகிறது.இந்த நிலையில் அதன் ஒரு பகுதியாக திருவாரூர் விஜயபுரம் பகுதியில் அமைந்துள்ள ரேணுகா ஜுவல்லரி என்கிற கடையில் வைத்து பாராட்டு விழா நடத்தப்பட்டது.அப்போது தூய்மை பணியாளர் துரை மற்றும் அவரது மனைவி சித்ராவிற்கு பொன்னாடை போர்த்தி மலர் மாலை அணிவித்து அந்த கடையை சேர்ந்த ஊழியர்கள் கர ஒலி எழுப்பி வரவேற்றனர்.மேலும் அந்த நகை கடை சார்பில் அவருக்கு பத்தாயிரம் ரூபாய் ரொக்க பரிசும்,பத்தாயிரம் ரூபாய் மதிப்புள்ள வீட்டு உபயோக பொருட்களும் வழங்கப்பட்டன.மேலும் திருவாரூர் காசு கடை வர்த்தகர்கள் சங்கம் சார்பில் துரை மற்றும் அவரது மனைவிக்கு சித்ராவுக்கு பொன்னாடை போர்த்தி வாழ்த்து தெரிவித்ததுடன் ஐநது ஆயிரம் ரூபாய் ரொக்க பரிசையும் வழங்கி பாராட்டு தெரிவித்தனர்.குறிப்பாக பொதுமக்கள் அனைவரும் இவரை முன் மாதிரியாக எடுத்துக்கொண்டு மற்றவர்களின் பொருட்களுக்கு ஆசைப்படாமல் உரியவரிடம் அதை ஒப்படைக்க வேண்டும் என்பதை ஊக்கப்படுத்தும் விதமாக இந்த நிகழ்ச்சி நடத்தப்பட்டதாக நகைக்கடை உரிமையாளர்கள் ரவி சந்திரன், செல்வ ராஜ், வெங்கடேஷ் ஆகியோர் தெரிவித்தனர்.

# புதுக்கோட்டை மௌண்ட் சீயோன் மெட்ரிக் பள்ளியின் 38 வது ஆண்டு விழா



**புதுக்கோட்டை,பிப்.13-**

புதுக்கோட்டை மௌண்ட் சீயோண் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில் 38வது ஆண்டு விழா கொண்டாடப்பட்டது நிகழ்ச்சியில் சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி எஸ் ஸ்ரீமதி தலைமை விருந்தினராக கௌரவ விருந்தினராக பள்ளியின் முன்னாள் மாணவரும் தூத்துக்குடி வ உ சி சிதம்பரனார் துறைமுக துணைத் தலைவருமான ராஜேஷ் சௌந்தரராஜன் கலந்து கொண்டனர்

மௌண்ட் சீயோன் பள்ளியின் துணைத் தலைவர் ஏஞ்சலின் ஜொனார்த்தனன் பிரார்த்த மையுடன் விழாவை தொடங்கியது பள்ளியின் தலைவர் ஜோனார்த்தன் ஜெயபாரதன் சிறப்பு விருந்தினர்களை அறிமுகம் செய்து வைத்து பொன்னாடை போர்த்தி நினைவு பரிசு வழங்கினார்பின்னர் 2025 26 ஆம் ஆண்டுக்கான பள்ளியின் ஆண்டு அறிகை வாசித்தார் பள்ளியின் இணை நிறுவனர் ஜெயபரதன் தலைமை உரை ஆற்றினார் கௌரவ விருந்தினர் ராஜேஷ் சௌந்தரராஜன் பேசுகையில் தனது பள்ளி வாழ்க்கையை நினைவு கூறுவதோடு தினமும் கற்றல் அவசியம் என்றும் வலியுறுத்தினார் உயர்நீதி நீதிமன்ற நீதிபதி எஸ் ஸ்ரீமதி பேசினார்கள் மாணவர்கள் அன்றாடம் வீட்டு வேலைகளில் ஈடுபட வேண்டும் என்றும் போதை பொருள்கள் மற்றும் இரவு நேரங்களில் செல்போன் "பயன்பாட்டால் ஏற்படும் தீமைகள் குறித்தும் எடுத்துரைத்தார் தொடர்ந்து 2024 25 ஆம் ஆண்டிற்கான கல்வியாண்டில் பொதுத் தேர்வில் 600 க்கு 596 மதிப்பெண்கள் பெற்ற மாநில அளவில் நான்காம் இடம் இடமும் மாவட்ட அளவில் முதலிடம் பிடித்த பாலவீர் ஸ்வேதாவுக்கு விருது வழங்கி கௌரவிக்கப்பட்டது இவர் தமிழ் இயற்பியல் வேதியல் கணிதம் ஆகிய நான்கு பாடங்களில் தலா 100 மதிப்பெண்கள் பெற்றுள்ளனர் கல்வி மற்றும் விளைய விளையாட்டில் சாதனை படைத்த மாணவர்களுக்கு கேடயங்கள் வழங்கப்பட்டது தொடர்ந்து யுகேஜி முதல் ஒன்பதாம் வரை பயிலும் மாணவர் மாணவிகளின் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன இதில் பல்வேறு பாரம்பரிய மற்றும் மேற்கிந்திய நடனங்களும் அரங்கேற்கப்பட்டன வீரமங்கை வேலுநாச்சியாரின் சரித்திர நிகழ்வை மாணவர்கள் நாடகமாக நடித்துக் காட்டினர் பள்ளி முதல்வர் எஸ் குமரேஷ் நன்றி கூறினார் நிகழ்வின் முதல்வர் எஸ் கிருபா ஜெயராஜ் ஆகியோர் விழாவிற்கான ஏற்பாடுகளை செய்திருந்தனர்

# திருமருகலில் மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகளின் சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம்

**நாகப்பட்டினம்,பிப்.13-**

நாகை மாவட்டம் திருமருகல் பேரூந்து நிலையம் அருகில் மகாத்மா காந்தியின் பெயரை நீக்கி 100 - நாள் வேலை திட்டத்தை ஒழிக்கும் சட்டம் கொண்டு வந்ததையும், ஒன்றிய பட்ஜெட்டில் தமிழ்நாட்டை வஞ்சித்த ஒன்றிய பாஜக அரசையும் அதற்கு துணை போகும் அதிமுகவையும் கண்டித்து மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகளின் சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் வியாழக்கிழமை நடைபெற்றது.

இந்த ஆர்ப்பாட்டத்திற்கு நாகை மாவட்ட திமுக அவைத் தலைவர் ப.செல்வம் தலைமையில் திருமருகல் வடக்கு ஒன்றிய திமுக செயலாளர் செல்வ செங்குட்டுவன் முன்னிலையில் மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சியின் நிர்வாகிகள் திரளாக கலந்து கொண்டு கண்டன கோஷங்கள் எழுப்பினர். திருக்கண்ணபுரத்தில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு திமுக தெற்கு ஒன்றிய செயலாளர்

ஆர்.டி.எஸ்.சரவணன் தலைமையிலும் மாவட்ட திமுக இளைஞரணி அமைப்பாளர் பி.என்.கார்த்தி முன்னிலையிலும் திட்டச்சேரியில் பேரூர் செயலாளர் முகமது சுல்தான் தலைமையிலும் திமுக மாவட்ட பிரதிநிதிகள் குணசேகரன், ஹமீது ஜெகபர் ஆகியோர் முன்னிலையிலும் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இந்த ஆர்ப்பாட்டத்தில் மதசார்பற்ற கூட்டணி கட்சி நிர்வாகிகள் திரளாக கலந்து கொண்டனர்.

வாகனங்கள் ஓட்டும் போது செல்போன் பேசாதே... பேசுவது எமனாக இருக்கலாம்

## உள்துறை அமைச்சர் அமித்ஷா பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்பதற்காக திருச்சி மாவட்டத்திற்கு வருகை தரவுள்ளதை முன்னிட்டு ட்ரோன்கள் பறக்க தடை

### கலெக்டர் வே.சரவணன் அறிவிப்பு

திருச்சி,பிப்.13-

இந்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்பதற்காக திருச்சிராப்பள்ளி மாவட்டத்திற்கு வருகை தரவுள்ளதை முன்னிட்டு பாதுகாப்பு காரணம் கருதி 13.02.2026 மற்றும் 14.02.2026 ஆகிய நாட்களில் ட்ரோன்கள் பறக்க தடை விதிக்கப்படுகிறது.

எனவே 13.02.2026 மற்றும் 14.02.2026 ஆகிய நாட்களில் தடையை மீறி ட்ரோன்கள் மற்றும் இதர ஆளில்லா வான்வழி வாகனங்கள் பறக்கவிடும் நபர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும் என கலெக்டர் வே.சரவணன், தெரிவித்துள்ளார்.

தின பூமி நாளிதழில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்

## பெரம்பலூர் மாவட்டத்தின் முன்னேற்றத்திற்கு செயல்படுத்த வேண்டிய திட்டங்கள் குறித்து பொதுமக்களிடையே கருத்து கேட்கும் நிகழ்ச்சி அமைச்சர் சா.சி.சிவசங்கர் தலைமையில் நடைபெற்றது



பெரம்பலூர்,பிப்.13-

என் ஊரு என் கனவு" திட்டத்தின் மூலம் 2030ஆம் ஆண்டிற்குள் பெரம்பலூர் மாவட்டத்தின் முன்னேற்றத்திற்கு செயல்படுத்த வேண்டிய திட்டங்கள் குறித்து பொதுமக்களிடையே கருத்து கேட்கும் நிகழ்ச்சி போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் தலைமையில் கலெக்டர் ந.மிருணாளினி , பெரம்பலூர் சட்டமன்ற உறுப்பினர் ம.பிரபாகரன் ஆகியோர் முன்னிலையில் மாவட்ட கலெக்டர் அலுவலக கூட்டரங்கில் (12.02.2026) நடைபெற்றது.

இந்நிகழ்வில் போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் தெரிவித்ததாவது:

தமிழ்நாடு முதலமைச்சர் , பொதுமக்களின் நலன் கருதி தொடர்ந்து பல்வேறு புதிய திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வருகிறார்கள்.

மாணவ, மாணவிகள் எவ்வித தடையும் இல்லாமல் உயர் கல்வி பயில்வதற்கு மாதந்தோறும் ரூ.1,000 வழங்கும் தமிழ் புதல்வன் திட்டம் மற்றும் புதுமைப் பெண் திட்டம் என வரலாற்று சிறப்புமிக்க திட்டங்களை வகுத்து செயல்படுத்தி வருகிறார்கள். மேலும் , பொதுமக்களின் குறைகளை அரசுத்துறை அலுவலர்கள் நேரில் சென்று கேட்டறிய உங்களுடன் ஸ்டாலின் என்ற சிறப்புமிக்க திட்டத்தினை செயல்படுத்தி அந்தத் திட்டத்தின் மூலம் நடத்தப்பட்ட முகாம்களில் பொதுமக்களின் தனிப்பட்ட கோரிக்கைகள் உள்ளிட்ட பல்வேறு வகையான கோரிக்கை மனுக்கள் பெறப்பட்டு, மனுக்களுக்கு விரைந்து தீர்வு கண்டு தேவையான நலத்திட்ட உதவிகளும் வழங்கப்பட்டுள்ளது.

அந்த வகையில் தற்போது ஒவ்வொரு கிராமங்களையும் வளர்ச்சி பாதைக்கு அழைத்துச் செல்லும் நோக்கத்தில், என் ஊர் என் கனவு என்ற திட்டத்தை தமிழ்நாடு முதலமைச்சர் அறிவித்துள்ளார்கள்.

இத்திட்டத்தின் மூலம் 2030 ஆம் ஆண்டுக்குள் நமது மாவட்டத்தின் வளர்ச்சிக்கு என்னென்ன திட்டங்களை செயல்படுத்தலாம் என்பது குறித்து விவசாயிகள், வர்த்தக சங்கத்தினர், சமூக ஆர்வலர்கள், பொதுமக்கள், தொழில் முனைவோர் என அனைத்து தரப்பினரிடமும் கருத்துக்களை கேட்டறிந்து அதன் அறிக்கையினை தமிழ்நாடு அரசுக்கு அனுப்பப்படவுள்ளது. ஒவ்வொரு தனி மனிதருடைய பிரச்சனையும் தீர வேண்டும் அதே சமயத்தில் தமிழ்நாட்டின் பிரச்சனையும் தீர வேண்டும் அந்த வகையில் திட்டங்களை வகுத்து செயல்பட வேண்டும் என்ற நோக்கத்தில் தமிழ்நாடு முதலமைச்சர் செயல்பட்டு வருகிறார்கள். அதற்காக பல்வேறு திட்டங்களை முன்கூட்டியே தயாரித்து வைத்துள்ளார்கள். அதன் வாயிலாக உருவாக்கப்பட்ட திட்டம் தான் என் ஊர் என் கனவு என்ற திட்டம். இத்திட்டத்தின் மூலமாக பெறப்படும் கோரிக்கைகள் அனைத்தும் தமிழ்நாடு முதலமைச்சர் விரைவில் நிறைவேற்றுவார்கள். இவ்வாறு தெரிவித்தார். .

இந்நிகழ்வில், மாவட்ட வருவாய் அலுவலர் கண்ணன், ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் தேவநாதன், வருவாய் கோட்டாட்சியர் அனிதா, அட்மா தலைவர் வீ.ஜெகதீசன், நகர் மன்றத் தலைவர் அம்பிகா ராஜேந்திரன், நகர் மன்றத் துணைத் தலைவர் ஆதவன், சமூக பாதுகாப்பு திட்ட தனித்துணை கலெக்டர் சிவக்கொழுந்து, பேரூராட்சி மன்ற தலைவர்கள் ஜாகீர் உசேன் (லெப்பைக்குடிக்காடு), பாக்கிய லெட்சுமி(பூலாம்பாடி), வள்ளியம்மை (அரும்பாவூர்) சங்கீதா ராமேஷ் (குரும்பலூர்) மற்றும் பொதுமக்கள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

## திருவாரூரில் ஒன்றிய பிஜேபி அரசை கண்டித்து மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகள் சார்பில் ஆர்ப்பாட்டம்

திருவாரூர்,பிப்.13-

ஒன்றிய நிதிநிலை அறிக்கையில் தமிழ்நாட்டை புறக்கணித்து,தமிழ்நாட்டு மக்களை வஞ்சித்து, தமிழ்நாட்டின் வளர்ச்சியை தடுத்து வரும் ஒன்றிய பிஜேபி அரசையும்,அதற்கு துணை போகும் அதிமுகவையும் கண்டித்து நேற்று தமிழகம் முழுவதும் உள்ள அனைத்து நகர,ஒன்றிய பகுதிகளில் திமுக சார்பில் கண்ட ஆர்ப்பாட்டம் நடத்த தலைமை கழகம் உத்தரவிட்டு ருந் தது.அந்த நிலையில் நேற்று மாலை கொரடாச்சேரி ஒன்றியத்தில் மாவட்டகழக செயலாளர் பூண்டி கே கலைவாணன் தலைமையில் நடைப் பெற்றது.அதே போல் திருவாரூர் நகர கழகம் சார்பில் தலைமை தபால் நிலையம் முன்பு நகர செயலாளர் வாரைபிரகாஷ் தலைமையில் நடைப் பெற்ற ஆர்ப்பாட்டத்தில் பொதுக்குழு உறுப்பினர்கள் செந்தில், தியாகபாரி, நகர பொருளாளர் ரஜினிசின்னா, மாவட்ட பிரதிநிதி அசோகன், ராமு,ராமகிருஷ்ணன்,இளைஞரணி நகர துணை அமைப்பாளர் வினோத்குமார்,விசிக சார்பில் மைய மாவட்ட செயலாளர் தங்கதமிழ்ச்செல்வன், மதிமுக சார்பில் கபிலன், ஜெயராமன், காங்கிரஸ் கட்சி சார்பில் மாவட்ட செயலாளர் சிட்டு பாஸ்கர் மற்றும் கூட்டணி கட்சியான சிபிஐ,சிபிஎம்,திராவிடர் கழகம்,மக்கள் நீதிமையம், பொதுமக்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

---

**மாண்பமை குளித்தலை சார்பு நீதிமன்ற நீதிபதி அவர்கள் சமூகத்திற்கு**
**O.S.No.196/2024**

கரூர் மாவட்டம், குளித்தலை வட்டம், மருதூர் கிராமம், பணிக்கம்பட்டியில் இயங்கி வரும் M/s.கனரா வங்கி அதன் கிளை மேலாளர் சார்பாக. – வாதி

– எதிர் –

கரூர் மாவட்டம், குளித்தலை வட்டம், இனுங்கூர் கிராமம் காவேரி நகர் கதவு எண்.5/441–ல் வசிக்கும் இரவி மகளும் தீபக் மனைவியும் தமிழ் சுயஉதவி குழுவின் செயலாளருமான ஹேமலதா (2–ம் பிரதிவாதி) – 2–ம் பிரதிவாதி

இந்த வழக்கில்ல் 2–ம் பிரதிவாதியாகிய உமக்கு தெரிவிப்பதாவது.

கரூர் மாவட்டம், குளித்தலை வட்டம், மருதூர் கிராமம் பணிக்கம்பட்டியில் இயங்கி வரும கனரா வங்கி அதன் கிளை மேலாளர் சார்பாக கரூர் மாவட்டம், குளித்தலை வட்டம், இனுங்கூர் கிராமத்தில் நடைபெற்று வரும் தமிழ் மகளிர் சுயஉதவிக்குழு மற்றும் அதன் அங்கத்தினர்கள், தலைவர், செயலாளர் ஆகியோர்களுக்கு எதிராக குளித்தலை சார்பு நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.196/2024–ல் தாக்கலாகி இந்த வழக்கில் மேற்கண்ட 2–ம் பிரதிவாதியாகிய மேற்கண்ட சுயஉதவிக்குழுவின் செயலாளர் தீபக் மனைவி திருமதி.ஹேமலதா ஆகிய தங்களுக்கு பலமுறை சம்மன் அனுப்பியும் அவற்றினை பெற்றுக் கொள்ளமால் திரும்ப வந்தும் தற்சமயம் மேற்கண்ட வழக்கில் 2–ம் பிரதிவாதியாகிய தாங்கள் ஆஜராக வாய்தா வரும் 17.04.2026–ல் கெடு ஏற்பட்டிருக்கிறது. இதில் 2–ம் பிரதிவாதியாகிய தங்களுக்கு ஏதேனும் ஆட்சேபனை இருந்தால் குளித்தலை சார்பு நீதிமன்ற நீதிபதி முன்னிலையில் அன்று காலை 10 மணிக்கு நேரிட ஆஜராகி தெரிவித்துக் கொள்ள வேண்டியது. தவறினால் தாவா உங்கள் பேரில் எக்ஸ்பார்ட்டி உத்தரவு ஏற்பட்டு ஒருதலைப்பட்சமாக தீர்மானிக்கப்படும் என்பதை இதன் மூலம் அறியவும்.

**R.M.செந்தில், B.Sc.B.L.,**
**வழக்கறிஞர், குளித்தலை**
**செல். 98949 70073**

---

உயர்திரு உட்கோட்ட நடுவர் நீதிமன்றம், சார் ஆட்சியர் அலுவலகம், வேதாரண்யம்,
ஒ.மு.COLRV.507/2026/ஆ2
ந.க.0297/2026/அ6

ஏஞ்சல்டைல்குயின், க/பெ.கார்த்திகேசு, 12-11,மரியாபுரம் மாதாகோவில் 2-வது தெரு, சென்னை ஆலந்தூர் காஞ்சிபுரம் மாவட்டம். ....மனுதாரர்

உயர்திரு. வட்டாட்சியர், அவர்கள், வேதாரண்யம் ....எதிர்மனுதாரர்

**அறிவிப்பு**

மேற்படி முகவரியில் வசித்து வரும் மனுதாரர் ஏஞ்சல்டைல்குயின் தனது மாமனார் தம்பிராசு த/பெ துரைசாமி என்பவர் தேத்தாக்குடி தெற்கு கிராமத்தில் கடந்த 17.09.2023-ஆம் தேதி அன்று இறந்த விபரத்தை பதிவு செய்திட கோரி வேதாரண்யம் சார் ஆட்சியர் அவர்களிடம் மனு அளித்துள்ளார் இந்த மனுவின் மீது யாருக்கேனும் ஆட்சேபனை ஏதாவது இருப்பின் 15 நாட்களுக்குள் தங்களது ஆட்சேபணைகளை வேதாரண்யம் வட்டாட்சியரிடம் தெரிவிக்கும்படி கேட்டு கொள்ளப்படுகிறது.

மனுதாரர்: ஏஞ்சல்டைல்குயின், க/பெ.கார்த்திகேசு, 12-11,மரியாபுரம் மாதாகோவில் 2-வது தெரு, சென்னை ஆலந்தூர் காஞ்சிபுரம் மாவட்டம்.

---

**கனம் உட்கோட்ட நிர்வாக நடுவர் மற்றும் வருவாய் கோட்டாட்சியர் நீதிமன்றம், மன்னார்குடி**
**த.ப.எண்.143/2025**

கலைச்செல்வி, த/பெ.கல்யாணசுந்தரம். – மனுதாரர்

– எதிர் –

1.ஆணையர், நகராட்சி, திருத்துறைப்பூண்டி
2.சார் பதிவாளர், திருத்துறைப்பூண்டி. – எதிர்மனுதாரர்கள்

மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் அறிவிப்பு:

மனுதாரர் கடந்த 02.06.1979–ம் தேதி திருத்துறைப்பூண்டி தாலுக்கா மற்றும் டவுன், 49.திரௌபதையம்மன் கோவில் தெருவில் உள்ள அவரது பெற்றோர் வீட்டில் கல்யாணசுந்தரம் தவமணி தம்பதியினருக்கு பிறந்த விவரத்தை பதிவுசெய்ய உத்திரவிடக்கோரி மேற்படி நீதிமன்றத்தில்மனுக் கொடுத்து அதன்பேரில் விசாரணைக்காக உள்ளது. மேற்படி பிறப்பை பதிவுசெய்வதில் யாருக்கேனும் ஆட்சேபனை இருந்தால் மேற்படி நீதிமன்றத்தில் ஆஜராகி தெரிவித்துக் கொள்ளலாம்.

**TNA.கணேசன், பி.ஏ.,பி.எல்.,**
**வழக்கறிஞர்,**
**திருத்துறைப்பூண்டி.**

---

மாண்புமிகு மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், துறையூர்
அ.வ.எண்: 12/2026

1. முருகன்,
2. ராமச்சந்திரன் வாதிகள்

/எதிராக/

மாரிமுத்து பிரதிவாதி

அறிவிப்பு

மேற்படி நெம்பர் வழக்கில் வாதிகள் தங்களை துறையூர் வட்டம், கெம்பியம்பட்டி கிராமத்தில் ஆதிதிராவிடர் தெருவில் உள்ள மண்டுகோவிலில் வழிபடும் குடிபடைகளின் பிரதிநிதிகளாக இருந்து வழக்கு நடத்த அனுமதி கோரி மேற்படி நீதிமன்றத்தில் இ.ம.எண்: 1/2026 என்ற எண்ணில் மனுகொடுத்துள்ளார்கள். மேற்படி சங்கதியைப் பொறுத்து யாருக்கேனும்ஆட்சேபனை இருந்தால் எதிர் வரும் 23.02.2026-ம் காலை 10.30மணிக்கு மேற்படி நீதிமன்றத்தில் நேரில்ஆஜராகி தங்களது ஆட்சேபனையை தெரிவித்துக் கொள்ள வேண்டியது. தவறினால் இம்மனு அனுமதிக்கப்படும் என்பதை இதன் மூலம் அறியவும்.

A.பால்ராஜ்.M.A.B.L.,
வழக்கறிஞர், துறையூர்
621010

---

உயர்திரு உட்கோட்ட நடுவர் நீதிமன்றம், வருவாய் கோட்டாட்சியர், வேதாரண்யம்,
ஒ.மு.எண்.1127/2025/ஆ2 (இ.3895)

சந்திரசேகரன், த/பெ.பெத்தான், 5-காந்திநகர், மந்தியத்தோப்பு, வேதாரண்யம் டவுன், வேதாரண்யம் வட்டம், நாகப்பட்டினம் மாவட்டம். ...மனுதாரர்

உயர்திரு. வட்டாட்சியர், அவர்கள், வேதாரண்யம் ....எதிர்மனுதாரர்

**அறிவிப்பு**

மேற்படி முகவரியில் வசித்து வரும் மனுதாரர் சந்திரசேகரன் தனது தாயார் அஞ்சம்மாள் க/பெ. பெத்தான் என்பவர் கடந்த 06.03.2024-ம் தேதி அன்று இறந்த விபரத்தை பதிவு செய்திட கோரி வேதாரண்யம் கோட்டாட்சியர் அவர்களிடம் மனு அளித்துள்ளார் இந்த மனுவின் மீது யாருக்கேனும் ஆட்சேபணை ஏதாவது இருப்பின் 15 நாட்களுக்குள் தங்களது ஆட்சேபணைகளை வேதாரண்யம் வட்டாட்சியரிடம் தெரிவிக்கும்படி கேட்டு கொள்ளப்படுகிறது.

மனுதாரர்: சந்திரசேகரன், த/பெ.பெத்தான், 5-காந்திநகர், மந்தியத்தோப்பு, வேதாரண்யம் வேதாரண்யம் வட்டம்,

---

மாண்புமிகு கூடுதல் சார்பு நீதிமன்றம், கரூர்.
O.S.No: 472 / 2019 E.P.No: 60 / 2023

S.ராஜேந்திரன் S/o, சுப்புராயன்,No: 3/111,பெரியவரப்பாளையம் மண்மங்கலம் (TK), கரூர் (DT). ...மனுதாரர்/வாதி

– எதிர்–

1.M.மலையப்பசாமி,S/o,முத்துசாமி No:3/45, வரபாளையம், மண்மங்கலம் (TK), கரூர் (DT). ... எதிர்மனுதாரர்/பிரதிவாதி

அறிவிப்பு

மேற்படி மனுதாரர்/ வாதி மேற்படி நிறைவேற்று மனுவை தாக்கல் செய்து உள்ளதில் எதிர்மனுதாரர் / பிரதிவாதி ஆகிய நீர் ஆஜராக 03.03.2026 தேதி வாய்தா போடப்பட்டு உள்ளது. எனவே எதிர்மனுதாரர் / பிரதிவாதி ஆகிய நீர் 03.03.2026ம் தேதி காலை 10.00 மணிக்கு மேற்படி நீதிமன்றத்தில் நேரிலோ (அ) வழக்கறிஞர் மூலமோ ஆஜராகி ஆட்சேபணையை தெரிவித்துக்கொள்ள வேண்டியது. தவறும் பட்சத்தில் ஒரு தலைபட்ச உத்திரவு ஏற்படும் என்பதை அறியவும்.

**M.CHINNASAMY,** B.A.,B.L.,
ADVOCATE, KARUR.

---

**வருவாய் கோட்டாட்சியர் மற்றும் உட்கோட்ட நடுவர் மயிலாடுதுறை**

பழனி, த/பெ.ராமசாமி, வடுகபாளையதெரு, கொழையூர் கிராமம், குத்தாலம் வட்டம், மயிலாடுதுறை மாவட்டம். – மனுதாரர்

வருவாய் கோட்டாட்சியர், மயிலாடுதுறை. – எதிர்மனுதாரர்

அறிவிப்பு

மேற்படி மனுதாரர் தனது தாயார் "பட்டம்மாள்" க/பெ.ராமசாமி என்பவர் இறப்பு சான்று வேண்டல். மேற்படி விலாசத்தில் கடந்த 05.08.1998 மேற்படி விலாசத்தில் இறந்ததை பதிவு செய்யகோரி எதிர்மனுதாரருக்கு உத்தரவிட வேண்டி வருவாய் கோட்டாசியர் அலுவலகத்தில் மனுதாக்கல் செய்துள்ளார். இதில் யாருகேனும் ஆட்சேபணை இருப்பின் இந்த அறிவிப்பு கண்ட 30 தினங்களுக்குள் மேற்படி அலுவலகத்தில் ஆஜராகி தெரிவித்து கொள்ளலாம்

**பழனி, மனுதாரர்,**
**மயிலாடுதுறை வட்டம்.**

---

உயர்திரு உட்கோட்ட நடுவர் நீதிமன்றம் மற்றும் வருவாய் கோட்டாட்சியர், மன்னார்குடி
**த.ப.எண் .379/2025**

கலியபெருமாள், த/பெ.சேவு, 614, மேல துளசேந்திரபுரம், மன்னார்குடி Tk, திருவாரூர் Dt மனுதாரர்

–எதிர்–

வட்டாட்சியர் மன்னார்குடி எதிர்மனுதாரர்

**அறிவிப்பு**

மேற்கண்ட வழக்கில் மனுதாரரின் தாயார் தனலெட்சுமி என்பவர் கடந்த 25.01.2015 ஆம் தேதி அன்று மேற்படி முகவரியில் இறந்ததை எதிர் மனுதாரர் பதிந்துவரும் இறப்பு பதிவேட்டில் பதியவேண்டி மனு தாக்கல் செய்துள்ளார். அந்த மனுவை பொறுத்து யாருக்கேனும் ஆட்சேபணை இருப்பின் மேற்படி அலுவலகத்தில் தெரிவித்துக் கொள்ளலாம் என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

கலியபெருமாள், த/பெ.சேவு, 614, மேல துளசேந்திரபுரம், மன்னார்குடி Tk, திருவாரூர் Dt

---

உயர்திரு உட்கோட்ட நடுவர் நீதிமன்றம் மற்றும் வருவாய் கோட்டாட்சியர், மன்னார்குடி
**த.ப.எண் .380/2025**

முஹம்மது சித்திக், த/பெ.அப்துல்கனி, 119/ L, புது சவுக்கத் அலி தெரு, கூத்தாநல்லூர் & Tk, திருவாரூர் Dt மனுதாரர்

–எதிர்–

நகராட்சி ஆணையர், கூத்தாநல்லூர். எதிர்மனுதாரர்

**அறிவிப்பு**

மேற்கண்ட வழக்கில் மனுதாரரின் தாயார் P.N. ஜன்னத்துல் மஹ்மூதா என்பவர் கடந்த 21.03.2009 ஆம் தேதி அன்று மேற்படி முகவரியில் இறந்ததை எதிர் மனுதாரர் பதிந்துவரும் இறப்பு பதிவேட்டில் பதியவேண்டி மனு தாக்கல் செய்துள்ளார். அந்த மனுவை பொறுத்து யாருக்கேனும் ஆட்சேபணை இருப்பின் மேற்படி அலுவலகத்தில் தெரிவித்துக் கொள்ளலாம் என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

முஹம்மது சித்திக், த/பெ.அப்துல்கனி, 119/ L, புது சவுக்கத் அலி தெரு, கூத்தாநல்லூர் & Tk, திருவாரூர் Dt

---

## கரூர் மாவட்ட பொது வினியோக குறைதீர் நாள் கூட்டம் நாளை நடக்கிறது கலெக்டர் தகவல்

கரூர்,பிப்.13-

கரூர் மாவட்டத்தில் பொது விநியோகத்திட்டத்தில் குடும்ப அட்டைகளில் பெயர் சேர்த்தல், பெயர் நீக்கல், பெயர் திருத்தம், புதிய குடும்ப அட்டை கோருதல், கைபேசி எண் பதிவு மற்றும் பொது விநியோக கடைகளின் செயல்பாடுகள் மற்றும் அத்தியாவசிய பொருட்களின் தரம் குறித்த புகார்கள், தனியார் சந்தையில் விற்கப்படும் பொருட்கள் மற்றும் சேவை குறைபாடுகள் குறித்த புகார்களை நுகர்வோர் பாதுகாப்புச்சட்டம் 2013-இன் படி மேற்கொள்ள பொது விநியோகத்திட்டத்தின் சேவைகளை அனைத்து தரப்பு மக்களுக்கும் வழங்க குறை நிவர்த்தி செய்யும் பொருட்டு பொது விநியோகத்திட்ட மக்கள் குறைதீர் நாள் கூட்டம் 14.02.2026 ஆம் தேதி காலை 10.00 மணி முதல் 1.00 மணி வரை கரூர், அரவக்குறிச்சி, மண்மங்கலம், புகளூர், குளித்தலை, கிருஷ்ணராயபுரம் மற்றும் கடவூர் வட்ட வழங்கல் அலுவலகங்களில் சம்பந்தப்பட்ட வட்ட வழங்கல் அலுவலர் தலைமையில் நடைபெற உள்ளது.

Printed, Published and Owned by S.Manimaran and Printed at Manimaran Printers No. 1 Santhanapuram, Madurai-Trichy 4 Way Main Road, Nagamangalam, Trichy-620 012
Ph: 0431-2680969
E-Mail: trichyedi@thinaboomi.com
RNI.Regn No.61511/94
Editor:S.MANIMARAN
Subject to Madurai Jurisdiction Only

---

**முதன்மை மாவட்ட நீதிமன்றம் திருவாரூர்**
**இ.ம.எண். 1/2025 மற்றும் அ.வ.எண். 67/2025**

வகீதா ரகுமான் –மனுதாரர் (ம) வாதி

//எதிர்//

ஜெயந்தி, க/பெ. லோகநாதன், 41/பி பேட்டை தெரு, உள்ளிகேட்டை–1 மன்னார்குடி தாலுக்கா. –எதிர்மனுதாரர் (ம) பிரதிவாதி

**அறிவிப்பு**

மனுதாரர் (ம) வாதியால் இதன் கீழ்காணும் சொத்தை பொருத்து ஏற்றுதலை ஆற்றும் பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்யப்பட்டும், தீர்ப்புக்கு முன் பற்றுகை செய்ய கோரி இடைமனு தாக்கல் செய்யப்பட்டும், அந்த வழக்கில் தங்களை எதிர்மனுதாரர் (ம) பிரதிவாதியாக சேர்க்கப்பட்டு, தங்களுக்கு நீதிமன்றம் மூலமும், அஞ்சல்துறை மூலமும் அறிவிப்பு அனுப்பி பெற்றுக் கொள்ளாததால் தினசரி தமிழ் நாழிதளில் விளம்பரம் செய்ய உத்தரவாகி வருகிற 16.02.2026 அன்று வாய்தா போடப்பட்டுள்ளது. அன்றைய தினம் தாங்கள் மேற்படி நீதிமன்றத்தில் காலை 10.30 மணியளவில் நேரிலோ, அல்லது வழக்கறிஞர் மூலமாகாவோ ஆஜராகி கட்சி ஏதுமிருப்பின் தெரிவிக்கவேண்டியது. தவறும் பட்சத்தில் தோன்றா தரப்பினராக கருதப்படும் என்பதை அறியவும்.

**சொத்து விபரம்:**

பட்டுக்கோட்டை பதிவு மாவட்டம், உள்ளிக்கோட்டை சார்பதிவகம், மன்னார்குடி தாலுக்கா, மகாதேவப்பட்டினம் கிராமத்தில்,

1. பழைய புல எண்.148பி/20க்கு, புதிய புல எண். 148பி/20பி1ல் பூரா நத்தம் மனை 0.04.00 ஏர்ஸ்க்கு ஏக்கர் 0.10 சென்டுக்கு 4360 சதுரடி.

(அ) மேற்படி மனையின் முன்புறம் உள்ள ஆர்.சி.சி கடை கட்டிடம் 1, மேற்படி கட்டிடம் 6 கடைகளை கொண்டது. அவைகளுக்கான மின்சார இணைப்புகள் அதன் காப்பீட்டுத் தொகைகள் ஆகியவைகள் உட்படவும், மேற்படி கடை கட்டிடம் 750 சதுரடி கொண்டது. கடை கட்டிடத்தின் வயது 15 ஆண்டுகள். மேற்படி கடைகளின் கதவு எண்கள் முறையே 2–144, 2–145, 2–146, 2–148, 2–149, மின்சார இணைப்பு எண்கள் முறையே 809, 810, 811, 812, 813, 814 ஆகும்.

(ஆ) மேற்படி மனையின் நடுபுறம் உள்ள பழமையான முன்புறம் ஆர்.சி.சி. கட்டிடமும், பின்புறம் ஆஸ்பெட்டாஸ் கூரையுடன் இணைந்து வீடு–1, அதற்கான மின்சார இணைப்பு, அதன் காப்பீட்டுத்தொகை ஆகியவைகள் உட்படவும், மேற்படி ஆர்.சி.சி கட்டிட வீடு 625 சதுரடியும், ஆஸ்பெட்டாஸ் கட்டிட பகுதி 250 சதுரடியும், ஆகக்கூடுதல் 875 சதுரடி அளவுகள் கொண்டது. வீட்டின் வயது 40 அண்டுகள். கதவு எண். 2–150. மின்சார இணைப்பு எண். 125.

(இ) மேற்படி மனையின் பின்புறம் உள்ள ஆர்.சி.சி கட்டிட வீடு 1, மேற்படி வீட்டிற்கான மின்சார இணைப்பு அதன் காப்பீட்டுத்தொகை, வீட்டு உபயோக ஆழ்குழாய் கிணறு, வீட்டுடன் இணைந்த கழிவறைகள் ஆகியவகைகள் உட்படவும், மேற்படி வீட்டின் அடித்தளம் 1092 சதுரடியும், முதல்தளம் 400 சதுரடியும், போர்ட்டிகோ 300 சதுரடியும் அளவுகள் கொண்டது. வீட்டின் வயது 1 ஆண்டுகள். கதவு எண். இல்லை. மின்சார இணைப்பு எண்.1753.

2. பழைய புல எண். 148பி/20–க்கு புதிய புல எண். 148பி/20பி2–ல் பூரா புஞ்சை மனை 0.10.00 ஏர்ஸ்க்கு ஏக்கர் 0.25 சென்டுக்கு 10900 சதுரடி. மேற்படி ஸ்தலம் காலிமனை கட்டிடம் எதுவுமில்லை.

3. பழைய புல எண். 148பி/21–க்கு புதிய புல எண். 148பி/50–ல் பூரா புஞ்சை மனை 0.01.00 ஏர்ஸ்க்கு ஏக்கர் 0.03 செண்டுக்கு 1308 சதுரடி. மேற்படி ஸ்தலம் காலிமனை கட்டிடம் எதுவுமில்லை. மேற்படி இனங்கள் 2 முதல் 4–ல் உள்ள தென்னை காய்ப்பு மரங்கள் 20 உட்படவும்.

**இவை மூன்றிற்கும் ஒரே நான்கெல்லை விபரம்:**

எம். நடராஜன் வீடு, கடை கொல்லைக்கும், கிருஷ்ணமூர்த்தி பிள்ளை புஞ்சைக்கும் கிழக்கு, கிருஷ்ணமூர்த்தி பிள்ளை வகையறா வீடு, கடை, கொல்லைக்கும் மேற்கு மற்றும் தெற்கு, மகாதேவப்பட்டிணம் கிராமம் செல்லும் மெயின் ரோட்டிற்கும் தெற்கு இதற்குட்பட்டது.

வழக்கறிஞர்
M.GANESAN. B.A., L.L.B., ADVOCATE
VS VComplex, South Main Street, THIRUVARUR-610 001. Cell:94863 10131.

---

**ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை**
**வத்திராயிருப்பு ஊராட்சி ஒன்றியம், விருதுநகர் மாவட்டம்**

ந.க.எண்.அ2/2476/2025 நாள்–11.02.2026

**மின் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு**

விருதுநகர் மாவட்டம், வத்திராயிருப்பு ஊராட்சி ஒன்றியத்தின் சிறப்புப் பகுதி மேம்பாட்டுத் (SADP) திட்டத்தின்கீழ் கீழ்க்காணும் பணிக்கு தகுதியான ஒப்பந்ததாரர்களிடமிருந்து மின் ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகிறது.

| வ. எண். | பணிகள் விபரம் | மதிப்பீடு ரூ.இலட்சத்தில் | வைப்புத் தொகை–1%–ரூ. | ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பிக்கும் நாள் | ஒப்பந்தப்புள்ளி திறக்கும் நாள் |
|---|---|---|---|---|---|
| 1 | Construction of Bridge in Athikovil near Chitraru at Khanshaupram Village and Panchayat in Watrap Block at Virudhunagar District | 222.00 | 2,22,000 | From 13.02.2026 to 23.02.2026 - 3.00 P.M. | 23.02.2026 5.00 P.M. |

இதர விபரங்களை **www.tntenders.gov.in** என்ற இணையதள முகவரியில் தெரிந்து கொள்ளலாம்.

வட்டார வளர்ச்சி அலுவலர் (வ.ஊ)
வத்திராயிருப்பு ஊராட்சி ஒன்றியம், விருதுநகர் மாவட்டம்

செ.ம.தொ.இ/1002/ஒப்பந்தப்புள்ளி/2026

---

**திருச்சிராப்பள்ளி மாவட்டம்**
**மண்ணச்சநல்லூர் சிறப்பு நிலை பேரூராட்சி**
**ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு**

மண்ணச்சநல்லூர் சிறப்பு நிலை பேரூராட்சியில், 2025–2026 ஆம் ஆண்டு கலைஞர் நகர்ப்புற மேம்பாடு திட்டத்தின் கீழ், மண்ணச்சநல்லூர் பேரூராட்சியில் தார் சாலை அமைத்தல் பணி **ரூ.180.00 லட்சம்** மதிப்பீட்டில் மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளிகள் **(இரண்டு உறைகள்முறை)** வரவேற்கப்படுகின்றன.

1. ஒப்பந்தப்புள்ளி நமூனாவினை **https://tntenders.gov.in** என்ற இணையதள முகவரியிலிருந்து இலவசமாக பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். மேலும், ஒப்பந்தப்புள்ளி குறித்து முழு விவரங்களும் பெறலாம். ஒப்பந்தப்புள்ளி முன்வைப்புத் தொகையினை இணையதளம் வாயிலாக செலுத்திட தெரிவிக்கப்படுகிறது.
2. ஒப்பந்தப்புள்ளிகள் தொடர்பான நேரம் மற்றும் நாள்
   அ) முன் கலந்தாய்வு கூட்டம் **18.02.2026** காலை **11.00** மணி
   ஆ) ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பித்தல் **26.02.2026** மாலை **3.00** மணி வரை
   இ) ஒப்பந்தப்புள்ளி திறத்தல் **26.02.2026** மாலை **3.30** மணிக்கு
3. ஒப்பந்தப்புள்ளி பெறப்படும் நாளன்று அலுவலகத்திற்கு விடுமுறை தினமாக அறிவிக்கப்படின் அதற்கு அடுத்த வேலை நாளில் அதே நேரத்தில் அதே இடத்தில் ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கப்படும்.

செயல் அலுவலர்,
மண்ணச்சநல்லூர் பேரூராட்சி
திருச்சிராப்பள்ளி மாவட்டம்.

செ.ம.தொ.இ/ 1009 /ஒப்பந்துபுள்ளி/2026

---

**இந்து சமய அறநிலையத்துறை**
**அருள்மிகு வீரமாகாளியம்மன் திருக்கோயில்,**
**பெரம்பூர், குளத்தூர் வட்டம், புதுக்கோட்டை மாவட்டம்**

**பொது ஏல அறிவிப்பு**

புதுக்கோட்டை மாவட்டம், குளத்தூர் வட்டம், பெரம்பூர் அருள்மிகு வீரமாகாளியம்மன் திருக்கோயில் 26.02.2026 அன்று காலை 11.30 மணியளவில் உரிய அலுவலர் முன்னிலையில் 1 முதல் 19 வரையிலான உபயோகமற்ற பழைய பொருட்களுக்கு தனித்தனியே பொது ஏலம் நடைபெறவுள்ளது. மேலும் விபரங்களுக்கு திருக்கோயில் அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் தெரிந்து கொள்ளலாம்.

கீழ்க்கண்ட விபரப்படியான 1 முதல் 19 வரையிலான உபயோகமற்ற பழைய பொருட்கள்:

| | | | |
|---|---|---|---|
| 1. இரும்பு பீரோ 5– 1/2 அடி (2) | 2. தகர டோர் (2) | 3. உடைந்த சைக்கிள் (1) | 4. டோர் இரும்பு கிரில் (3) |
| 5. இரும்பு சட்டம் (சன்னல் கிரில்) (3) | 6. 10 அடி x 1.5 இன்ஞ் PVC பைப் (9) | 7. தீத்தடுப்பு சிலிண்டர்கள் (4) | 8. ஸ்டாட்டர் மெயின் பாக்ஸ் (3) |
| 9 பழைய RO இயந்திரம் (2) | 10. 10 அடி நீள இரும்பு ஆங்கிள் (8) | 11. பெரிய இரும்பு பைப் 10 அடி நீளம் 5 இன்ஞ் விட்டம் (1) | 12. இரும்பு பைப் 10 அடி நீளம் 2 இன்ஞ் விட்டம் (3) |
| 13. தூண்டா விளக்கு ஸ்டாண்ட் SS (1) | 14. பென்ஞ் SS (29) | 15. சாப்பாட்டு மேஜை SS (27) | 16. மேலதளம் செட் (3) |
| 17. மின்விசிறி மண்டைகளை (10) | 18. மங்களூர் ஓடுகள் (400) | 19. 8 அடி மர ரீப்பர்கள் (20) | –– |

இடம் : பெரம்பூர்
நாள் : 09.02.2026

தக்கார் / உதவி ஆணையர். செயல் அலுவலர்.
அருள்மிகு வீரமாகாளியம்மன் திருக்கோயில்,
பெரம்பூர், குளத்தூர் வட்டம், புதுக்கோட்டை மாவட்டம்.

"சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம்! சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்"

வெ.ஆ.எண்.09/2026/செ.ம.தொ.அ/புதுக்கோட்டை. நாள்: 12.02.2026

---

**மண்ணச்சநல்லூர் சிறப்புநிலை பேரூராட்சி,**
**திருச்சிராப்பள்ளி மாவட்டம்– 621 005**

ந.க.எண்.110/2026/அ2 நாள்: 09.02.2026

**2026–2029 ஆம் ஆண்டு வரை மூன்றாண்டு தொகுப்பில் 01.04.2026 முதல் 31.03.2027 வரை முதல் ஓராண்டு தொகுப்பிற்கு பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி விவரம்**

மண்ணச்சநல்லூர் பேரூராட்சி மன்ற அங்கீகாரத்திற்கு உட்பட்டதும், சம்மந்தப்பட்ட விதிகள் இணைப்பில் உள்ள நிபந்தனைகள் இவைகளுக்கு உட்பட்டு அடியிற்கண்ட ஏலகுத்தகை இனத்திற்கு 2026–2027 ஆம் ஆண்டிற்கு மண்ணச்சநல்லூர் பேரூராட்சி செயல் அலுவலர் அல்லது அவரது அதிகாரம் பெற்றவரால் அடியிற்கண்ட விபரப்படி மண்ணச்சநல்லூர் பேரூராட்சி அலுவலகத்தில் பகிரங்க பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி முறையில் விடப்படும். ஏலம் 24.02.2026–ம் தேதி செவ்வாய் கிழமை காலை 11.00 மணி அளவில் ஏலம் விடப்படும். ஏலங்கள் கோர சொத்து மதிப்பு சான்றிதழ், வில்லங்க சான்றுடன் செலுத்த வேண்டிய பொறுப்புத் தொகை கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

ஏல இனங்களுக்கு குத்தகை கால அட்டவணையில் கண்டுள்ள விவரப்படிக்கு ஏலத்திற்கான டேவணித் தொகை செலுத்தியவர்களிடமிருந்து மட்டும் ஏல தினத்திற்கு முந்தைய பணி நாளான 23.02.2026 ஆம் தேதி திங்கட் கிழமை காலை 11.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் பெற்றுக் கொள்ளப்படும். அன்றைய தினம் குறிப்பிடப்பட்டுள்ள நேரத்திற்கு பின்னர் வரப்படும் ஒப்பந்தப்புள்ளிகள் நிராகரிக்கப்படும். ஏலத் தினத்தன்று ஏலம் முடிவுற்றவுடன் பெறப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கப்பட்டு அதில் எது அதிக கேள்வி தொகையோ அதையே ஏல கேள்வித் தொகையாக எடுத்துக் கொள்ளப்படும். மேற்கண்ட தேதிகளில் ஏலம் போகவில்லையெனில் மறு ஏலம் 03.03.2026 அன்று நடைபெறும். அதிலும் ஏலம் போகவில்லை எனில் 06.03.2026 அன்றும் மறுஏலம் நடைபெறும் என இதன்வழி தெரிவிக்கப்படுகிறது.

ஏல நிபந்தனைகள் மற்றும் இதர விபரங்களை மண்ணச்சநல்லூர் பேரூராட்சி அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் நேரில் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம். சொத்து மதிப்பு சான்று ஏல தேதிக்கு முன் அதாவது 01.01.2026 பிறகு வட்டாட்சியரிடம் பெறப்பட்டதாக இருக்க வேண்டும். பழைய சொத்து மதிப்பு சான்றிதழுக்கு வில்லங்க சான்றுகளுடன் பெற்று சமர்ப்பிப்பது ஏற்றுக் கொள்ள இயலாது. ஏலத்திற்கான டேவணித் தொகை, வங்கி வரைவோலை வாயிலாக ஏலத்தின் முதல் நாள் 23.02.2026 பிற்பகல் 4.00 மணிக்குள் பேரூராட்சி அலுவலகத்தில் சமர்ப்பிக்க வேண்டும். வங்கி வரைவோலை ஏலதினத்தன்று கொடுத்தால் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. இந்த மனு பொது ஏல விளம்பரம் வெளியிடப்பட்ட நாளிலிருந்து இதற்குமுன் வெளியிடப்பட்ட எல்லா பொது விளம்பரங்களையும் இதன் மூலம் ரத்து செய்யப்படுகிறது.

**ஏல அட்டவணை**

ஏல இனங்கள் குத்தகை கால அளவு (01.04.2026 முதல் 31.03.2027 வரை) ஏல நாள்: 24.02.2026

| வ. எண். | ஏலங்கள் விடப்படும் இனங்கள் விபரம் | ஏலம் கேட்கும் முன்பு செலுத்த வேண்டிய ஏல டேவணித் தொகை ரூ (கடை ஒன்றுக்கு) | ஏலம் கேட்கும் முன்பு செலுத்த வேண்டிய சொத்து மதிப்பு வில்லங்க சான்றிதழ் ரூ. (கடை ஒன்றுக்கு) | சொத்து மதிப்பு சான்றிதழ் வில்லங்க சான்றிதழுடன் அளிக்காவிட்டால் அதற்காக செலுத்த வேண்டிய கூடுதல் பொறுப்புத் தொகை (டேவணித் தொகை நீங்கலாக) ரூ (கடை ஒன்றுக்கு) |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| 01 | வாணியர் மண்டபம் எதிரில் உள்ள நவீன கட்டண கழிப்பிடம் (ஓராண்டுக்கு மட்டும்) | 1,50,000/– | 5,00,000/– | 1,50,000/– |
| 02 | வண்டிப்பேட்டை | 1,00,000/– | 2,00,000/– | 2,00,000/– |

குறிப்பு: எதிர்பாராதவிதமாக ஏலதினம் விடுமுறை நாளாக அறிவிக்கப்பட்டால் அடுத்த வேலை நாளில் ஏலம் நடைபெறும். ஏலத்தினை நிறுத்தவோ, மாற்றியமைக்கவோ செயல் அலுவலருக்கு முழு அதிகாரம் உண்டு. அனைத்து ஏலத்திற்கும் செயல் அலுவலரின் முடிவே இறுதியானதாகும்.

(ஒம்). ஆ.சிவசண்முககுமார், தலைவர், மண்ணச்சநல்லூர் சிறப்புநிலை பேரூராட்சி, திருச்சிராப்பள்ளி மாவட்டம்.

(ஒம்) இரா.கிருஷ்ணவேணி செயல் அலுவலர், மண்ணச்சநல்லூர் சிறப்புநிலை பேரூராட்சி, திருச்சிராப்பள்ளி மாவட்டம்.

"சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம்! சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்"

வெ.ஆ.எண்.41/செ.ம.தொ.அ/திருச்சிராப்பள்ளி. நாள்: 12.02.2026

### ஐ.பி.எஸ். அதிகாரிக்கு எதிரான வழக்கு:

# ரூ. 10 லட்சம் செலுத்த தோனிக்கு சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவு

**சென்னை, பிப். 13-**

ஐ.பி.எஸ். அதிகாரிக்கு எதிராக தொடர்ந்த மான நஷ்ட ஈடு வழக்கில், ரூ. 10 லட்சம் செலுத்த இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் கேப்டன் மகேந்திர சிங் தோனிக்கு சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.



**நூறு கோடி ரூபாய்....**

சென்னை உயர் நீதிமன்றத்தில், கிரிக்கெட் வீரர் மகேந்திர சிங் தோனி, 2014-ஆம் ஆண்டு தாக்கல் செய்த மனுவில், ஐ.பி.எல். சூதாட்ட வழக்கு தொடர்பான தொலைக்காட்சி விவாதத்தில் தனக்கு எதிராக அவதூறு கருத்துகள் கூறியதாக, ஐ.பி.எஸ். அதிகாரி சம்பத்குமார், தனியார் தொலைக்காட்சி நிறுவனங்கள் ஆகியோருக்கு எதிராக, நூறு கோடி ரூபாய் மானநஷ்ட ஈடு வழங்க வேண்டும் என மனுவில் கூறியிருந்தார். இந்த வழக்கு கடந்த 10 ஆண்டுகளுக்கும் மேலாக விசாரணையில் உள்ளது.

**எழுத்து வடிவுக்கு மாற்ற...**

இந்த வழக்கில் தோனியின் வாக்குமூலத்தை வழக்குரைஞர் ஆணையர் மூலம் சென்னை உயர் நீதிமன்றம் கடந்தாண்டு பதிவு செய்தது. இந்த வழக்கின் விசாரணை சென்னை உயர் நீதிமன்றத்தில் நேற்று நடைபெற்ற நிலையில், விவாத நிகழ்ச்சியின் பதிவை எழுத்து வடிவுக்கு மாற்றுவதற்கு கட்டணமாக ரூ. 10 லட்சம் செலுத்த தோனி தரப்புக்கு நீதிபதி உத்தரவிட்டார். இதையடுத்து வழக்கின் அடுத்த விசாரணையை மார்ச் 12 ஆம் தேதிக்கு ஒத்தி வைத்து சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

# ரூ.4 ஆயிரம் கோடி மதிப்பில் பிணையப் பத்திரங்கள் ஏலம்

### தமிழ்நாடு அரசு அறிவிப்பு

**சென்னை, பிப்.13-**

ரூ.4 ஆயிரம் கோடி மதிப்பிலான பிணையப் பத்திரங்கள் ஏலத்தின் மூலம் விற்பனை செய்ய இருப்பதாக தமிழக அரசு அறிவித்துள்ளது.

இதுதொடர்பாக அரசின் நிதித்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:- தமிழ்நாடு அரசு மொத்தம் ரூ.4,000 கோடி மதிப்பில் 6 ஆண்டுகால பிணையப் பத்திரங்கள் ரூ.1,000 கோடி, தமிழ்நாடு அரசின் 7.31 சதவீத பிணையப் பத்திரங்கள் 2033 மறுவெளியீடு ரூ.1,000 கோடி, 7.54 சதவீத பிணையப் பத்திரங்கள் 2036 மறுவெளியீடு ரூ.1,000 கோடி, 7.61 சதவீத பிணையப் பத்திரங்கள் 2056 மறுவெளியீடு ரூ.1,000 கோடி ஏலத்தின் மூலம் விற்பனை செய்யவிருப்பதாக அறிவித்துள்ளது.

இந்த ஏலம் இந்திய ரிசர்வ் வங்கியால், மும்பையில் உள்ள அதன் மும்பை கோட்டை அலுவலகத்தில் பிப்ரவரி 17, 2026 அன்று நடத்தப்படும். போட்டி ஏலக்கேட்புகள் முற்பகல் 10.30 மணியிலிருந்து 11.30 மணிக்குள்ளாகவும், போட்டியற்ற ஏலக்கேட்புகள் முற்பகல் 10.30 மணியிலிருந்து 11.00 மணிக்குள்ளாகவும் இந்திய ரிசர்வ் வங்கியின் ஒருங்கிணைந்த வங்கி சேவை முறையில் மின்னணு படிவத்தில் பிப்ரவரி 17, 2026 அன்று சமர்ப்பிக்கப்பட வேண்டும். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.




**தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை சார்பில் சென்னையில் நடைபெற்ற புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் செயலாக்க மாநாட்டில் முதலீடுகளின் முன்னேற்ற அறிக்கையை வெளியிட்டார்.**

### யு-19 உலகக் கோப்பையை வென்ற

# தமிழக வீரர்களுக்கு துணை முதல்வர் பாராட்டு

**சென்னை, பிப்.13-**

யு-19 உலகக் கோப்பையை வென்ற தமிழக வீரர்களுக்கு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் நேற்று நேரில் சந்தித்து பாராட்டு தெரிவித்தார்.

16-வது யு19 உலகக் கோப்பை கிரிக்கெட்டில் (19 வயதுக்கு உட்பட்டோர்) இறுதி ஆட்டத்தில் இந்திய அணி 100 ரன் வித்தியாசத்தில் இங்கிலாந்தை வீழ்த்தி 6-வது முறையாக சாம்பியன் பட்டத்தை கைப்பற்றியது. கோப்பையை வென்ற இந்திய அணியில் அங்கம் வகித்த தமிழகத்தை சேர்ந்த வேகப்பந்து வீச்சாளர்கள் அம்பிரிஷ் இறுதிப்போட்டியில் 3 விக்கெட் உள்பட மொத்தம் 11 விக்கெட்டும், தீபேஷ் 6 விக்கெட்டும் வீழ்த்தினர்.



இந்த நிலையில் , இருவருக்கும் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பாராட்டு தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில், யு19 உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டி 2026-இல் கோப்பையை வென்ற நம் இந்திய அணியில், இடம் பெற்று இருந்த தமிழ்நாட்டைச் சேர்ந்த கிரிக்கெட் வீரர்களான தம்பிகள் அம்ப்ரிஷ் மற்றும் தீபேஷ் ஆகியோரை நேரில் சந்தித்து வாழ்த்தினோம்.

சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் தமிழ்நாட்டைச் சேர்ந்த வீரர்கள் தங்களது சிறப்பான திறமையினை வெளிப்படுத்தி வருவது நம் அனைவருக்கும் பெருமை. இந்த இளம் வீரர்களுக்கு நம் திராவிட மாடல் அரசு எல்லா வகையிலும் துணை நிற்கும். என தெரிவித்துள்ளார்.

# தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் - ராகுல் ஆதரவு

**டெல்லி, பிப்.13-**

மத்திய அரசை கண்டித்து நாடு முழுவதும் பல்வேறு தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பு நேற்று நடத்திய வேலை நிறுத்தப் போராட்டத்துக்கு எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி ஆதரவு தெரிவித்துள்ளார்.

தொழிலாளர்கள், விவசாயிகளின் வேலைநிறுத்த போராட்டத்துக்கு ஆதரவு அளிப்பதாக ராகுல் காந்தி எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ளார். அவர் தெரிவித்திருப்பதாவது:- நாடு முழுவதும் லட்சக்கணக்கான தொழிலாளர்களும் விவசாயிகளும் தங்கள் உரிமைகளுக்காக தெருக்களில் இறங்கி குரல் கொடுத்து கொண்டுள்ளனர். 4 தொழிலாளர் சட்டங்களும் தங்கள் உரிமைகளை பலவீனப்படுத்தும் என்று தொழிலாளர்களும், வர்த்தக ஒப்பந்தங்கள் தங்கள் வாழ்வாதாரத்தை பாதிக்கும் என்று விவசாயிகளும் அஞ்சுகின்றனர்.

மேலும் மகாத்மா காந்தி ஊரக வேலைவாய்ப்பு உறுதியளிப்புச் சட்டத்தை பலவீனப்படுத்துவது அல்லது நீக்குவது கிராமங்களின் கடைசி ஆதரவையும் பறித்துவிடும். அவர்களின் எதிர்காலம் குறித்து முடிவுகள் எடுக்கப்பட்டபோது, அவர்களின் குரல் முற்றிலுமாக புறக்கணிக்கப்பட்டது. மோடி தற்போது கேட்பாரா? அல்லது அவர் மீதான அழுத்தம் மிகவும் வலுவாக உள்ளதா? தொழிலாளர்கள் மற்றும் விவசாயிகளின் பிரச்னைகள் மற்றும் அவர்களின் போராட்டத்துடன் நான் உறுதியாக நிற்கிறேன்'' எனக் குறிப்பிட்டுள்ளார்.

### டி-20 உலகக்கோப்பை தொடரில்

# இத்தாலி அணி முதல் வெற்றி

**மும்பை, பிப். 13-**

உலகக்கோப்பை தொடரில் நேபாள அணியை வீழ்த்தி இத்தாலி வரலாற்று வெற்றியை பெற்றுள்ளது.

**17-வது லீக் ஆட்டம்...**

10-வது டி20 உலகக் கோப்பை கிரிக்கெட் திருவிழா இந்தியா மற்றும் இலங்கையில் நடந்து வருகிறது. இதில் பங்கேற்றுள்ள 20 அணிகள் 4 பிரிவாக பிரிக்கப்பட்டு மோதுகின்றன. லீக் சுற்று முடிவில் ஒவ்வொரு பிரிவிலும் டாப்-2 இடங்களை பிடிக்கும் அணிகள் சூப்பர் 8 சுற்றுக்கு தகுதி பெறும். தற்போது லீக் போட்டிகள் நடைபெற்று வருகின்றன. நேற்று நடைபெற்ற 17வது ஆட்டத்தில் நேபாளம் - இத்தாலி அணிகள் மோதின.

**முதலில் பேட்டிங்...**

இந்த போட்டிக்கான டாஸ் போடப்பட்டது.அதில் டாஸ் வென்ற இத்தாலி அணியின் கேப்டன் ஹாரி மேனின்டி பந்துவீச்சை தேர்வு செய்தார். அதன்படி நேபாளம் அணி முதலில் பேட்டிங் செய்தது. தொடக்கம் முதல் இத்தாலி அணியின் பந்துவீச்சை எதிர்கொள்ள முடியாமல் நேபாளம் அணி தடுமாறியது. இதனால் நேபாளம் அணி 19.3 ஓவர்கள் முடிவில் 123 ரன்களுக்கு ஆட்டமிழந்தது. அந்த அணியில் ஆரிப் ஷேய்க் 27 ரன்கள் எடுத்தார். இத்தாலி அணியில் கிரிஷான் 3 விக்கெட்டுகள் வீழ்த்தினார்.

**12.4 ஓவர்களில்....**

தொடர்ந்து 124 ரன்கள் இலக்குடன் இத்தாலி அணி விளையாடியது. தொடக்க வீரர்களாக ஜஸ்டின் மோஸ்கா , அந்தனி மோஸ்கோ இருவரும் களமிறங்கினர். சிறப்பாக விளையாடி இருவரும் ரன்கள் குவித்தனர். பந்துகளை, பவுண்டரி சிக்சருக்கு பறக்க விட்டனர். இருவரும் அரைசதமடித்து அசத்தினர். இதனால் 12.4 ஓவர்களில் விக்கெட் இழப்பின்றி 124 ரன்கள் எடுத்து 10 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் இத்தாலி வெற்றி பெற்றது. இது இத்தாலி அணிக்கு முதல் உலகக் கோப்பை தொடராகும். அதன்படி உலகக் கோப்பை தொடரில் இத்தாலி பெற்ற முதல் வரலாற்று வெற்றியாகும்

### தமிழ்நாட்டில் தற்போது வரை

# 36.52 லட்சம் வேலைவாய்ப்புகள் உருவாகியுள்ளது: அமைச்சர் பேச்சு

**சென்னை, பிப். 13-**

தமிழ்நாட்டில் தற்போது வரை 36.52 லட்சம் வேலை வாய்ப்புகள் உருவாகியுள்ளதாக அமைச்சர் டி.ஆர்.பி. ராஜா தெரிவித்துள்ளார்.

சென்னை கிண்டியில் நடைபெற்ற தமிழ்நாட்டு முதலீடுகள் செயலாக்க மாநாட்டில் அமைச்சர் டி. ஆர்.பி.ராஜா பேசியதாவது:- சமூக நீதி மற்றும் திராவிட மாடல் ஆட்சியின் அடித்தளமே எல்லார்க்கும் எல்லாம். அனைவரையும் உள்ளடக்கிய ரவலாக்கப்பட்ட வளர்ச்சி என்பதுதான். தமிழ்நாட்டில் எந்த ஒரு மாவட்டமும் இந்த வளர்ச்சியில் விடுபடக்கூடாது, அனைத்து மாவட்டங்களையும் கைப்பிடித்து தூக்கிவிட வேண்டும் என்பதில் முதல்வர் மு.க.ஸ்டாலின் உறுதியாக இருக்கிறார்.

திறமையான மாணவர்களை கண்டறிந்து அவர்களின் திறமைகளை மேலும் அதிகப்படுத்தி அவர்களை அடுத்தக்கட்டத்திற்கு கொண்டு செல்ல இந்த அரசு தீவிரமாக செயல்படுகிறது. துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலினின் மேற்பார்வையில் நடைபெறும் 'நான் முதல்வன்' திட்டம் மிகப்பெரிய உத்வேகத்தை அளிக்கிறது.

தமிழ்நாட்டில் தகவல் தொழில்நுட்ப வளர்ச்சிக்கு அடித்தளம் இட்டவர் முத்தமிழறிஞர் கலைஞர் முதன்முதலில் தமிழ்நாட்டில் டைடல் பூங்காக்களை கலைஞர் உருவாக்கினார். தற்போது அதே வழியில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான இந்த ஆட்சியில் 7 நியோ டைடல் பூங்காங்களை உருவக்கியுள்ளோம். மேலும் 30 தொழிற் பூங்காக்களையும் உருவக்கியுள்ளோம். கடந்த 5 ஆண்டுகளில் தமிழ்நாட்டில் ஏறத்தாழ 36.52 லட்சம் வேலை வாய்ப்புகள் உருவாகியுள்ளது.

1,179 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தாகியுள்ளன. இந்த ஒப்பந்தங்களில் 867 ஒப்பந்தங்கள் செயல்பாட்டுக்கு வந்துள்ளன. மத்திய அரசின் தரவுகளின் படி 29.63 லட்சம் வேலைவாய்ப்புகள் தமிழ்நாட்டில் உருவாக்கப்பட்டுள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

# புதுவையில் ரூ.5,396 கோடிக்கு இடைக்கால பட்ஜெட்தாக்கல்

**புதுச்சேரி, பிப். 13-**

புதுச்சேரி சட்டசபையில் ரூ.5 ஆயிரத்து 396 கோடிக்கான இடைக்கால பட்ஜெட்டை முதல்வர் ரங்கசாமி தாக்கல் செய்தார்.

புதுவை சட்டசபைக்கான தேர்தல் வரும் ஏப்ரல் மாதம் தேர்தல் நடைபெற உள்ளதால் வரும் நிதி ஆண்டான 2026-27க்கு முழுமையான பட்ஜெட் தாக்கல் செய்யப்படவில்லை. இதற்கு பதிலாக அரசின் செலவினங்களுக்கு இடைக்கால பட்ஜெட் தாக்கல் செய்யப்பட்டது. இதற்காக புதுவை சட்டசபை நேற்று கூடியது. சபையில் நிதி பொறுப்பு வகிக்கும் முதல்-அமைச்சர் ரங்கசாமி, ஏப்ரல், மே, ஜூன், ஜூலை, ஆகஸ்ட் ஆகிய 5 மாதங்களுக்கு ரூ.5 ஆயிரத்து 396 கோடிக்கான இடைக்கால பட்ஜெட்டை தாக்கல் செய்தார்.

சபாநாயகர் குரல் வாக்கெடுப்பு மூலம் இடைக்கால பட்ஜெட்டுக்கு சபையின் ஒப்புதல் பெற்றார். சட்டசபை தேர்தலுக்கு பின் புதிய அரசு அமையும். புதிய அரசு 2026-27ம் ஆண்டுக்கான முழுமையான பட்ஜெட்டை தாக்கல் செய்யும். புதுவை சட்டசபையில் 2025-26ம் நிதி ஆண்டிற்கான அரசின் பல்வேறு துறைகளின் கூடுதல் செலவு அறிக்கையை முதல்-அமைச்சர், அமைச்சர்கள் துணை கொடையாக கோரினர். ஒட்டுமொத்தமாக அனைத்து துறைகளுக்கும் சேர்த்து ரூ.537 கோடியே 38 லட்சத்துக்கு கூடுதல் செலவினங்களுக்கு சபையின் ஒப்புதல் கோரப்பட்டது. சபாநாயகர் ஏம்பலம் செல்வம் குரல் வாக்கெடுப்பு நடத்தி இந்த கூடுதல் செலவினங்களுக்கு ஒப்புதல் பெற்றார்.

### நமீபியாவிற்கு எதிரான 2-வது லீக்:

# இஷான் கிஷன் அதிவேக அரைசதம்

**மும்பை, பிப். 13-**

டி-20 உலகக்கோப்பை போட்டி தொடரில் நேற்று நமீபியாவுக்கு எதிரான போட்டியில் இஷான் கிஷன் அதிவேக அரைசதம் அடித்து அசத்தினார்.



**முதல் வெற்றி...**

டி-20 உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டியில் நடப்பு சாம்பியனான இந்தியா ஏ பிரிவில் இடம் பெற்றுள்ளது. பாகிஸ்தான், அமெரிக்கா, நமீபியா, நெதர்லாந்து ஆகிய அணிகளும் அந்தப் பிரிவில் உள்ளன. சூர்யகுமார் யாதவ் தலைமையிலான இந்திய அணி மும்பை வான்கடே மைதானத்தில் நடந்த முதல் போட்டியில் அமெரிக்காவை 29 ரன் வித்தியாசத்தில் தோற்கடித்து முதல் வெற்றியை பதிவு செய்தது.

**20 பந்துகளில்...**

இந்நிலையில், நேற்று இந்திய அணி 2-வது ஆட்டத்தில் நமீபியாவுடன் மோதுகிறது. இப்போட்டியில் டாஸ் வென்ற இந்திய அணி முதலில் பேட்டிங்கை தேர்வு செய்தது. உடல் தகுதி இல்லாமல் அமெரிக்காவுக்கு எதிரான போட்டியில் ஆடிய அதிரடி பேட்ஸ்மேன் அபிஷேக் சர்மா டக் அவுட் ஆனார். இன்றைய போட்டியில் அவர் விளையாடவில்லை. அதனால் இஷான் கிஷனுடன் சஞ்சு சாம்சன் தொடக்க வரிசையில் விளையாடினார். இப்போட்டியில் 3 சிக்ஸர்கள் 1 பவுண்டரி அடித்து 22 ரன்னில் சஞ்சு சாம்சன் ஆட்டமிழந்தார். இதையடுத்து அதிரடியாக விளையாடிய இஷான் கிஷன் 20 பந்துகளில் அரைசதம் கடந்து அசத்தினார். 24 பந்துகளில் 61 ரன்கள் அடித்து இஷான் கிஷன் ஆட்டமிழந்தார்.

### அரசியலில் இருந்து என்னை ஒழித்துக்கட்ட சதி:

# அன்புமணி மீது ராமதாஸ் குற்றச்சாட்டு

**திண்டிவனம், பிப்.13-**

அரசியலில் இருந்து என்னை ஒழித்துக்கட்ட சதி நடப்பதாக அன்புமணி மீது ராமதாஸ் குற்றஞ்சாட்டியுள்ளார்.

திண்டிவனம் தைலாபுரம் தோட்டத்தில் பா.ம.க. நிறுவனர் ராமதாஸ் நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது:-

அரசியலில் இருந்து என்னை ஒழித்துக்கட்ட எதை எதையோ பேசுகிறார்கள். ஒரு கூட்டம் பொய் பேசுவதையே அரசியலாக கொண்டு செயல்படுகிறது. அந்த கூட்டத்தை நாங்கள் கட்சியில் இருந்தும், அடிப்படை உறுப்பினர் பதவியில் இருந்தும் நீக்கி விட்டோம். அவர்களிடம் ஒரு கூட்டம் சேர்ந்து செயல்படுகிறது.



என்னை பற்றி அவதூறாக மனம் புண்படும்படியும், ஏளனமாகவும், பொய்யும், புரட்டுமாக பேசுகின்றனர். எங்களை வசைப்பாடுகிறார்கள். என்னை மட்டுமின்றி அரசியல் அனுபவம் கொண்ட பா.ம.க. கவுரவ தலைவர் ஜி.கே.மணியையும் அவர்கள் வசைப்பாடுகிறார்கள்.

டெல்லி உயர்நீதிமன்றத்தில் நமக்கு சாதகமாக 2 முறை தீர்ப்பு வந்துள்ளது. தேர்தல் ஆணையத்தின் அதிகாரிகள் சிலரை அக்கும்பல் தன் வசப்படுத்தியதால் அவர்களுக்காக தேர்தல் ஆணையம் டெல்லி உயர்நீதிமன்றத்தில் சீராய்வு மனு தாக்கல் செய்துள்ளது. தேர்தல் ஆணையத்தில் அடிமட்ட அதிகாரிகள் ஒருதலைபட்சமாக நடந்து கொள்கிறார்கள். பாதிக்கப்பட்டவர்கள் தாக்கல் செய்யவேண்டிய வழக்கை தேர்தல் ஆணையம் செய்துள்ளது. தேர்தல் ஆணையம் சரியான திசையில் செல்லவில்லை. கூட்டணி குறித்து பேசிக் கொண்டிருக்கிறோம். இவ்வாறு அவர் கூறினார்.

### டி-20 உலகக் கோப்பை தொடர்:

# இலங்கை - வெஸ்ட் இண்டீஸ் வெற்றி

**மும்பை, பிப். 13-**

டி20 உலகக் கோப்பை தொடரில் லீக் ஆட்டங்களில் இலங்கை - வெஸ்ட் இண்டீஸ் அணிகள் வெற்றிப்பெற்றுள்ளன.

**19 பந்துகளில்...**

டி20 உலகக் கோப்பை 2026-ல் இலங்கை அணி மிகப்பெரிய வெற்றியைப் பெற்றுள்ளது. ஓமனுக்கு எதிரான ஆட்டத்தில் இலங்கை அணி 105 ரன்கள் வித்தியாசத்தில் வென்று சாதனை படைத்துள்ளது. ஓமனுக்கு எதிராக, இலங்கை அணி 20 ஓவர்களில் 225/5 ரன்கள் குவித்துள்ளது. இந்தப் போட்டியில் ஷனாகா 19 பந்துகளில் வேகமாக அரைசதம் அடித்து சாதனை படைத்தார். இந்தப் போட்டியில் அதிகபட்சமாக, குசல் மெண்டிஸ் 61, பவன் ரத்நாயகே 60 ரன்களும் எடுத்தார்கள். அடுத்து விளையாடிய ஓமன் அணி 20 ஓவர்களில் 120/9 ரன்கள் மட்டுமே எடுத்தது.

**மிகப்பெரிய வெற்றி...**

இந்த அணியில், அதிகபட்சமாக முகமது நதீம் 53 ரன்கள் எடுத்து அணியின் மோசமான தோல்வியை தடுத்து நிறுத்தினார். டி20 உலகக் கோப்பையில் மிகப்பெரிய வெற்றியைப் பெற்ற அணிகள் வருமாறு., 1. இலங்கை - 172 ரன்கள் வித்தியாசத்தில் (2007, கென்யாவுக்கு எதிராக), 2. மே.இ.தீ. - 134 ரன்கள் வித்தியாசத்தில் (2024, உகாண்டாவுக்கு எதிராக), 3. தெ.ஆ. - 130 ரன்கள் வித்தியாசத்தில் (2009, ஸ்காட்லாந்துக்கு எதிராக), 4. ஆப்கானிஸ்தான் - 130 ரன்கள் வித்தியாசத்தில் (2021, ஸ்காட்லாந்துக்கு எதிராக), 5. ஆப்கானிஸ்தான் - 125 ரன்கள் வித்தியாசத்தில் (2024, ஸ்காட்லாந்துக்கு எதிராக), 6. இங்கிலாந்து - 116 ரன்கள் வித்தியாசத்தில் (2012, ஆப்கனுக்கு எதிராக), 7. இலங்கை - 105 ரன்கள் வித்தியாசத்தில் (2026, ஓமனுக்கு எதிராக).

**இமாலய இலக்குடன்...**

மற்றொரு லீக் போட்டியில் இங்கிலாந்து, வெஸ்ட் இண்டீஸ் அணிகள் மோதின. டாஸ் வென்ற இங்கிலாந்து பவுலிங் தேர்வு செய்தது. அதன்படி, முதலில் ஆடிய வெஸ்ட் இண்டீஸ் அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 6 விக்கெட்டுக்கு 196 ரன்கள் குவித்தது. ரூதர்போர்டு அதிரடியாக ஆடி 42 பந்தில் 76 ரன்கள் குவித்தார். ரோஸ்டன் சேஸ் 34 ரன்னும், ஹோல்டர் 33 ரன்னும் எடுத்தனர். இங்கிலாந்தின் அடில் ரஷித், ஓவர்டன் தலா 2 விக்கெட் வீழ்த்தினர். 197 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இமாலய இலக்குடன் இங்கிலாந்து களமிறங்கியது. ஜேக்கப் பெத்தேல் 33 ரன்னும், பிலிப் சால்ட் 31 ரன்னும் எடுத்தனர். கடைசி வரை போராடிய சாம் கர்ரன் 43 ரன்கள் எடுத்தார். இங்கிலாந்து 19 ஓவரில் 166 ரன்களுக்கு ஆல் அவுட்டானது. இதன்மூலம் 30 ரன்கள் வித்தியாசத்தில் வெஸ்ட் இண்டீஸ் வெற்றி பெற்றது. வெஸ்ட் இண்டீஸ் சார்பில் குடகேஷ் மோடே 3 விக்கெட்டும், ரோஸ்டன் சேஸ் 2 விக்கெட்டும் வீழ்த்தினர்.

### சேப்பாக்கம் மைதானத்தில் இன்று

# நெதர்லாந்து-அமெரிக்கா மோதல்

**சென்னை, பிப். 13-**

டி-20 உலக கோப்பை கிரிக்கெட் தொடரின் லீக் ஆட்டம் சேப்பாக்கம் மைதானத்தில் இன்று நடைபெறுகிறது. இதில் நெதர்லாந்து-அமெரிக்கா பலப்பரீட்சை நடத்துகின்றன. சேப்பாக்கம் மைதானத்தில் இன்று நடைபெறும் போட்டி 3-வது லீக் ஆட்டம் ஆகும்.

டி-20 உலக கோப்பை கிரிக்கெட்டில் சென்னை சேப்பாக்கம் மைதானத்தில் 6 லீக் ஆட்டம் மற்றும் ஒரு சூப்பர் 8 சுற்று போட்டி என ஆக மொத்தம் 7 ஆட்டங்கள் நடத்தப்படுகிறது. அதன்படி, கடந்த 8-ந்தேதி நடந்த முதல் போட்டியில் நியூசிலாந்து 5 விக்கெட் வித்தியாசத்தில் ஆப்கானிஸ்தானையும் (டி பிரிவு), 2-வது ஆட்டத்தில் நியூசிலாந்து 10 விக்கெட் வித்தியாசத்தில் ஐக்கிய அரபு எமிரேட்சையும் (டி பிரிவு) தோற்கடித்தன.

**பாகிஸ்தானிடம்...**

சேப்பாக்கம் ஸ்டேடியத்தில் 3-வது போட்டி இன்று இரவு 7 மணிக்கு நடக்கிறது. இதில் ஏ பிரிவில் உள்ள நெதர்லாந்து- அமெரிக்கா அணிகள் மோதுகின்றன. நெதர்லாந்து அணி அமெரிக்காவை தோற் கடித்து 2-வது வெற்றியை பெறும் ஆர்வத்தில் உள்ளது. அந்த அணி முதல் ஆட்டத்தில் பாகிஸ்தானிடம் (3 விக்கெட்) தோற்றது. 2-வது போட்டியில் நமீபியாவை (7 விக்கெட்) வீழ்த்தியது. அமெரிக்க அணி இந்தியாவிடம் 29 ரன் வித்தியாசத்திலும், பாகிஸ்தானிடம் 32 ரன் வித்தியாசத்திலும் தோற்றது. அந்த அணி முதல் வெற்றிக்காக காத்திருக்கிறது.

**ரசிகர்கள் வருகை...**

இந்திய அணி ஆடாவிட்டாலும் சேப்பாக்கம் மைதானத்தில் முதல் 2 ஆட்டங்களுக்கு ரசிகர்களின் ஆதரவு பெரும் அளவில் இருந்தது. இதேபோல இன்றும் ரசிகர்கள் வருகை எதிர்பார்க்கப்படுகிறது. இன்று நடைபெறும் மற்ற போட்டிகளில் பி பிரிவில் உள்ள ஆஸ்திரேலியா-ஜிம்பாப்வே (கொழும்பு, காலை 11 மணி), கனடா-ஐக்கிய அரபு எமிரேட்ஸ் (டெல்லி, மாலை 3 மணி) அணிகள் மோதுகின்றன. ஆஸ்திரேலியா 2-வது வெற்றி ஆர்வத்தில் உள்ளது. அந்த அணி முதல் போட்டியில் அயர்லாந்தை 67 ரன்னில் வீழ்த்தி இருந்தது. ஜிம்பாப்வேயும் 2-வது வெற்றிக்காக காத்திருக்கிறது. தொடக்க ஆட்டத்தில் ஓமனை (8 விக்கெட்) தோற்கடித்தது. இத்தாலி, நேபாளம் அணிகள் முதல் வெற்றிக்காக காத்திருக்கின்றன. இரு அணிகளும் முதல் ஆட்டத்தில் தோல்வியை தழுவியது.

### மகாசிவராத்திரி, வார இறுதி நாட்கள்:

# தமிழ்நாடு முழுவதும் 1,360 சிறப்பு பேருந்துகள் இயக்கம்

**சென்னை, பிப். 13-**

மகாசிவராத்திரி (பிப்.15) மற்றும் வார இறுதி தினங்களை முன்னிட்டு 1,360 சிறப்பு பேருந்துகள் இயக்கப்படும் என தமிழ்நாடு அரசு விரைவு போக்குவரத்துக்கழகம் தெரிவித்துள்ளது.

சென்னை கிளாம்பாக்கத்திலிருந்து திருவண்ணாமலை, திருச்சி, கும்பகோணம், மதுரை, திருநெல்வேலி, நாகர்கோவில், கன்னியாகுமரி, தூத்துக்குடி, கோவை, சேலம், ஈரோடு, திருப்பூர் ஆகிய இடங்களுக்கு வியாழக்கிழமை(பிப்.12) 125 பேருந்துகளும், வெள்ளிக்கிழமை (பிப்.13) 500 பேருந்துகளும், சனிக்கிழமை (பிப்.14) 505 பேருந்துகளும் இயக்க திட்டமிடப்பட்டுள்ளன. இதுபோல, சென்னை கோயம்பேட்டிலிருந்து திருவண்ணாமலை, நாகை, வேளாங்கண்ணி, ஒசூர், பெங்களூரு ஆகிய இடங்களுக்கு வெள்ளிக்கிழமை 55 பேருந்துகளும், சனிக்கிழமை 55 பேருந்துகளும், பெங்களூரு, திருப்பூர், ஈரோடு, கோவை ஆகிய இடங்களிலிருந்தும் பல்வேறு இடங்களுக்கு 100 சிறப்பு பேருந்துகளும் இயக்கப்படவுள்ளன.

மேலும், மாதவரத்திலிருந்து வெள்ளி மற்றும் சனிக்கிழமை 20 பேருந்துகள் என மொத்தம் 1360 சிறப்பு பேருந்துகள் இயக்கப்படவுள்ளன. இதுதவிர, ஞாயிற்றுக்கிழமை சொந்த ஊர்களில் இருந்து சென்னை மற்றும் பெங்களூரு திரும்ப வசதியாக பயணிகளின் தேவைக்கேற்ப அனைத்து இடங்களிலிருந்தும் சிறப்பு பேருந்துகள் இயக்கிட திட்டமிடப்பட்டுள்ளது என விரைவு போக்குவரத்துக்கழகம் வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## திண்டுக்கல் மாவட்டத்தில்

# கல்லூரி கவுரவ விரிவுரையாளர்கள் வகுப்பை புறக்கணித்து போராட்டம்

## திண்டுக்கல் சி.சீனிவாசன் நேரில் ஆதரவு




**திண்டுக்கல், பிப். 13-**

திண்டுக்கல்லில் எம்.வி.எம். அரசு மகளிர் கல்லூரியில் கௌரவ விரிவுரையாளர்கள் ஐந்து அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி கடந்த 9-ம் தேதி முதல் வகுப்பை புறக்கணித்து போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். அவர்களை அ.தி.மு.க. பொருளாளரும் திண்டுக்கல் மேற்கு மாவட்ட செயலாளருமான திண்டுக்கல் சி.சீனிவாசன் நேரில் சந்தித்து போராட்டத்திற்கு வாழ்த்துக்களை தெரிவித்து பேசியதாவது:-

தமிழகம் முழுவதும் அரசு கலை அறிவியல் மற்றும் கல்வியியல் கல்லூரிகளில் 30 ஆண்டுகளுக்கும் மேலாக கௌரவ விரிவுரையாளர்களாக 8 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் பணியாற்றி வருகின்றனர். அவர்களின் மிக முக்கியமான ஐந்து அம்ச கோரிக்கைகளை நிறைவேற்றாமல் திமுக அரசு காலம் தாழ்த்தி வருகிறது. அதனால் கடந்த 9-ம் தேதி முதல் வகுப்புகளை புறக்கணித்து பேராசிரியர்கள் ஆர்ப்பாட்டத்திலும் போராட்டத்திலும் ஈடுபட்டு வருகின்றனர். இது மட்டுமல்லாது மாற்றுத்திறனாளிகள், அங்கன்வாடி பணியாளர்கள், சத்துணவு ஊழியர்கள், வருவாய்த்துறை அலுவலர்கள் என பல்வேறு அமைப்பினர் தங்களது கோரிக்கைகளை நிறைவேற்ற கோரி தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். ஆனால் இந்த திமுக அரசு அவர்களின் கோரிக்கைகளை நிறைவேற்றுவதில் கவனம் செலுத்தாமல் செவிடன் காதில் சங்கு ஊதிய கதையாக இருந்து வருகிறது.

தமிழகத்தின் நிலைமை இவ்வாறு இருக்க முதல்வர் ஸ்டாலின் தனக்குத்தானே பாராட்டு விழா வைத்துக் கொள்கிறார். மகன் துணை முதல்வர் உதயநிதி தந்தையை பாராட்டுகிறார். முதல்வர் ஸ்டாலின் தனது மகனை பாராட்டுகிறார். விளம்பர ஆட்சிதான் நடைபெற்று வருகிறது. இன்னும் இந்த ஆட்சி முடிய 50 நாட்களே உள்ளன. விரைவில் ஆட்சி மாற்றம் ஏற்படும். மீண்டும் அ.தி.மு.க. ஆட்சிக்கு வந்த உடன் வருங்கால முதல்வர் எடப்பாடியார் போராட்டம் நடத்தி வருகின்ற அமைப்பினர்களின் கோரிக்கைகளை நிறைவேற்றுவார் இவ்வாறு இவர் பேசினார். உடன் மாவட்ட எம்.ஜி.ஆர். இளைஞர் அணி செயலாளர் ராஜேஷ் கண்ணா, மாவட்ட வர்த்தக அணி செயலாளர் மீனாட்சி சுந்தரம், மாவட்ட மாணவரணி செயலாளர் தனஞ்செயன், துணை செயலாளர் கருப்புசாமி உள்ளிட்ட பலர் இருந்தனர்.



**திண்டுக்கல் மாவட்ட தலைமை கட்சி அலுவலகத்தில் ரெட்டியார்சத்திரம் மேற்கு ஒன்றிய அ.தி.மு.க. செயலாளர் சேம்பர் ஆரோக்கியசாமி ஏற்பாட்டின் பேரில் கட்சி துணை பொது செயலாளரும் திண்டுக்கல் கிழக்கு மாவட்ட செயலாளருமான நத்தம் விசுவநாதன் முன்னிலையில் ஜி.தும்மலபட்டி தி.மு.க. கிளை செயலாளர் துரைராஜ் தலைமையில் ஏராளமான தி.மு.க.வினர் அக்கட்சியில் இருந்து விலகி தங்களை கழகத்தில் இணைத்துக் கொண்டனர். உடன் மாநில அம்மா பேரவை இணை செயலாளர் ஆர்.வி.என். கண்ணன், முன்னாள் எம்.பி.உதயக்குமார், மாவட்ட பொருளாளர் வேணுகோபால், மாவட்ட எம்.ஜி.ஆர். மன்ற செயலாளர் ராஜ்மோகன், நிலக்கோட்டை ஒன்றிய செயலாளர் யாகப்பன், அகரம் பேரூர் செயலாளர் சக்திவேல், மாவட்ட தகவல் தொழில்நுட்ப பிரிவு துணை செயலாளர் ஜெயசீலன் மற்றும் பலர் உள்ளனர்.**

# நிலக்கோட்டையில் சப்- கோர்ட்டை உடனடியாக தொடங்க கோரி வழக்கறிஞர் சங்கம் உண்ணாவிரதம்



**வத்தலகுண்டு, பிப். 13-**

திண்டுக்கல் மாவட்டம் ,நிலக்கோட்டை வட்டார வழக்கறிஞர்கள் சங்கம் சார்பில் சங்கச் செயலாளர் இளங்கோவன் தலைமையில் நிலக்கோட்டையில் சப் கோர்ட் உடனடியாக தொடங்க கோரி உண்ணாவிரத போராட்டம் நடைபெற்றது.

போராட்டத்தில் சங்கத் தலைவர் சிவபிரகாஷ், சங்க பொருளாளர் செல்வநாதன் ஆகியோர்கள் முன்னிலை வகித்தனர். உண்ணாவிரத போராட்டத்தில் திண்டுக்கல் மாவட்டத்தில் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் தொடங்கப்பட்டு பல ஆண்டுகளாக செயல்பட்டு வருகிறது. அந்த வகையில் மற்ற தாலுகாவை விட மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் பழமையான நீதிமன்றம் பல வழக்குகளை உள்ளடக்கிய நீதிமன்றம் ஆகும். அப்படிப்பட்ட நீதிமன்றத்திற்கு உட்பட்ட பகுதிகளில் சுமார் 30 ஆண்டுகளுக்கு மேலாக நிலக்கோட்டையில் சப் கோர்ட் கட்ட வேண்டும் என்று பல ஆண்டுகளாக கோரிக்கை வைத்தும் பல முறை நிதி ஒதுக்கியும் தொடர்ந்து இழுபறியில் வைத்து நீதிமன்றம் கட்டாததை கண்டித்து உடனடியாக நிலக்கோட்டையில் சப் கோர்ட் தொடங்க வலியுறுத்தி உண்ணாவிரத போராட்டத்தில் பலகைகள் வைத்து கோரிக்கைகளை வலியுறுத்தி பேசினார்கள். இந்தப் போராட்டத்தில் இணைச்செயலாளர் கணேசன், உதவி பொருளாளர் தமிழ்ச்செல்வி, உதவி தலைவர் கோபாலகிருஷ்ணன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## ஒட்டன்சத்திரத்தில் தேனீ வளர்ப்பு பயிற்சி



**ஒட்டன்சத்திரம், பிப். 13-**

திண்டுக்கல் மாவட்டம் வேளாண் இணை இயக்குனராக உழவர் பயிற்சி நிலையம் சார்பில் ஒட்டன்சத்திரம் உழவர் ஆர்வலர் குழு சார்பில் விவசாயிகளுக்கு தேனீ வளர்ப்பு பயிற்சி வேளாண்மை உழவர் பயிற்சி நிலையதுணை இயக்குனர் ரமேஷ் தலைமையில் நடைபெற்றது.

இப்பயிற்சில் கணக்கன்பட்டி ஈஷாக் தொழில்நுட்ப உரையாற்றினார். விவசாயிகள் வேளாண்மை அலுவலர்கள் கலந்து கொண்டனர். ஒட்டன்சத்திர வட்டார அட்மா திட்ட பணியாளர்கள். ஒருங்கிணைப்பு செய்திருந்தனர். படம். திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரத்தில் தேனீ வளர்ப்பு பயிற்சி நடைபெற்றது.

## நத்தம் பகுதியில் சுண்டைக்காய் சீசன் தொடக்கம்



**நத்தம், பிப். 13-**

காய்கறிகளில் மிகவும் சிறிய காய் சுண்டைக்காய் ஆகும். இந்த சுண்டக்காய்கள் நத்தம் பகுதியில் மலை அடிவார பகுதிகளிலும், நிலப்பரப்பினிலும், மானாவாரி காட்டு பகுதிகளிலும் தானாக முளைத்து பூ பூத்து காயாகும் தன்மை கொண்டது. தற்போது இந்த சுண்டக்காய்கள் அறுவடையாகி நத்தம் பகுதியில் விற்பனைக்கு வந்துள்ளது. இந்த காயானது தற்போது ஒருபடி ரூ.160-க்கும், கால்படி ரூ.40-க்கும் விற்பனை ஆகிறது. மருத்துவ குணம் கொண்ட இந்த சுண்டக்காய்களை பொதுமக்கள் விரும்பி வாங்கி செல்கின்றனர்.இந்த சுண்டக்காய் கசப்பு தன்மை கொண்டுள்ளதால் வத்தல் போடுவதற்கும், குழம்பிற்கும் அதிகமாக பயன்படுத்தபடுகிறது.

மேலும் உடலிலுள்ள கிருமிகளையும், கொழுப்புகளை கரைய செய்வதாகவும், ஊட்டச்சத்து நிறைந்துள்ளாகவும் கூறப்படுகிறது. மேலும் தற்போது தொடங்கியுள்ள இந்த சுண்டக்காய் சீசன் மார்ச் மாத கடைசி வரை இருக்கும் என தெரிவிக்கபட்டுள்ளது.

# கொத்தடிமை தொழிலாளர் ஒழிப்பு உறுதிமொழி ஏற்பு



**வத்தலகுண்டு, பிப். 13-**

திண்டுக்கல் மாவட்டம் நிலக்கோட்டை தாலுகாவில் விளாம்பட்டி முத்தாலபுரம் மற்றும் சித்தர் நத்தம் ஆகிய கிராமங்களில் சைல்ட் வாய்ஸ் மற்றும் வைகை டிரஸ்ட் ஒருங்கிணைந்து கொத்தடிமை தொழிலாளர் இல்லாத ஒரு உலகத்தை படைப்போம் என்ற கோஷத்துடன் ஊர்வலம் கொத்தடிமை தொழிலாளர்களாக இருந்து மடிந்த அனைவருக்கும் அஞ்சலி செலுத்தும் வகையிலும் கொத்தடிமை தொழிலாளர் இல்லாத தமிழகத்தை உருவாக்குவோம் என்ற உறுதிமொழி உடன் ஊர்வலம் மற்றும் நினைவாஞ்சலி நடைபெற்றது. இந்த கூட்டத்திற்கு வைகை டிரஸ்ட் ஒருங்கிணைப்பாளர் விஷாலினி தலைமை வைக்க சைல்ட் வாய்ஸ் களப்பணியாளர் முத்து லட்சுமி முன்னிலை வைக்க சைல்டு வாய்ஸ் இயக்குனர் அண்ணாதுரை கருத்துரை நிகழ்த்தினார் இறுதியில் வைகை டிரஸ்ட் களப்பணியாளர் விக்னேஷ் நன்றியுரை கூறினார் இந்நிகழ்ச்சிக்கு தொழிலாளர் சங்க மாரிமுத்து சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார்

## பரமக்குடி அரசு கலைக்கல்லூரியில் கவுரவ விரிவுரையாளர்கள் உள்ளிருப்பு போராட்டம்



**பரமக்குடி, பிப். 13-**

பரமக்குடி அரசு கலைக்கல்லூரியில் கவுரவ விரிவுரையாளர்கள் 6 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி பணி புறக்கணிப்பு செய்து உள்ளிருப்பு போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

தமிழகம் முழுவதும் உள்ள அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் சுமார் 7000 திற்கு மேற்பட்ட கௌரவ விரிவுரையாளர்கள் பணியாற்றி வருகின்றனர். பணி நிரந்தரம், நீதிமன்ற உத்தரவின்படி யுஜிசி ஊதியம் 57, 200, பெண் கவுரவ விரிவுரையாளர்களுக்கு சம்பளத்தும் கூடிய மகப்பேறு விடுப்பு, 12 மாத சம்பளம் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி பணியை புறக்கணித்து உள்ளிருப்பு போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இந்த நிலையில் பரமக்குடி அரசு கலை கல்லூரியில் பணியாற்றக்கூடிய 40 பெண் கவுரவ விரிவுரையாளர்கள் உட்பட 60 கௌரவ விரிவுரையாளர்கள் கையெழுத்து இடாமல் பணியை புறக்கணிப்பு செய்து உள்ளிருப்பு போராட்டத்தை தொடங்கியுள்ளனர்.

தங்களின் கோரிக்கைகளை நிறைவேற்ற ஆதரவு கோரி மாணவர்கள் மற்றும் பொதுமக்களிடம் துண்ட பிரசுரம் விநியோகம் செய்வது, கருப்பு துணி கட்டி ஆர்ப்பாட்டம், அங்கப் பிரவேசம் ஆர்ப்பாட்டம் ,மாணவர்கள் மற்றும் பொதுமக்களிடம் பிச்சை எடுக்கும் போராட்டம் உள்ளிட்ட போராட்டங்கள் நடைபெறும் என தெரிவித்தனர். இதனைத் தொடர்ந்து கோரிக்கைகளை வலியுறுத்தி கோஷமிட்டனர்.

## பிரபல ரவுடி கலெக்டர் உத்தரவின் பேரில் குண்டர் சட்டத்தில் சிறையில் அடைப்பு

**விருதுநகர், பிப். 13-**

விருதுநகர் மாவட்டம் ராஜபாளையம் அம்மன் பொட்டல் தெருவை சேர்ந்த குட்லக் என்ற மாரிச்செல்வம் (30) என்பவர் மீது பல்வேறு குற்ற வழக்குகள் நிலுவையில் உள்ளது. கடந்த ஏப்ரல் மாதம் பொது மக்களை அச்சுறுத்தும் வகையில் இவர் ஈடுபட்டதாக வந்த புகாரை தொடர்ந்து சிறையில் அடைக்கப்பட்டார்.

இந்த நிலையில் இவர் மேலும் குற்ற சம்பவங்களில் தொடர்ந்து ஈடுபடாமல் இருப்பதை தடுக்கும் பொருட்டு மாவட்ட எஸ்.பி. பரிந்துரையின் பேரில், மாவட்டகலெக்டர் சுகபுத்ரா உத்தரவு படி ரவுடி மாரிச்செல்வம் மதுரை மத்திய சிறையில் குண்டர் தடுப்பு காவலில் அடைக்கப்பட்டார்.

### 2026-ம் ஆண்டு ரியல் ஹீரோ எடப்பாடி பழனிச்சாமிதான்:

# தாலி கட்டிய மனைவி போன்று தி.மு.க. கூட்டணி கட்சியினர் உள்ளனர்

## முன்னாள் அமைச்சர் செல்லூர் கே.ராஜூ பேட்டி



**மதுரை, பிப் 13-**

மதுரையில் உள்ள அதிமுக மாநகர் மாவட்ட கட்சி அலுவலகத்தில் முன்னாள் அமைச்சர் செல்லூர் கே. ராஜூ எம்.எல்.ஏ. நிருபர்களிடம் கூறியதாவது-

அ.தி.மு.க. ஐடி வின் சார்பில் பிரசாரத்தையொட்டி செயலியை அறிமுக, செயல்பாடுகள் குறித்து விளக்கம் அளித்தார். தொடர்ந்து இல்லம் தோறும் ஐடி வின் நிர்வாகிகள் மக்கள் இடையே 2021 முதல் தற்போது வரை விலைவாசி வேறுபாடுகள் குறித்து பிரச்சாரம் செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. தற்போது தான் செயலியின் பாஸ்வேர்டு முழு கட்டுப்பாடு வழங்கப்பட்டுள்ளது. இதனை அடுத்து பிரச்சாரத்தை நிமிடத்திற்கு நிமிடம் எடப்பாடி பழனிச்சாமி கண்காணிப்பார். பொதுமக்களிடமிருந்து சர்க்கரை, அரிசி, சமையல் எண்ணெய் உள்ளிட்ட பல்வேறு பொருட்களின் பயன்பாடுகள் அளவு குறித்து தகவல் சேகரிக்கப்பட்டுகிறது. பின்னர் பில் அவர்களுக்கு வழங்கப்படும். இரண்டாவது கட்டமாக அ.தி.மு.க. அளித்த வாக்குறுதிகள் குறித்தும் நிறைவேற்றாத வாக்குறுதிகள் குறித்தும் பிரச்சாரம் செய்யப்படும். மூன்றாவதாக அ.தி.மு.க.வின் சாதனைகள் குறித்தும் பிரச்சாரம் செய்யப்படும். மக்கள் மத்தியில் வரவேற்பு எந்த அளவுக்கு இருக்கிறது என்று கேட்டதற்கு, தற்போது தான் முழு திரைப்படத்தை காட்ட உள்ளோம். இதற்கு முன்னால் இந்த செயலி மூலம் வீடுகள் தோறும் பிரச்சாரம் செய்தது ட்ரெய்லர் தான்.சாதனை. அரிசி, எண்ணெய் உள்ளிட்டவைகளின்களின் விலை உயர்வு காரணம் ஜிஎஸ்டி ஆக இருப்பதால் மத்திய அரசு காரணமாக இருக்கலாம் என்று கேட்டதற்கு..? எதற்கெடுத்தாலும் மத்திய அரசை குறை கூறக் கூடாது. அவர்கள் ஒரு 1%, 2% மட்டுமே கூட குறைய வரி போடுகிறார்கள். எல்லா ஆட்சியிலும் விலைவாசி காலத்திற்கு ஏற்ப மாற்றங்கள் இருக்கத்தான் செய்யும், அதனை கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கத் தான் வேண்டும்.

ஆனால் தற்போது தாலி கட்டிய மனைவி போன்று தி.மு.க. இந்திய கம்யூனிஸ்ட் கட்சி செயல்படுகிறார்கள். இந்த நிலையில் காங்கிரஸ் மட்டும் தான் எதிர்த்து பேசுகின்றனர். இந்தியாவில் தலித்துகள் அதிகம் பாதிக்கப்பட்ட மாநிலம் தமிழ்நாடு, இதில் பெண்கள் அதிக அளவில் பாலியல் வன்கொடுமைக்கு ஆளாகி இருக்கின்றனர் இதற்கு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. தி.மு.க. கம்யூனிஸ்ட் கூட்டணியில் இருந்து வருகின்றனர். தி.மு.க. ஹீரோவா ஹீரோவா என்று சொல்ல முடியவில்லை, அவர் முதல்வர். மக்கள் கொதித்து உள்ளனர். தி.மு.க. கூட்டணி எதிர்க்கட்சியாக கூட வர முடியாது. எப்போது தேர்தல் வரும் வாக்களிக்க மக்கள் ஆர்வமுடன் காத்திருக்கின்றனர். 2026 ஆம் ஆண்டு ரியல் ஹீரோ எடப்பாடி பழனிச்சாமி தான். முதல்வர் ஆவார். அ.தி.மு.க. ஆட்சி அமைந்ததும் பூரண மதுவிலக்கு அமையப்படும் என்ற கேள்விக்கு அது குறித்து எடப்பாடி பழனிச்சாமி தான் முடிவு எடுப்பார். இவ்வாறு அவர் கூறினார்.

பேட்டியின் போது வில்லாபுரம் ராஜா, எம்.எஸ். பாண்டியன், ஆர்.அண்ணாத்துரை, பா.குமார், பேராசிரியர் ஜெயபால், ஏ.பார்த்திபன், வி.பி.ஆர்.செல்வகுமார், பரவை ராஜா, திரவியம், ஐ.டி. விங்க் மணிகண்டன், மாவட்ட செயலாளர் கவிச்செல்வம் தங்கம், மார்க்கெட் மார்நாடு, வி.கணேசன், எம்.ஜி.ராமச்சந்திரன், கே.வி. கே.கண்ணன், எம்எஸ்.செந்தில்குமார், கே.கலைச்செல்வம், பைக்காரா முத்துவேல், பைக்காரா கருப்பசாமி உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

# துணை முதல்வர் உதயநிதி பிறந்தநாள் விழா



**பரமக்குடி, பிப். 13-**

துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாளை முன்னிட்டு பரமக்குடி சட்டமன்றத் தொகுதி எமனேஸ்வரத்தில் பரிசு பொருட்கள் வழங்கப்பட்டது.

ராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட பகுதிகளில் தமிழக துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாளை முன்னிட்டு பரமக்குடி சட்டமன்ற உறுப்பினர் செ.முருகேசன் ஏற்பாட்டில் நலத்திட்ட உதவிகள் வழங்கப்படுகிறது. அதன் துவக்க விழா பரமக்குடி நகராட்சிக்கு உட்பட்ட எமனேஸ்வரம் நேருஜி மைதானத்தில் நடைபெற்றது. இவ்விழாவிற்கு பரமக்குடி சட்டமன்ற உறுப்பினர் முருகேசன் தலைமை வகித்தார். நகர் மன்ற தலைவரும், தெற்கு நகர செயலாளருமான சேது கருணாநிதி முன்னிலை வகித்தார்.வடக்கு நகர செயலாளர் ஜீவரத்தினம் வரவேற்றார்.

இவ்விழாவிற்கு மாவட்ட செயலாளர் காதர் பாட்ஷா முத்துராமலிங்கம் எம் எல்ஏ கலந்து கொண்டு 6,7,8 ஆகிய வார்டுகளில் உள்ள பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். விழாவில் ஒன்றியச் செயலாளர்கள் ஜெயக்குமார், குணசேகரன், கதிரவன்,சக்தி, தெற்கு நகர இளைஞரணி அமைப்பாளர் வழக்கறிஞர் துரைமுருகன், கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை அமைப்பாளர் செந்தில் செல்வானந்த், உதயநிதி ஸ்டாலின் மன்றம் மாவட்ட துணைச் செயலாளர் கார்த்திக் பாண்டியன்,மனோகரன் உட்பட நிர்வாகிகள் ஏராளமானோர் கலந்து கொண்டனர். முடிவில் நகர் மன்ற உறுப்பினர் குபேந்திரன் நன்றி கூறினார்.

## திருமங்கலம் அரசு கல்லூரியில் டெங்கு தடுப்பு விழிப்புணர்வு நிகழ்வு



**திருமங்கலம், பிப். 13-**

திருமங்கலம் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் டெங்கு தடுப்பு மற்றும் போதைப்பொருள் தடுப்பு பற்றிய விழிப்புணர்வு நிகழ்ச்சி சிறப்பாக நடைபெற்றது. இந்நிகழ்விற்கு கல்லூரியின் முதல்வர் சிங்காரவேலன் அவர்கள் தலைமை தாங்கினார். கல்லூரியின் இளைஞர் செஞ்சிலுவை கிளப் பொறுப்பாளர் மற்றும் விரிவுரையாளர் தனலட்சுமி வரவேற்புரை யாற்றினார்.ஏராளமான மாணவ மாணவிகள் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்ச்சியில் வட்டார சுகாதார மேற்பார்வையாளர் பழனி சிறப்பாளராக பங்கேற்று டெங்கு காய்ச்சலை தடுப்பது பற்றியும் அதன் அறிகுறிகள் பற்றியும் மேலும் போதைப்பொருள் பயன்படுத்துவதால் ஏற்படும் தீமைகள் குறித்தும் விரிவாக எடுத்துரைத்தார். இந்நிகழ்ச்சியில் ஜெகநாதன் என்எஸ்எஸ் பொறுப்பாளர் செல்லப்பாண்டி ராகுல் கண்ணன் சுகாதார ஆய்வாளர் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.



● முதல்வர் மு.க.ஸ்டாலின் பெருநகர சென்னை மாநகராட்சியின் தண்டையார்பேட்டை மண்டலத்திற்குட்பட்ட கொருக்குப்பேட்டை, மணலி சாலையில் இரயில்வே 2பி சந்திக்கடவில் 96.04 கோடி ரூபாய் செலவில் புதிதாக கட்டப்பட்ட மேம்பாலத்தினை பொதுமக்கள் பயன்பாட்டிற்குத் திறந்து வைத்தார். இந்த நிகழ்ச்சியில் அமைச்சர்கள் கே.என். நேரு, பி.கே.சேகர்பாபு, சென்னை மாநகராட்சி மேயர் பிரியா, பாராளுமன்ற உறுப்பினர் கலாநிதி வீராசாமி, சட்டமன்ற உறுப்பினர்கள் ஆர்.டி.சேகர், எபிநேசர், ஆர்.மூர்த்தி, துணை மேயர் மு.மகேஷ்குமார், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் கார்த்திகேயன், சென்னை மாநகராட்சி ஆணையர் குமரகுருபரன், சென்னை குடிநீர் வாரியத்தின் மேலாண்மை இயக்குநர் வினய், சென்னை மாநகராட்சி வடக்கு வட்டார துணை ஆணையர் கட்டா ரவி தேஜா மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




● முதல்வர் மு.க.ஸ்டாலின் சென்னை மாநகராட்சியின் கொருக்குப்பேட்டை, எண்ணூர் நெடுஞ்சாலையில் ரயில்வே 2ஏ சந்திக்கடவில் 75 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்படவுள்ள மேம்பாலத்திற்கு அடிக்கல் நாட்டினார். இந்த நிகழ்ச்சியில், அமைச்சர்கள் கே.என்.நேரு, பி.கே.சேகர்பாபு, சென்னை மாநகராட்சி மேயர் ஆர்.பிரியா, பாராளுமன்ற உறுப்பினர் டாக்டர் கலாநிதி வீராசாமி, சட்டமன்ற உறுப்பினர்கள் ஆர்.டி.சேகர், எபிநேசர், ஆர்.மூர்த்தி, துணை மேயர் மு.மகேஷ்குமார், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் கார்த்திகேயன், சென்னை மாநகராட்சி ஆணையர் குமரகுருபரன், சென்னை குடிநீர் வாரியத்தின் மேலாண்மை இயக்குநர் டாக்டர் வினய், சென்னை மாநகராட்சி வடக்கு வட்டார துணை ஆணையர் கட்டா ரவி தேஜா மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



● முதல்வர் மு.க.ஸ்டாலின் சென்னை மாநகராட்சியின் கொருக்குப்பேட்டை மணலி சாலையில் புதிய பாலத்திற்கு அருகில் 1 கோடியே 10 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட உள்ள பூங்காவிற்கு அடிக்கல் நாட்டினார். இந்த நிகழ்ச்சியில், அமைச்சர்கள் கே.என்.நேரு, பி.கே.சேகர்பாபு, சென்னை மாநகராட்சி மேயர் ஆர்.பிரியா, பாராளுமன்ற உறுப்பினர் டாக்டர் கலாநிதி வீராசாமி, சட்டமன்ற உறுப்பினர்கள் ஆர்.டி.சேகர், எபிநேசர், ஆர். மூர்த்தி, துணை மேயர் மகேஷ்குமார், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் கார்த்திகேயன், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் குமரகுருபரன், சென்னை குடிநீர் வாரியத்தின் மேலாண்மை இயக்குநர் வினய், சென்னை மாநகராட்சி வடக்கு வட்டார துணை ஆணையர் கட்டா ரவி தேஜா மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# சென்னையில் ரூ.96.04 கோடியில் புதிய மேம்பாலம்

## முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்

**சென்னை, பிப். 13-**

சென்னையில் ரூ.96.04 கோடி செலவில் புதிதாக கட்டப்பட்ட மேம்பாலத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார். மேலும், புதிய பாலத்திற்கு அருகில் ரூ.1.10 கோடியில் அமைக்கப்படவுள்ள பூங்காவிற்கு அவர் அடிக்கல் நாட்டினார்.

தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவித்திருப்பதாவது;- தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று (12.02.2026) பெருநகர சென்னை மாநகராட்சியின் தண்டையார்பேட்டை மண்டலத்திற்குட்பட்ட கொருக்குப்பேட்டை, மணலி சாலையில் ரெயில்வே 2பி சந்திக்கடவில் 96.04 கோடி ரூபாய் செலவில் புதிதாக கட்டப்பட்ட மேம்பாலத்தினை பொதுமக்கள் பயன்பாட்டிற்குத் திறந்து வைத்தார்.

மேலும், கொருக்குப்பேட்டை, எண்ணூர் நெடுஞ்சாலையில் ரெயில்வே 2ஏ சந்திக்கடவில் 75 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்படவுள்ள மேம்பாலம் மற்றும் தண்டையார்பேட்டை மண்டலம், கொருக்குப்பேட்டை மணலி சாலையில் புதிய பாலத்திற்கு அருகில் 1 கோடியே 10 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட உள்ள பூங்கா ஆகியவற்றிற்கு அடிக்கல் நாட்டி, பணிகளைத் தொடங்கி வைத்தார்.

போக்குவரத்து நெரிசல் மிகுந்த கொருக்குப்பேட்டை, மணலி சாலை மற்றும் எண்ணூர் நெடுஞ்சாலையில் உள்ள ரெயில்வே 2பி மற்றும் 2ஏ சந்திக்கடவுகளில் தொடர் இடைவெளிகளில் ரெயில் போக்குவரத்துக்கு ஏதுவாக சுமார் 42 ஆயிரம் வாகனங்களின் போக்குவரத்து நிறுத்தம் செய்யப்படுகிறது. இதனால் இவ்விரு சந்திக்கடவுகளையும் கனரக வாகனங்களும் பொதுமக்களும் கடப்பதற்கு காலதாமதமாகிறது.

இதன் காரணமாக இப்பகுதி மக்களின் 40 ஆண்டு கால கோரிக்கையினை நிறைவேற்றி, பொதுமக்களின் சிரமத்தை போக்கும் வகையிலும், காலநேரம் மற்றும் எரிபொருள் சேமிப்பை கருத்திற்கொண்டும் மேற்படி சந்திக்கடவுகளுக்கு மாற்றாக மணலி சாலை மற்றும் எண்ணூர் நெடுஞ்சாலையில் மேம்பாலங்கள் அமைக்க திட்டமிடப்பட்டது.

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் 2022-23ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கையில், கொருக்குப்பேட்டையில் உள்ள மணலி சாலையில் 2பி ரெயில்வே சந்திக்கடவில் புதிய மேம்பாலம் அமைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது. அந்த அறிவிப்பின்படி, தண்டையார்பேட்டை மண்டலம், கொருக்குப்பேட்டை, மணலி சாலையில் ரெயில்வே 2பி சந்திக்கடவில் உட்கட்டமைப்பு மற்றும் வசதிகள் நிதியின் கீழ் 96.04 கோடி ரூபாய் செலவில் புதிய பாலம் கட்டப்பட்டு மாண்புமிகு தமிழ்நாடு முதல்வரால் நேற்று மக்களின் பயன்பாட்டிற்காகத் திறந்து வைத்து, வாகனத்தில் பயணம் செய்தார். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தமிழகத்தில்... (1-ம் பக்க தொடர்ச்சி)

விழுப்புரம், தர்மபுரி, ராணிப்பேட்டை, திருப்பத்தூர், கோயம்புத்தூர், நாமக்கல், ஈரோடு உள்ளிட்ட மாநிலத்தின் பல்வேறு மாவட்டங்களில் பரவலாக மேற்கொள்ளப்பட்டுள்ளன.

### முதல்வர் முன்னிலையில்...

தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில் பாரத் பயோடெக் நிறுவனம், 5000 கோடி ரூபாய் முதலீடு மற்றும் 5000 நபர்களுக்கு வேலைவாய்ப்பு என்ற வகையில் காஞ்சிபுரம் மாவட்டத்தில் அமைக்க உள்ள உயிரியல் மற்றும் மருந்துகள் உற்பத்தி திட்டத்திற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் மற்றும் ஹுண்டாய் மோட்டார் இந்தியா ஃபவுண்டேஷன் நிறுவனம், 7000 மாணவர்களுக்கு திறன்பயிற்சி மேற்கொள்ளும் திட்டத்திற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் ஆகிய 2 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டன. மேற்கூறிய திட்டங்கள், பல்வேறு துறைகளில், மாநிலம் முழுவதும் நிறுவப்பட உள்ளது என்பதுதான் மாநாட்டின் சிறப்பம்சமாகும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.



● துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் 19 வயதிற்குட்பட்டோருக்கான கிரிக்கெட் உலகக் கோப்பை போட்டியில் எதிரணியினரின் விக்கெட்டுகளை அதிக அளவில் வீழ்த்தி இந்திய அணி கோப்பையை வெல்வதற்கு காரணமான தமிழ்நாட்டைச் சேர்ந்த இளம் விளையாட்டு வீரர்கள் ஆர்.எஸ். அம்ப்ரிஷ் மற்றும் தீபேஷ் தேவேந்திரன் ஆகியோருக்கு பாராட்டு தெரிவித்து கலந்துரையாடினார். உடன் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை முதன்மைச் செயலாளர் சத்யபிரத சாகு, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் துணைத் தலைவர் அசோக் சிகாமணி, தமிழ்நாடு கிரிக்கெட் சங்க தலைவர் டி.ஜே.சீனிவாசராஜ் ஆகியோர் உள்ளனர்.

### டி.என்.பி.எஸ்.சி. மூலம் தேர்வு செய்யப்பட்ட

# 9,801 பேருக்கு பணி நியமன ஆணைகள்

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இன்று வழங்குகிறார்

**சென்னை, பிப். 13-**

தமிழ்நாடு அரசின் தேர்வு முகமைகள் மூலம் தேர்வு செய்யப்பட்ட 9,801 பேருக்கு வெள்ளிக்கிழமை (பிப்.13) பணி நியமன ஆணைகள் முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்குகிறார்.

தமிழ்நாடு அரசின் தேர்வு முகமைகள் மூலம் தேர்வு செய்யப்பட்ட 9,801 பேருக்கு பணி நியமன ஆணைகள் வழங்குதல் அரசின் பணிகளில் தொய்வு ஏற்படாத வண்ணம், காலிப்பணியிடங்கள் அவ்வப்போது தமிழ்நாட்டின் அனைத்து தெரிவு முகமைகள் மற்றும் வாரியங்கள் மூலம் நிரப்பப்பட்டு வருகிறது. படித்த, தகுதி வாய்ந்த இளைஞர்களுக்கு அரசு மற்றும் தனியார் துறைகளில் வேலை வாய்ப்பினைப் பெற்று தரும் பணிகள் தமிழ்நாடு அரசால் தொடர்ந்து செவ்வனே மேற்கொள்ளப் பட்டு வருகிறது. அத்துடன், மாநில மற்றும் மத்திய அரசின் போட்டித் தேர்வுகளுக்கான பயிற்சிகளும் அரசால் வழங்கப்பட்டு வருகிறது.

அந்த வகையில், திராவிட மாடல் ஆட்சியில் இளைஞர்களின் வேலைவாய்ப்புக் கனவுகளை நனவாக்கும் தொடர் முயற்சியின் ஒரு பகுதியாக இன்று (பிப்.13) சென்னை, நேரு உள்விளையாட்டரங்கில் நடைபெறவுள்ள விழாவில், தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம், மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியம் மற்றும் ஆசிரியர் தேர்வு வாரியம் ஆகிய தேர்வு முகமைகள் மூலம் தேர்வு செய்யப்பட்ட 9, 801 பேருக்கு பணி நியமன ஆணைகளை முதல்வர் மு.க. ஸ்டாலின் வழங்க உள்ளார்.

மேலும், செனாய் நகரில் ரூ.62.50 கோடி மதிப்பீட்டில் அகில இந்திய குடிமைப் பணித் தேர்வுப் பயிற்சி மைய கட்டிடத்திற்கு அடிக்கல் நாட்டுதல் மற்றும் "எளிமை ஆளுமை" திட்டத்தில் கூடுதலாக எளிமைப்படுத்தப்பட்ட 50 சேவைகள் அறிமுகமும், அதைத் தொடர்ந்து, சென்னை செனாய் நகரில் ரூ.62 கோடியே 50 லட்சம் மதிப்பீட்டில் 500 தேர்வர்கள் தங்கிப் பயிலக் கூடிய வகையில் அனைத்து நவீன வசதிகளுடன் கூடிய அகில இந்திய குடிமைப் பணித் தேர்வுப் பயிற்சி மைய கட்டடத்திற்கு அடிக்கல் நாட்டி, "எளிமை ஆளுமை" முன்முயற்சியின் முதல் கட்டமாக பல்வேறு துறைகளைச் சேர்ந்த 10 முக்கிய சேவைகள் நெறிப்படுத்தப்பட்டு, எளிமைப்படுத்தப் பட்டுள்ளது. அதற்கு மக்களிடையே பெரும் வரவேற்பு பெற்ற நிலையில், தற்போது மேலும் கூடுதலாக எளிமைப் படுத்தப்பட்ட 50 சேவைகளை முதல்வர் அறிமுகப்படுத்துகிறார்.

தமிழ்நாடு அரசினால் நடத்தப்படும் அரசுப் பணிகளுக்கான போட்டித் தேர்வுகளுக்கு விண்ணப்பிப்பது, நுழைவுச் சீட்டு, பாடத்திட்டங்கள் பதிவிறக்கம், மாதிரி வினாத்தாள்கள் என அனைத்து விதமான நடைமுறைகளையும் கைபேசியிலேயே எளிதாகக் கையாளும் விதமாக "தேர்வுக்களம்" என்னும் கைபேசி செயலி அறிமுகப்படுத்தப்பட உள்ளது. இதில் மத்திய அரசின் பணிகளுக்கான போட்டித் தேர்வுகளின் விவரங்களையும் ஒரே இடத்தில் பெறும் வகையில் வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

அரசு ஊழியர்கள் செயற்கை நுண்ணறிவு, தரவு பகுப்பாய்வு, திட்டமேலாண்மை, தொடர்பாடல் உள்ளிட்ட திறன்களை மேம்படுத்திக் கொள்ள கட்டணமின்றி பயின்றிட பயிற்சிகள் வழங்கும் இணைய தளத்தை தொடங்கி வைத்து, அண்ணா நிருவாகப் பணியாளர் கல்லூரியின் அத்தியாவசியப் பணியாளர்களுக்கு அக்கல்லூரியின் வளாகத்திலேயே ரூ. 3 கோடியே 38 லட்சம் மதிப்பீட்டில் மூன்று அடுக்ககத்தில் எட்டு குடியிருப்புகள் கொண்ட கட்டடத்தையும் முதல்வர் திறந்து வைக்கவுள்ளார்.

இந்நிகழ்ச்சியானது, தமிழ்நாட்டைச் சார்ந்த இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்குவதற்கான அரசின் தொடர் முயற்சிகளின் ஒரு பகுதியாகவும், வேலைவாய்ப்பு முன்னேற்றத்தின் முன்னணி மாநிலமாகவும் தமிழ்நாட்டை உருவாக்கும் இலக்குடன், இளைஞர்களின் எதிர்காலத்திற்கான உறுதியான படியாக அமைவதுடன், தமிழ்நாடு அரசின் "வெல்வோம் ஒன்றாக" என்ற தாரக மந்திரத்துடன் இளைஞர்களின் வாழ்வினை உயர்த்துவதற்கான நிகழ்வாகும். இந்நிகழ்ச்சியில், துணை முதல்வர், அமைச்சர்கள், அரசு அலுவலர்கள் கலந்து கொள்ள உள்ளனர்.

### மத்திய பா.ஜ.க. அரசை கண்டித்து

# தமிழகம் முழுவதும் தி.மு.க. மற்றும் கூட்டணிக்கட்சிகள் ஆர்ப்பாட்டம்

**சென்னை, பிப். 13-**

மத்திய பா.ஜ.க. அரசை கண்டித்து தமிழ்நாடு முழுவதும் தி.மு.க. மற்றும் அதன் கூட்டணிக்கட்சிகள் ஆர்ப்பாட்டம் நடத்தின.



மத்திய பட்ஜெட்டில் தமிழ்நாட்டை வஞ்சித்ததாக பா.ஜ.க. மற்றும் அதற்கு துணை போகும் அ.தி.மு.க.வை கண்டித்து ஆர்ப்பாட்டம் நடைபெறும் என்று மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் அறிவிக்கப்பட்டிருந்தது. இதன்படி தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மாநகரங்களிலும், மத்திய, நகர, பேரூர் அளவில், தமிழ்நாடு முழுவதும் 1,500க்கு மேற்பட்ட இடங்களில் நேற்று கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

சென்னை சைதாப்பேட்டையில் மத்திய பா.ஜ.க. அரசு மற்றும் அதி.மு.க.வைக் கண்டித்து மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி (தி.மு.க. கூட்டணி) கட்சிகள் சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்று வருகிறது. இந்த ஆர்ப்பாட்டத்தில் காங்கிரஸ், வி.சி.க., சி.பி.எம்., சி.பி.ஐ., முஸ்லிம் லீக் உள்ளிட்ட கட்சிகள் கலந்துகொண்டன.



● முதல்வர் நல்வழிகாட்டுதலின்படி ராயபுரம் சட்டமன்றத் தொகுதி, மூலகொத்தளத்தில் வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின்கீழ் சிஎம்டிஏ சார்பில் கட்டப்பட்டு வரும் சமுதாய நலக்கூடத்தின் கட்டுமான பணிகளை துரிதபடுத்தும் வகையில் அமைச்சரும், சென்னை வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்து, பணிகளை விரைந்து முடித்திட ஒப்பந்ததாரர் மற்றும் பொறியாளர்களை அறிவுறுத்தினார். இந்த ஆய்வின்போது ராயபுரம் சட்டமன்ற உறுப்பினர் ஐட்ரிம்ஸ் ஆர்.மூர்த்தி, சி.எம்டி.ஏ. உறுப்பினர் செயலர்/முதன்மைச் செயலாளர் கோ.பிரகாஷ், மண்டலக் குழுத்தலைவர் பி.ராமுலு, மாவட்ட வருவாய் அலுவலர் டாக்டர் பால் பிரின்சிலி ராஜ்குமார், கண்காணிப்புப் பொறியாளர் பாலமுருகன் மற்றும் துறைச் சார்ந்த அலுவலர்கள் உடனிருந்தனர்.



● மறைந்த முன்னாள் முதல்வர் எம்.ஜி.ஆரின் 109-வது பிறந்த நாளை முன்னிட்டு மதுரை மாநகர் மாவட்ட தெற்கு 4- ம் பகுதி அ.தி.மு.க. சார்பில் பகுதி செயலாளர் முக்கூரான் தலைமையில் காமராஜர்புரம் பகுதியில் பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கி அ.தி.மு.க. தேர்தல் வாக்குறுதி துண்டு பிரசுரங்களை முன்னாள் அமைச்சர் செல்லூர் கே. ராஜூ எம்.எல்.ஏ. வழங்கினார். இதில் நிர்வாகிகள் வில்லாபுரம் ராஜா, எம்.எஸ்.பாண்டியன், ஆர். அண்ணாதுரை, பா.குமார், எஸ்.எஸ்.சரவணன், சண்முகவள்ளி, எஸ்.டி.ஜெயபாலன், பேராசிரியர் ஜெயபால், வி.பி.ஆர்.செல்வகுமார், ஜோசப்தனிஸ்லாஸ், எம்.எஸ்.செந்தில்குமார், கே.கலைச்செல்வன், ஐ.டி.விங்க் கவிச்செல்வம்தங்கம், கே.எஸ்.சுப்பு, மார்க்கெட் மார்நாடு மற்றும் ஆர்.போஸ், நாணிநல்லுச்சாமி, நாகரத்தினம், நாகேந்திரன், தினகரன், ராமர், ராமமூர்த்தி உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.